525

# கடவுளும்

# நாமும்

இ:31
N65
16441

S. Jayalakshmi
XI std C

# கடவுளும் நாமும்

*Imprimatur :*

+ JAMES MENDONCA

BISHOP OF TIRUCHIRAPALLI

திருச்சிராப்பள்ளி.

1965

இரண்டாம் பதிப்பு : 1964.
மூன்றாம் பதிப்பு : 1965.

-600 008.
164441
N65

# உள்ளிருப்பவை

## I பாகம் - நாம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மனிதன் | ... | 2 |
| 2. | பிறப்பு | ... | 5 |
| 3. | ஆதி மனிதன் | ... | 8 |
| 4. | ஆன்மா | ... | 9 |
| 5. | புத்தி | ... | 12 |
| 6. | மனசாட்சி | ... | 14 |
| 7. | அறியாமை | ... | 19 |
| 8. | தேவ வெளியீடு | ... | 21 |
| 9. | கடவுளின் பிரதிநிதிகள் | ... | 23 |
| 10. | உண்மை | ... | 25 |
| 11. | சத்தியம் | ... | 29 |
| 12. | பொய் சாட்சி | ... | 31 |
| 13. | வீண் தீர்மானம் | ... | 32 |
| 14. | புறணி | ... | 34 |
| 15. | மனது | ... | 39 |
| 16. | தீமை | ... | 41 |
| 17. | பாவம் | ... | 43 |
| 18. | ஆசாபாசம் | ... | 44 |


## — B —


| | | | |
|---|---|---|---|
| 1. | குணபான்மை–அதன் பொருள், அதன் மதிப்பு | ... | 52 |
| 2. | குணபான்மையின் வகைகள் | ... | 53 |
| 3. | குணபான்மையின் சிறப்பு | ... | 56 |
| 4. | குணபான்மையை அடைதல் | ... | 58 |
| 5. | குணபான்மையின் தொகுதி அமைப்பு புண்ணியப் பொதுக்கொள்கைகள் | ... | 61 |
| 6. | பிறர் சிநேகம் | ... | 67 |

பக்கம்

7. கருணையுடைமை ... 70
8. திடம் அல்லது தைரியம் ... 72
9. மிதம் அல்லது மட்டாயிருத்தல் ... 74
10. மிதமுடைமை ... 76
11. தன்னலம் மறத்தல் ... 78
12. சிறந்த ஒழுங்கு ... 79
13. விரோதமான தீய குணங்கள் ... 82
14. தீய குணபான்மை ஏற்படுவது ... 83
15. அகங்காரம் அல்லது தற்பெருமை ... 84
16. தலையான குற்றங்கள் ... 86
17 வேறு சில பழக்கங்கள் ... 89
18. நற்குணபான்மையின் வளர்ச்சி விசேஷ புண்ணியங்கள் ... 91
19. நல்லது. மேலானது, சிறந்தது ... 94
20. முயற்சியின் பலன் ... 97


## II பாகம் – C கடவுள்


1, கடவுள் ... 100
2. இறைவன் நம்மைப் படைத்தவர் ... 105
3. இறைவன் நம்மைக் காப்பவர் ... 121
4 ஆராதனை வணக்கம் ... 126
5 நினைவு ... 131
6. வாக்கு ... 134
7. செயல் அல்லது கிரிகை ... 136
8. இறைவன் நமது தீர்வையாளர் ... 138
9. சாவு ... 141
10. மறுமை வாழ்வு ... 147

# I நாம்

இறைவன் படைப்புகள் எண்ணற்றன; இணையற்றன! எழில் நிறைந்தன; இன்பம் அளிப்பன! அதனால்தான் இறையன்பர்களில் ஒருவர்.

"எத்தனை கோடி இன்பங்கள் வைத்தாய்
எங்கள் இறைவா!"—என்று பாடிப் புகழ்கின்றார்.

இப்படைப்புகளில் சிறந்தது மக்கட் படைப்பு. ஏனைய படைப்புகளுக்கு இல்லாமல் மக்களுக்கு மட்டுமே இறைவன் அமைத்துள்ள சிறந்த பகுதி பகுத்தறிவு. நல்லது இது. தீயது இது எனப்பகுத்து அறியும் திறனே பகுத்தறிவு எனப்படுகிறது. எனவே, இத்தகைய பகுத்தறிவுடைய மக்கள் தொகுதி, தம்மையும், தம்மைச்சுற்றி அமைந்துள்ள ஏனைய படைப்புகளையும் ஒப்பிட்டு அவற்றின் தன்மைகளை அறியவும், அவற்றிற்கும், தமக்கும் உள்ள வேறுபாடுகளை நுனித்தறிந்து, அதற்கேற்றவகையில் தமது வாழ்க்கையை வகுத்துக்கொள்ளவும் கடமைப்பட்டுள்ளது என்பது வெள்ளிடை மலை. இந்த அடிப்படையில் எழுகின்ற இயல்பான வினாவே "நாம் யார்" என்பதாகும். இதற்குரிய விடையும் அதன் விரிவும் பின்வரும் விஷயங்களால் தெள்ளிதில் உணர்த்தப்படும்.

## 1. நாம் யார்?

நாம் மனிதர். அதாவது மனதை உடையவர். மனதை உடையவன் மனிதன் என்னும் உண்மையை விளக்கும் இறைவனின் இணையற்ற படைப்பு. உலகில் உள்ள பல வகைப் படைப்புகளில் நாம் ஒரு வகையைச் சேர்ந்தவர்கள். கல் முதலியன திடப்பொருள்கள்; தண்ணீர், எண்ணெய் வகைகள் நீர்ப்பொருள்கள்; பிராணவாயு முதலியன வாயுப்

பொருள்கள்;வெள்ளி, ஈயம், இரும்பு முதலியன உலோகப் பொருள்கள்; செடி, கொடி, மர வகைகள் தாவரங்கள்; மீன் முதலியன நீர் வாழ்வன; விலங்கு வகைகள் நடப்பன; பூச்சி, புழு முதலியன ஊர்வன; பறவைகள் பறப்பன ஆகிய இவைகளும் இறைவனால் படைக்கப்பட்டவையே. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவை. இரு உயிருடன் வாழும் பிராணிகள் அனைத்தும் ஓரறிவு உயிர் முதல் ஐயறிவு உயிர் வகையில் அடங்குவன. ஆனால் பகுத்தறிவு என்னும் ஆறுவது உயிருடைய நாம் மக்கள் பகுதியைச் சேர்ந்தோராவோம்.

"மக்கள் தாமே ஆறறிவுயிரே!"—என்பது தொல்காப்பியம் கூறும் சான்று நம்மைப்போல உருவைக் (உடலை) கொண்டிராத படைப்புகளாகிய அருவப் (உடலற்ற) படைப்புகளும் உண்டு. இவைகள் தூய அருபிகள் (சம்மனசு) தீய அருபிகள் (பசாசு) எனப்படுவன இவர்களையும் இறைவனே படைத்தார். (தீய அருபிகளை அல்ல; ஆனால் அவர்களே தமது நடத்தையால் தீய நிலையைத் தேடிக்கொண்டனர்.)

# 1. மனிதன்.

## 2. மனிதன் என்றால் யார்?

நமது உடலைமட்டும் தனியாகப்பிரித்து அதை மனிதன் என்று சொல்ல முடியாது. ஏனெனில், உயிருடன் சேர்ந்து இயங்காத உடல் பிணமாகும். அதுபோலவே, உயிரை மட்டும் தனியாகப் பிரித்து அதை மனிதன் என்று கூறமுடியாது. ஏனெனில், உடலற்ற உயிர், உருவமற்ற அருவமாகும் (அருபி). எனவே, உடலையும் ஆன்மாவையும் உடையவனே மனிதன் எனப்படுவான். இவற்றுள் சில உறுப்புகள் குறைந்திருந்தாலும் மனிதன் மனிதனே! எடுத்துக்காட்டாக ஒருவனுக்கு கை, கால், மூக்கு, கண் முதலியவை குறைந்திருப்பினும் அவன் மனிதன்தான். ஏனெனில், மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான உறுப்புகள் அவனுக்கு இருக்கின்றன.

## 3. மனிதனை மனிதனாக்குகின்றவை யாவை?

உடலும், ஆன்மாவுமே மனிதனை மனிதனாக்குபவை. மற்ற உயிர் பொருட்கள் உடலுடன் இயங்குவன ஆயினும், அவற்றிற்கு ஆன்மாவும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் அவை மனிதனல்ல. மேலும் மனிதனுக்குப் புறத்தேயுள்ள நிலம், வீடு, ஆஸ்தி, சுற்றத்தார், உடுக்கும் உடை, அணியும் ஆபரணங்கள், உபயோகிக்கும் பாத்திரங்கள் முதலியன, ஒரு மனிதன், மனிதனாயிருப்பதற்கு அத்தியாவசியமானவையல்ல. ஆனால் இவை அவனது தனிப்பட்ட அல்லது சமூக வாழ்க்கைத்தரத்துக்கு ஏற்பக் கருவிகளாக அமைவனவைதவிர, வேறில்லை. எனவேதான் அவன் தன் கடைசி கதியாகிய வீடுபேற்றையடையும் முயற்சியில், மேற்கூறிய பொருட்கள் ஓரளவு அவனுக்குத் தேவைப்படலாமே தவிர, அத்தியாவசியமானவையல்ல. அவன் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து மனிதத் தன்மையை நிலைநாட்ட உதவுகின்றன இவையும் ஓரளவு அவசியமே.

## 4. மனிதனின் துவக்கம் யாது?

மனிதனின் துவக்கம் என்பதுபற்றி கூறவேண்டுமாகில் அவனது ஆன்மாவின் துவக்கம், உடலின் துவக்கம் ஆகியவற்றைத தனித்தனியே ஆராய்ந்து பார்க்கவேண்டும். மனிதனைத் தவிர, வேறுபட்டுள்ள தாவர உலகம், ஏனைய உயிருலகம் முதலியவற்றைக் கடவுள் உண்டாக்கியபோதே அவற்றின் இனப்பெருக்கத்தை உண்டாக்கும் சக்தியை, அற்புதமான விதமாக அவற்றுக்கு அளித்துள்ளார். அந்த முறையில் இம்மியும் தவறாது இன்றளவும் நடந்து வருவதை நாம் அறிவோம். இந்தப்புதிய படைப்புகளின் உயிரையோ, உடலையோ உண்டாக்குவதில் கடவுள் நேரடியாகப்பங்கு பெறுவதில்லை. எனினும் அவரது தெய்வீகப் பராமரிப்பு அவைகளுக்கு உண்டு. இதுபற்றியே "கருப்பையின் முட்டைக்கும், கல்லினுள் தேரைக்கும், விருப்புற்று அமுதளிப்பவர் இறைவன்"—என்னும் முதுமொழி நம்மவரிடையே வழங்கி வருகிறது. தத்துவ ஞானிகள் கண்டுரைக்கும்

உண்மையும் இதுவேயாகும். எடுத்துக்காட்டாக ஒருமாமரம், தன்னையொத்த மாமரத்தைத் தனது வித்தினால் உண்டாக்கும் சக்தி பெற்றுள்ளது. இவ்வாறே ஒவ்வொரு விலங்கும், பறவையும் தனது இனப்பெருக்கம் செய்யும் சக்தியால், அவற்றின் பரம்பரை அழியாது காத்து வருகிறது. இவை பிறந்து, வளர்ந்து, இனத்தைப்பெருக்கி, முதிர்ந்து, மடிந்து, அழிந்து போகின்றன. இவற்றின் உயிர் இறைவனிடம் போய்ச் சேருவதில்லை ஏனெனில், இவற்றுக்கு மறுவாழ்வு கிடையாது. எனவே, இவைகட்கு சிறந்த முறையில் துவக்கம் எதுவும் இருப்பதாகக்கூறமுடியாது. இவற்றின் துவக்கமும்முடிவும் கடவுளின் நித்திய நியதிக்குட்பட்டுவிளங்குவன. ஆனால் மனிதனின் இருபகுதிகளானஉயிர் அல்லது ஆன்மா உடல் இவற்றின் துவக்கம் வேறுபட்டது. எடுத்துக்காட்டாக உடலானது பெற்றோரின் ஒத்துழைப்பால் உருவாகி, வாழ்வுக்குப்பின் அழிந்து போகக்கூடியது. உயிர் அல்லது ஆன்மாவோ, இறைவனிடமிருந்து உண்டாகி, உடலுடன் சேர்ந்து குறிப்பிட்ட, காலவரையளவு அதில் தங்கியிருந்து, உடல் மாயும்போது, அதை விட்டுப் பிரிந்து, மறுபடியும் இறைவனிடம் போகவேண்டியது. எனவே, உடலின் துவக்கம் பெற்றோர். அதாவது ஆண், பெண் உடலுறவில் ஆணின் உயிர்ச் சக்தி அணு, பெண்ணின் உயிர்ச் சக்தி அணுவுடன் சேர்ந்து, கருவாகி, உருவாகிப்பிறகு சில மாதங்களுக்குப்பின் குழந்தையாகப் பிறக்கிறது. ஆனால் ஆன்மாவின் துவக்கம் பெற்றோர் அல்ல; கடவுளே யாவர். தாயின் உதரத்தில் உயிரணுக்கள் கருவாகும் நிலையில், கடவுள் ஒவ்வொரு கருவுக்கும், புதிது புதிதாக அவ்வப்போது 'தன் ஆவியின்—தன் உயிரின்—தன் சக்தியின், —ஒரு பகுதி என்று சொல்லக்கூடிய ஆன்மாவைப் படைத்து அதனுடன் இணைக்கிறார். இவ்வாறு மனிதனின் உற்பவத்தில், தானே நேரடியாகப்பங்கு பெறுகிறார். எனவே, மனிதப்படைப்பில், பெற்றோர், கடவுளுடன் ஒத்துழைத்து, தம்போன்ற புதிய மனிதப்பிறவியை உலகிற்கு அளிக்கின்றனர் என்பது தெளிவாகிறது. கடவுள் ஆதி மனிதனையும், பெண்ணையும் படைத்தபின் " நீங்கள் பலுகிப்பெருகுங்கள் " என்று

ஆசிர்வதித்துவிட்டாலும், அவர்கள் பெருக்கத்தின் ஒவ்வொரு உயிருக்கும் அவரும் ஒத்துழைக்கிறார் என்பதே உண்மை. ஏனெனில், ஆன்மாவைப் பெற்றோர் கொடுக்க முடியாது, காரணம், ஆன்மா, தெய்வீகச்சாயலில், தெய்வீகக்குணங்களில் பங்கு கொண்டதாக உண்டாக்கப்பட்டிருக்கிறது. எனவே, மனித ஆன்மா என்பது. புத்தியும், அறிவும். மனச்சுதந்திரமும் உடையதாய், தெய்வீகச்சாயலில் உண்டாக்கப்பட்டுள்ள, அழியாத ஒரு சித்துப்பொருள் ஆகும் என்பது தெளிவாகிறது.

### 5. மனிதனின் முடிவு யாது ?

மனிதனின் இருபெரும் பகுதிகளுக்கு இருவிதமான துவக்கம் இருப்பதுபோல, அவற்றிற்கு இருவிதமான முடிவு உண்டு. பெற்றோரின் ஒத்துழைப்பால் உண்டான உடலை விட்டு ஆன்மா பிரியும்போது உடல் சவமாகி அழிந்துவிடுகிறது. இறைவனால் படைக்கப்பட்ட ஆன்மாவோ அவரிடமே திரும்பவும் சென்று, அவரால் குறிக்கப்பட்ட இடத்தில் அவரைப்போலவே அழியாது வாழும்.

## 2. பிறப்பு

### 6. மனிதன் பிறப்பது ஒரு முறை மட்டும்தானா ?

ஆம், ஒருமுறைமட்டுமே. மனிதனின் ஆன்மா, மனிதக் கருவோடுமட்டும் ஒரே ஒருமுறைமாத்திரம் சேருமேயல்லாது, சிலருடைய கருத்துப்படி பல்வேறு உடல், அல்லது விலங்குகளின் பிறவியாகப் பிறப்பது இல்லை. பலமுறை இறந்து பிறப்பதுமில்லை. மனித ஆன்மா, மனித உடலோடுமட்டும் சேருமேயன்றி, வேறு எந்தவிதமான பொருளோடும் சேர முடியாது. இதனால் மறு பிறப்பு உண்டென்னும் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பது தெளிவாகிறது. மேலும் இந்தக் கொள்கை அபத்தம் என்பது பின்வரும் எடுத்துக்காட்டுகளால் விளங்கும்.

முந்தின பிறவியில் செய்த, நற்செயல், தீச்செயலுக்குத் தக்கதுபோல், உயர்ந்த தன்மையில் பிறப்போம், அல்லது விலங்குகளாய் பிறப்போம் என்கின்றனர். மறுபிறப்புக் கொள்கையர். இது உண்மையானல் நம் வீட்டுப் பசுவும், வீதியில் திரியும் நாயும், அழியாத ஆத்துமத்தை உடையதாயிருப்பதால், மாடும், ஆடும், நாயும், நரியும் நன்மை தீமைகளைச் செய்யக்கூடியவையாக இருக்கின்றன என்று சொல்லக் கூடுமா? ஆத்துமம் தனது புத்தி, மனது முதலிய தத்துவங்களையும் பயன்படுத்தி, அவைகளுக்கேற்ற முயற்சிகளைச் செய்வதற்கு அந்த விலங்குகளில் என்ன சாதனம் இருக்கிறது.

உலகில், எந்த நாட்டிலும், ஆடு, மாடு மிருக வர்க்கத்துக்கு நீதிமன்றம் வைத்திருப்பதாகத் தெரியவில்லையே; நமது மாடு பக்கத்து வீட்டுத் தோட்டத்தை அழித்துவிட்டால், மாட்டின் சொந்தக்காரராகிய நம்மையல்லவா நஷ்டத்துக்குப் பொருப்பாளியாக்குகிருன் பக்கத்து வீட்டுக்காரன்?

அன்றியும், உலகில் எல்லா மக்களும், மனிதனுக்கு அழியாத ஆத்துமம் இருக்கிறது. இறந்தபின் அவனுக்கு ஒரு வித வாழ்வு இருக்கிறது என்று, அவனை அடக்கம் செய்யும் முறையிலும். அவனுக்காகச் செய்யும் பிரார்த்தனையிலும் வெளிப்படுத்துகிறார்கள். ஆனல் யாராகிலும் இறந்த மாட்டுக்கும் பன்றிக்கும் நைவேத்தியம் செய்து அடக்கம் செய்ததாக நாம் கேள்வியுற்றதில்லையே. பொது அறிவு இந்தக் கொள்கைக்கு மாருக அல்லவா இருக்கிறது!

மேலும், இந்தக் கொள்கையின்படி மனிதன் விலங்குகளையும், கீரை வகைகளையும் உண்ணும்போது, தனக்கு முன் வாழ்ந்த மக்களை உண்ணுகிருன் என்று சொல்ல வேண்டும். அதுபோல, நாமும் ஒருநாள் மற்றவர்களுடைய உணவாவோம். மனிதப் பிறவியின் இந்த மகத்துவந்தான் என்னே!

இறுதியாக, தத்துவசாஸ்திரத்தில் ஒரு நியாயம்:— கண்டிப்புள்ள ஒரு வஸ்துவில், பொருள் (Mater) மாத்திரை (Form) என, இரு காரியங்கள் உண்டு. மாத்திரை தான் ஒரு வஸ்துவை, இந்த வஸ்து எனப்பிரித்துக் குறித்து காட்டுகிறது. ஆட்டுக்கும், மாட்டுக்கும் அதே சடலப்பொருள் தான். விஞ்ஞான முறைப்படி அவைகளை ஆராய்ந்து பார்த்தால், இரண்டு உடலிலும் ஏறக்குறைய அதே விதப் பொருட்கள்காணக்கிடக்கும். ஆனால், ஆடுமாடாகாது மாடு ஆடாகாது. இந்த வேறுபாடு பொருளில் இல்லையென்றால், வேறு எங்கிருந்து வருகிறது? மாத்திரையிலிருந்து. மாத்திரையினிமித்தமே அவைகளுக்குள் உயிர், குணம் முதலியவைகளில் எல்லா வேறுபாடும் ஏற்படுகிறது.

வெளித்தோற்றத்தில் இருந்து வருகிறது என்று சிலர் எண்ணக்கூடும். பொன், மரம், கல் இவைகளால் ஆகிய குதிரைப்பொம்மைகள் இருக்கின்றன. அவைகள் வெளித்தோற்றத்தில் ஒரே சாயல், ஒரே நிறம், ஒரே உயரம். ஆனால் பொன்னைக் கல் என்றும், கல்லை மரமென்றும் சொல்லுவோமா? இல்லை, ஏன்? ஒவ்வொரு பொருளின் மாத்திரையும் அதை வேறு பொருட்களிலிருந்து பிரித்து, அதற்கு ஓர் தனிப்பட்ட வஸ்துவுக்குரிய சுபாவத்தைக் கொடுக்கிறது.

இந்த மாத்திரை என்னும் 'Form' ஒரு வஸ்துவுக்கு விசேஷ சுபாவத்தைக் கொடுக்கவேண்டுமானால், மாத்திரையும் பொருளும் ஒன்றாய்க்கூடி ஒரே ஒரு வஸ்துவாக வேண்டியது அவசியம். கூண்டில் கிளி இருக்கிறது. ஆகையால் கூண்டும், கிளியும் சேர்ந்து ஒரே வஸ்துவாகிறதில்லை. கிளி கூண்டின் மாத்திரையில்லை.

மனிதனில் ஆத்துமந்தான் மாத்திரை; சரீரம் பொருள். ஆத்துமமும், சரீரமும் ஒன்றாய்க்கூடி மனிதனாகிய ஒருவஸ்து ஆகிறது. ஆத்துமமும், சரீரமும் இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்தபின், தனித்தனியே இருக்கும்போது இவைகளுக்கு இல்லாத குணங்கள், இப்போது புதிதாய் மனிதனிடத்தில் பிறக்கின்றன. ஆத்துமமே சரீரத்துக்கு உயிர், அசைவு, உணர்ச்சி முதலியவற்றைக் கொடுக்கிறது.

ஆகையால். அதே ஆத்துமம் பற்பல பொருளோடு (Matter) ஒன்றிக்கக் கூடுமானால், எப்போதும் அதே வஸ்துவைத்தான் பிறப்பிக்கும். காரணம், ஆத்துமம் சரீரத்தின் மாத்திரையாயிருக்கிறது; பொருள் ஒரே தன்மையுள்ள சடலப் பொருளாயிருக்கிறது. எனவே, மானிட ஆத்துமம், குறிப்பாக ராமனுடைய ஆத்துமம் வேறு பிறப்பில் பன்றிக்குள் நுழைந்து, அந்தப் பன்றியின் உடலோடு ஒன்றித்தாலும், வெளித்தோற்றத்திற்கு பன்றிபோலிருந்தாலும், உண்மையில் அந்தப் பன்றி ராமன்தான்.

எனவே, மறுபிறப்பில் ஆத்துமம் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, பல ஜென்மங்களில் பிறந்து, பாவப் பரிகாரம் அடைகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

# 3. ஆதிமனிதன்.

## 7. ஆதிமனிதன் உண்டான விதமென்ன ?

ஒரு ஆணும், பெண்ணும் சேர்ந்து, மூன்றாவது ஆளுக்குத் தேவையான உடலை உருவாக்க முடியுமானால், மேற்படி ஆண், பெண் இருவருக்கும் உள்ள உடல் எங்கிருந்து வந்தது? என்னும் கேள்வி எழுவது நியாயமே! உலக மக்கள் யாவரும் சரித்திரப் புத்தகமாக ஏற்றுக்கொள்ளும், பைபிள் எனப்படும் வேதாகமம் கூறுவதாவது:—' ஆண்டவராகிய கடவுள், மனிதனைக் களிமண்ணால் உருவாக்கி, அவன் முகத்திலே ஜீவ ஆவியை ஊத மனிதன் ஜீவாத்துமாவானான்'' —"அப்போது ஆண்டவராகிய கடவுள் ஆதாமுக்கு அசந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் அப்படியே தூங்கிக் கொண்டிருந்தபோது தேவன் அவனுடைய விலாவெலும்புகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு, அதை எடுத்த இடத்தைச் சதையினால் அடைத்தார். பின்னும் ஆண்டவராகிய கடவுள் ஆதாமிடத்தில் எடுத்த விலா எலும்பை ஒரு ஸ்திரியாக உண்டாக்கி அந்தப் பெண்ணை ஆதாமிடம் கொண்டு வந்தார்''. (ஆதி 2/7 21, 22) பிறகு அவர்கள் பலுகிப் பெருகும் வரத்தை அவர்களுக்கு அளித்தார். இதனால் மனுக்குலம் வளர்ச்சியடையத் துவங்கியது.

சிலர் நினைப்பதுபோல, மனிதன் கடலிலிருந்தோ, ஆகாயத்திலிருந்தோ, மரஞ்செடிகொடிகளிலிருந்தோ, மனிதனுடைய கற்பனையிலிருந்தோ பலதரப்பட்ட மக்கள் குறிப்பிட்ட தேவனின் உறுப்புகளிலிருந்தோ உற்பத்தியாவதில்லை. மனித ஆன்மா, மனித கருவோடு சேர்வது தாயின் உதிரத்தில் தவிர வேறு எங்கும் இல்லை. எனவே, மேற்கண்டவை அபத்தமான கொள்கைகளாகும்.

# 4. ஆன்மா

## 8. மனித ஆன்மா என்பது என்ன?

மனிதனின் உயிர்ச் சக்தியே ஆன்மா எனப்படும். அவனை வாழவைக்கும் உயிர் ஊற்று. அவன் உயிருடன் இயங்கச் செய்யும் விசை. அவன் உணர்வதும், அறிவதும் புது புது காரியங்களைக் கண்டு பிடிப்பதும் இந்த சக்தியால் தான்.

## 9. ஆன்மாவின் தன்மை யாது?

ஆன்மா திடப்பொருளுமல்ல, நீர்ப்பொருளுமல்ல. ஆவியென நாம் இதை அழைப்பினும், இது வாயுப் பொருளுமல்ல. ஐம்புலன்களால் அறியக்கூடியதுமன்று. விஞ்ஞான மேதைகளின் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டது. தெய்வீக ஆவியின் சாயலில், இறைவனால் நேரடியாக உண்டாக்கப்படுவதால், இது உலக விஷயங்கட்கு உட்பட்ட பொருளல்ல. இறைவனைப்போல உருவமற்றது. துவக்கமுண்டு. ஆனால் நித்தியத்திற்கும் அழிவற்றது.

## 10. மனிதனிடம் ஆன்மா எங்கே இருக்கிறது?

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே ஒரு ஆன்மா மட்டுமே உண்டு. அது அவனது உடல் முழுவதும் பரவி இருந்து அவனை இயங்கச் செய்கிறது. சிலர் நினைப்பதுபோல ஆன்மா, மனிதனுடைய இருதயத்திலோ, அல்லது தலையிலோ அல்லது வேறு எந்த உறுப்பிலோ அடங்கியிருப்ப

தில்லை. எத்தகைய விஞ்ஞானக் கருவியாலும் கண்டுபிடிக்க முடியாது. உடல் முழுவதும் ஒரே ஆன்மா இருப்பினும், அதன் ஒவ்வொரு பாகத்திலும் (சிறிதோ, பெரிதோ, அவ்வான்மாவின் ஒரு பகுதியாட்டுமின்றி முழு ஆன்மாவும் இருக்கிறது. எப்படி யென்பதை பின்வரும் எடுத்துக்காட்டு நன்கு விளக்கும். முகம் பார்க்கும் கண்ணாடி முழுமையாக இருக்கும்போது முகம் முழுவதும் தெரிகிறது. அதே கண்ணாடி பல துண்டுகளாக உடைந்தபின் ஒரு துண்டில் முகத்தைப் பார்த்தால் அதிலும் முகம் முழுவதும் தெரிகிறது. இதுபோலவே ஆன்மாவின் இயக்கமும் அமைந்துள்ளது. எனினும், உடலின் எந்தப் பாகத்தையாவது துண்டிக்கும்போது, அந்த பாகமானது மற்ற உறுப்புகளை விட்டுப் பிரிக்கப்பட்டாலும், அவனது ஆன்மா அவனை விட்டுப் பிரிவதில்லை. ஆனால் தலை, இருதயம் முதலிய முக்கிய உறுப்புகளை அவனது உடலிலிருந்து பிரிக்கும்போது, எஞ்சியுள்ள பாகங்களுக்கு உயிர் நாடியைக் கொண்டு செல்லும் இரத்த ஓட்டம் 'தடைப்படுவதால் அவனது ஆன்மாவும், அவனைவிட்டுப் பிரிந்துபோகும்.

## 11. ஆன்மாவுக்கும் உயிருக்கும் உள்ள வேறுபாடுகள் யாது?

ஐம்புலன்களின் தொழிலாகிய பார்வை, கேள்வி, சுவை, வாசனை, உணர்ச்சி முதலியவற்றிற்குத் தேவையானதை அளிக்கும் சக்தியை உயிர் எனகிறோம். இதை ஐயறிவு என்று சொல்லலாம். இவை மிருகங்களுக்கும் இருப்பதால் இதை மிருக உயிர் என்றும கூறலாம். ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் என்னும் தொகுப்பில், மேற்கூறிய ஐயறிவுடன், ஆறுவது அறிவான பகுத்தறிவைக் கொடுக்கும் சக்திதான் ஆன்மா. இது மக்களுக்கு மட்டுமே உண்டு.

"மக்கள் தாமே ஆறறிவுயிரே"—என்பது தொல்காப்பியம். இந்தப் பகுத்தறிவின் காரணத்தால் மக்களுக்கும், மிருகங்களுக்கும் வேறுபாடு உண்டு.

12. மக்களுக்கும் விலங்குகட்கும் உள்ள பொது வான தத்துவங்கள் யாவை?

புலன்களின் சக்தியே தத்துவம் எனப்படும். கண், காது, வாயு, மூக்கு, மெய் என்னும் ஐந்து உறுப்புகளின் தொழிலாகிய பார்வை, கேள்வி, சுவை, வாசனை, உணர்தல் ஆகியவை மனிதனுக்கும், விலங்குகட்கும், பொதுவானவை யாகும். இவற்றை உடலுக்கடுத்த புல உணர்ச்சிகள் என லாம். இத்துடன் விருப்பு, வெறுப்பு என்னும் குணங்களும், அவற்றின் விளைவான கொள்ளுதல், தள்ளுதல் என்னும் செயலகளும் பொதுவானவை.

13. விலங்கினங்கட்கு இல்லாத, மக்களுக்கு மட்டுமே உள்ள தத்துவங்கள் யாவை?

புத்தி, மனது என்னும் ஆன்மாவின் உத்தர தத்துவங் கள், நம்மைப் படைத்த கடவுள் புத்தியுள்ளவர். மனது அல்லது சித்தம் உள்ளவர். இந்த இரு தெய்வீக தத்துவங் களில் நாம் பங்குபெற்று அவரது சாயலாக உண்டாக்கப் பட்டிருக்கிறோம். கடவுள் தன்னை முற்றிலும் அறிகிறார். அவரது புத்தியில் பங்குபெற்றிருக்கும் நாம் அவரை ஓரளவு அறிய முடியும். விலங்கிணங்களால் அறியமுடியாது. கடவுள் தன்னை அளவற்றவிதமாக நேசிக்கிறார். ஏனெனில் அவர் அளவற்ற நன்மைத் தனமுடையவராயிருக்கிறார். அவரது சித்தத்தில் பங்குகொண்ட நாம், அவரை அதிகமதிகமாய் நேசிக்க முடியும். விலங்கினங்கட்கு அவரது நன்மைத்தனம் தெரியாது. ஆனபடியால், அவை அவரை நேசிக்க முடியாது.

14. கடவுள் இந்த தத்துவங்களை மனிதனுக்கு எதற்காகக் கொடுத்துள்ளார்?

தன்னை அறியக்கூடிய தததுவமான புத்தியையும், விரும்பககூடிய தத்துவமான சித்தத்தையும் அவனுக்குக் கொடுத்து, அவன் கடவுளை அறந்து, விருயபி, அவருக்காக

இவ்வுலகில் வாழ்ந்து, அவருக்கு விருப்பமான ஊழியத்தில் ஈடுபட்டு, அவர் அளிக்கும் பேரின்ப பாக்கியத்தை நித்தியத்துக்கும் அனுபவிக்கவே, மனிதனுக்கு இந்த தத்துவங்களைக் கடவுள் கொடுத்துள்ளார் எனவே அவன் தனக்கு விசேஷ விதமாக கொடுக்கப்பட்டுள்ள புத்தியைச் சரிவரப் பயன்படுத்தி அவரை அறியவும் சித்தத்தின் செயல்திறனாகிய சுதந்திரத்தை தகுந்த முறையில் உபயோகித்து, அவரையும், அவரது நன்மைத்தனத்தையும் விரும்பவும், உடலில் ஆன்மா சேர்ந்துள்ள காலம்வரை, இயன்றளவு, அயராது முயற்சித்து, அவரது விருப்பத்தை நிறைவேற்ற உழைக்க கடமைப்பட்டிருக்கிறான்.

# 5. புத்தி

## 15. புத்தி என்பது யாது?

அறியவும், யோசிக்கவும் சக்தியுடைய தத்துவம் புத்தி எனப்படும்.

## 16. புத்தியின் அலுவல் என்பது என்ன?

உண்மையும் நன்மையுமானதை அறிந்து, பொய்மையிலிருந்து, உண்மையை வேறுபடுத்துவதும் தீமையிலிருந்து நன்மையை வேறுபடுத்துவதும், புத்தியின் அலுவலாகும்

## 17. புத்தியைக்கொண்டு நாம் அறியக்கூடிய உண்மைகள் யாவை?

(1) உலகிலுள்ள பல்வேறு படைப்புகளையும், அவற்றின் இடையே மனிதனுக்குள்ள மதிப்பையும், பதவியையும் அறியக்கூடும்.

(2) உலகம் தன்னில்தானே உண்டானதல்ல; கடவுளாலேயே உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும் என்று கண்டு பிடிக்கக்கூடும்.

(3) கடவுள் எத்தன்மையானவர். அவர் சகல இலட்சணமும் அதிகாரமும், நன்மைத்தனமும் உள்ளவர் என்று அறியலாம்.

(4) மனிதன் கடவுளின் படைப்புப் பொருளானதால் அவருக்கு ஊழியம் செய்யவும், அவர் சட்டத்துக்குக் கீழ்ப்படியவும் கடமைப்பட்டிருக்கிறன் என்று அறியக்கூடும்.

(5) கடவுளுடைய சட்டம் எது, செய்யத்தக்கது என்ன, செய்யத்தகாதன எவை என்று கண்டுபிடிக்கலாம்.

## 18. உண்மை அல்லது சத்தியம் என்றல் என்ன?

கண், அல்லது காது முதலிய புலன்கள் வழியாக அறிந்த ஒருபொருள் அல்லது விஷயத்தின் தன்மை, குணம் முதலியவற்றைக் கூட்டாமலும், குறைக்காமலும், உள்ளதை உள்ளவாறே கண்டுணர்ந்து மனதில் இருத்துவது உண்மை எனப்படும். மேற்கண்டவாறு அறிந்துகொண்ட உண்மையைக் கூட்டாமலும், குறைக்காமலும் அப்படியே எடுத்துரைப்பது உண்மை பேசுவதாகும்.

## 19. உண்மை எத்தனை வகைப்படும்?

புலன்களைக்கொண்டு நாமாகவோ அல்லது பிறர் மூலமாகவோ அறியும் இயல்பான விளக்கங்களை இயற்கை உண்மை எனலாம். புலன்களுக்குப் புலப்படாத, இயற்கைக்கு மேலான விஷயங்களை அறிவோமானல் அவை இயற்கைக்கு மேலான உண்மை எனப்படும்.

## 20. இயற்கை உண்மைகளை எவ்வாறு அறியலாம்?

இயற்கை உண்மைகளை சரித்திரம், விஞ்ஞானம் முதலியவற்றின் உதவியால் அறியலாம்.

**21. இயற்கைக்கு மேலான உண்மைகளை எவ்விதம் அறியலாம்?**

தேவ உதவியைக்கொண்டு, பின்காணும் வழிகள் மூலமாக இயற்கைக்கு மேலான உண்மைகளை அறியலாம். அவையாவன:

(1) மனச்சாட்சியின் குரலொலி
(2) தெய்வ வெளியீடு
(3) பாரம்பரை
(4) கடவுளால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள்

# 6. மனசாட்சி

**22. மனசாட்சியின் குரலொலி என்பது யாது?**

தக்கதை செய்து, தகாததை விலக்குவது மனிதனின் கடமை என்று நமக்குரைக்கும், மனதினுள் அடங்கிய ஓர் அறிக்கை இது.

**23. மனசாட்சியின் குரலொலி வெறும் அறிக்கை தானா?**

இல்லை; நாம் கீழ்ப்படிய வேண்டும் என்று உணரும் வண்ணம் மனசாட்சி எடுத்துக்காட்டும் ஒரு கைகாட்டி.

**24. மனசாட்சியால் உதிக்கும் உணர்வு வேறு ஏதேனும் உண்டா?**

தகுதியானதைச் செய்யும்போது நமக்குத் திருப்தியும், மன மகிழ்ச்சியும் உண்டாகிறது. தகாதவற்றைச் செய்யும் போது நமது குற்றத்தை உணர்ந்து, நம் மனதில் திகில் உண்டாகும்படி செய்கிறது.

"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்";
"மனக் குரங்கை மாற்றலரிது"

என்னும் முதுமொழிகள் இதை உணர்த்துகின்றன.

25. இவ்வித உணர்ச்சிகள் உதிப்பதற்குக் காரணம் என்ன ?

கடவுள் நாம் செய்கிறதைப் பார்க்கிறூர்; நன்மை செய்யும்பொழுது அவருக்கு நம்மீது விருப்பமும், தீமைசெய்யும்பொழுது வெறுப்பும் உண்டாகிறது என்பதை நாம் உறுதியாய் அறிந்திருப்பதுதான் இதற்குக் காரணம்.

26. தீமை செய்யும்பொழுது மனதில் சஞ்சலம் ஏற்படுவதின் காரணம் என்ன ?

ஏனெனில், கடவுளின் கற்பனையை மீறியிருக்கிறோம் என்று நமக்குத் தெரிகிறது. இந்தக் குற்றத்துக்காக நம்மை ஒருக்கால் தண்டிப்பார் என்று அஞ்சுகிறோம்.

27. மனிதரைப்பற்றிய பயமும் நமக்கு ஏற்படுவது உண்டா ?

ஆம். நமது செயலைப்பற்றி வெட்கப்பட்டு, மனிதர் நம்மைக் கண்டுபிடித்துக் குற்றம் சாட்டித் தண்டிப்பார்களோ என்று அஞ்சுவது உண்டு. ஆனால் இது மனசாட்சியின் குரலொலியல்ல. நமது பாவம் மறைவானாலும், ஒருவரும் அறியக்கூடாததாயினும், பாவத்தால் கடவுளுக்கு நம் மீது வெறுப்பும், அதனால் நமக்கு அவரது தண்டனையும் வருமென்று அஞ்சும்படி செய்வது மனசாட்சி.

28. மனசாட்சியின் குரலொலி எவ்விதம் ஏற்பட்டுள்ளது ?

கடவுளே, அதை நமது ஆன்மாவில் அமைத்திருக்கிறூர். அவரது கட்டளையை அனுசரிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம் என்று நாம் அதைக்கொண்டு உணர வேண்டுமென்பது அவரது சித்தம்.

29. மனசாட்சி யாருக்கு உரைக்காது ? ஏன் ?

கடவுளை அறியாத, அல்லது கடவுள் இல்லை என்று சாதிக்கும் நாஸ்திகனுக்கும் மனசாட்சி இத்தன்மையாக

உரைப்பதில்லை. ஆயினும், அவனும் நம்மைப்போல் நன்மை தீமைகளைப்பற்றி உணரக்கூடும். ஆனால் அவ்வுணர்ச்சிகளின் உட்பொருள் அவனுக்கு விளங்காது. கடவுளை விசுவாசியாமல் அவற்றைக் கண்டுபிடிக்க இயலாது.

## 30. இந்த வேறுபாடு ஏன்?

ஏனெனில் நமக்குப் பொறுப்பும், கடமையும் உண்டென்று மனசாட்சி கூறுகிறது. பொறுப்பு என்றால் பிறர் மீதுள்ள உத்திரவாதம்; பிறருக்கு நாம் ஏதோ கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை கடமை உணர்த்துகிறது. ஒருவன், மற்றொருவனுக்குத் தன்மீது உண்டான உரிமையின் காரணத்தால், அவனுக்கு தான் கடமைப்பட்டவனாக வேண்டும் அவன் மீது தனக்கு கடமை உண்டென்று உணரலாம். இது மனசாட்சியல்ல. ஏனெனில், மனசாட்சி மற்றொரு மனிதன் மட்டில் அல்ல; கடவுள் மட்டில் நமக்கு உள்ள உத்திரவாதம், கடமையைக் குறிக்கிறது.

மேலும், கடவுளைப்பற்றி ஒன்றுமே அறியாதவன் தண்டனைக்கு அஞ்சினால், அது மனிதரால் வரக்கூடிய தண்டனையைப்பற்றியே யன்றி, கடவுளால் விதிக்கப்படும் தண்டனையைப்பற்றி இராது. மனசாட்சியோவென்றால் தேவகோபத்தின் பயத்தை நமக்கு வற்புறுத்துகிறது.

## 31. இதனால் நாம் அறிவதென்ன?

கடவுளைப்பற்றிய விசுவாசமின்றி (கடவுள் உண்டு என்று நம்பாது இருந்தால்) மெய்யான கடமையை உணர்த்தும் 'அறநெறி வாழ்க்கை'— என்பது இருக்கவே முடியாது. கடவுளின்றி நமது அறநெறி வாழ்க்கை, பயனுள்ள வாழ்வு நமக்கு விருப்பத்தை அளிக்கும் ஒரு வாழ்க்கையாகவோ, அல்லது சமூகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு வழக்கமாகவோ அமையுமேயன்றி வேறாகாது.

கடவுளை நீக்கின மனசாட்சி, நீதிபதி இல்லாத நீதிமன்றத்துக்கு ஒப்பாகும்.

32. எல்லா மனிதர்களிடமுள்ள மனசாட்சி ஒரே விதமானதா?

இல்லை, சிலரிடத்தில் அதிகத் தெளிவாயும், திறமையுள்ளதாகவும் இருக்கிறது. வேறு சிலரிடம் மந்தமாகவும் திறமை குன்றியதாகவும் இருக்கிறது.

33. இந்த வேறுபாட்டுக்குக் காரணம் யாது?

பயிற்சியும், பழக்கங்களும் இந்த வேறுபாட்டுக்கு முதன்மையான காரணம். சரியான முறையில் பயிற்சிபெற்று, நல்வழியில் நடக்க விருப்பமுள்ளவர்களுக்கு மனசாட்சியின் குரலொலி வெகு தெளிவாய்க் கேட்கும். நன்முறையில் பயிற்சி பெருதவர்களுக்கும், தீய நடத்தையைப்பற்றிய எச்சரிக்கை இல்லாதவர்களுக்கும் அது தெளிவற்றதாயும், குறைந்த ஒலியுடனும் கேட்கும். ஏனெனில் சாதாரணமாய் அவர்கள் அதைக் கவனிப்பதும் இல்லை. உற்றுக்கேட்பதுமில்லை.

34. 'தக்கது இது, தகாதது இது' — என்று நிதானிப்பதில் எல்லோருடைய மனசாட்சியும் ஒரேவிதமாக (மாறுபாடின்றி) கூறுகிறதா?

மிக முக்கியமான விஷயங்களில், எல்லோருடைய மனசாட்சியும் ஒரேவிதமாகத்தான் தீர்மானிக்கிறது. ஆனால், சில நுட்பமான விஷயங்களைப்பற்றி அனைவருடைய மனசாட்சியும் ஒத்திருப்பதில்லை.

35. இந்த வேறுபாடு உண்டாகக் காரணம் என்ன?

யோசிக்காத குறையினாலும், அல்லது ஒரு வழக்கத்தை உண்மைக் கொள்கையாகப் பாவித்துக் கொள்வதினாலும் இந்த வேறுபாடு உண்டாக விசேஷ காரணமாகிறது.

36. இதை சில எடுத்துக்காட்டுகளினால் விளக்குக.

நாகரிகமில்லாத சில முரட்டு ஜாதியார், தங்களிடம் அகப்பட்டவர்களை மிகவும் கொடுமையாகத் தண்டிக்கிறார்

கள். வேறு சிலர் திருடுவதையும், கொள்ளையடிப்பதையும் தொழிலாகக் கொள்கிறார்கள். சிலர் நரபலி இடுகிறார்கள்; நர மாமிசத்தையும் புசிக்கிறார்கள்; வேறுசிலர் பொய் சொல்வதும், பிறரை வஞ்சிப்பதுமே தொழிலாயிருக்கிறார்கள். ஆனால் இவற்றில் எதையாகிலும் தப்பிதம் என்று அவர்கள் எண்ணுவதில்லை.

## 37. இவர்களுடைய எண்ணம் தவறானது என்று நமக்கு எப்படித் தெரியும்?

நமது புத்தியைச் சரிவர உபயோகித்து ஆழ்ந்து யோசித்துப் பார்ப்போமானால் மேற்கூறிய செயல்கள் எல்லாம் தீயவை என்று நமக்குப் புலப்படும். நாகரீகமடைந்த மக்கள் இவற்றைக் கண்டுணர்ந்து, இந்த தீய வழக்கங்களை ஒழித்துவிட்டார்கள். குரூரச் செயல்களைச் செய்யும் நாகரிகமற்ற மக்கள்கூட, அவர்கள் செய்வது தவறு என்று நாம் அவர்களுக்குக் கற்பித்தால் தங்களுடைய நடத்தை தவறுதலானதென்று தாங்களே உணர்கிறார்கள்.

## 38. மனசாட்சி வளர்ச்சி அடையக்கூடியதா?

ஆம். நல்லது எது, கெட்டது எதுவென்று அதிகத் தெளிவாய் அறியப் பிரயாசைப்படுவதாலும், மனசாட்சி நமக்குக் கூறுவதை உற்றுக்கேட்டு, அதன் ஏவுதல்படி நடக்கிற பழக்கத்திலும் மனசாட்சி அடையக்கூடும்.

## 39. நல்லது இது, கெட்டது அது என்று நாம் ஐயமற அறிவதற்குச் செய்யவேண்டியது யாது?

நம்மைவிட நல்லவர்கள் என்னும்படியான மக்களுடன் நெருங்கப் பழகுவது இதை அறிவதற்கேற்ற சிறந்த வழியாகும். அவர்கள் ஏதேனும் ஒரு செயல் தவறு என்று சொன்னால், நமக்கு அது அப்படிப்பட்டது என்று ஏற்கனவே தெரியாவிட்டாலும், இப்போது அது அவர்கள் கூறுவது போல் தவறுதான் என்று உணர்வோம். நாம் நெருங்கிப்

பழகும் அந்த நல்லோர்கள், எப்போதும் எச்சரிக்கையுடன் நடந்து வருகின்றனர் என்பதைக் காணும்போது, நாமும் அவ்விதமே நடக்க விருப்பமும், தூண்டுதலும் நமக்கு உண்டாகும்.

40. மற்றவர்கள் தவறு செய்யும்போது நாம் நினைக்கவேண்டியது என்ன?

அவர்களுடைய தவறு இருவிதத்தில் ஏற்படக்கூடும். ஒன்றில் தேவ சட்டத்தை அவர்கள் அறியாதிருக்கலாம். ஆகையால் அதை அவர்களுக்குச் சொல்லிக் காட்டுதல் அவசியம். அல்லது தேவ சட்டத்தை அறிந்தும் மனம் பொருந்தி அதை மீறுகிறார்கள் என்று சொல்லவேண்டும்.

# 7. அறியாமை

41. ஏதேனும் ஒரு செயல் கெட்டது என்று அறியாமல் அதைச்செய்தால், அது அவர்களுக்குப் பாவம் ஆகுமா?

அந்தச் செயல் கெட்டதுதான்; ஆனால் சுத்தஅறியாமை அல்லது களங்கமற்ற தன்மை, அந்தச் செயலுக்கு காரணமானது பற்றி, அது அவர்களுக்குப் பாவம் ஆகாது.

42. களங்கமற்ற தன்மை என்றால் என்ன?

ஒருவன் ஏதேனும ஒரு செயலைச் செய்யும்பொழுது அது கெட்டதாயிருந்தாலும், அவன் அதை அறியாமல், உண்மையில், தான் செய்வது சரியானது என்று மனதில் எண்ணி, மனதுக்கு வஞ்சகமில்லாமல் செய்வதுதான் களங்கமற்ற குணம் எனப்படும்

43. சுத்த அறியாமை என்பது யாது?

தனனுடைய அறியாமையைச் சற்றேனும் அறியாத தன்மைதான் சுத்த அறியாமை எனப்படும். அத்தகைய

மனிதன் மெய்யாகவே. உண்மையை அறியவில்லை. ஆனால் தன் உள்ளத்தில் அது தனக்குத் தெரியுமென்று நினைக்கிறான்.

44. தான் செய்வது தவறாயிருக்கலாம் என்கிற சந்தேகத்தோடு ஒருவன் அதைச்செய்தால் அது பாவம் ஆகுமா?

பாவந்தான்; ஏனெனில் சந்தேகம் ஏற்பட்டவுடன் சந்தேகத்தை நீக்கிக்கொள்ளவேண்டிய கடமை அவனுக்கு உண்டு. மற்றவர்களிடம் கலந்து பேசி உண்மையை அறிந்துகொள்ளவேண்டும்.

45. சந்தேகம் ஏற்பட்டபோது, அதைப்பற்றி விசாரியாமல் இருப்பது பாவமா?

ஆம். அந்தப் பாவம் அசட்டைத்தனம் எனப்படும். இவ்விதம் விசாரித்து அறியாத குறையினால் ஏற்படும் சகல குற்றங்களுக்கும் அவன் பொறுப்பாளியாகிறான். ஏனெனில், நம்மில் ஒவ்வொருவரும், நமக்கு தெரிந்திருக்கும் நியாயப்படி நடப்பதுமன்றி, நமக்குத் தெரியாதவைகளை ஆராய்ந்து அறியவும் கடமை உண்டு.

46. ஒருவன் தான் செய்வது சரி என்று நினைத்து ஒரு தீயசெயல் செய்கிறான்; செய்தபின் அது தவறு என்று தெரியவருகிறது. அதற்கு அவன் பொறுப்பாளியாவானா?

கடந்துபோன அந்த செயலுக்கு அவன் பொறுப்பாளியல்ல; ஆனால் அதே செயலை மீண்டும் செய்வானாகில் அந்தக் குற்றம் அவனைச் சாரும்.

47. மனவஞ்சகமின்றி அல்லது சுத்த அறியாமை யினால் செய்த தீய செயலுக்காகக் கடவுள் தண்டிப்பாரா ?

அவர்களுடைய அறியாமை நீங்காதிருக்கும் வரை செய்த செயல்களுக்காக அவர்களைத் தண்டிக்க மாட்டார். தவறு என்று தெரிந்ததும் மனதாரச் செய்யும் தீச்செயலுக் காக மட்டுமே கடவுள் தண்டிப்பார்.

## 8. தேவ வெளியீடு

48. தேவ வெளியீடு என்றால் என்ன ?

மக்கள் மோட்ச வீட்டை அடைவதற்குரிய வழிவகைக ளாக, இறைவன் மக்களுக்குத் தேவையான உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். இவ்விதம் இறைவனால் வெளிப் படுத்தப்பட்ட சில உண்மைகள்சுபாவத்துக்கு மேலானவை. இவற்றை தேவ வெளியீடு அல்லது தேவ அறிக்கை என் கிறோம்.

49. தேவ வெளியீடு அவசியமா ?

ஆம்; மனிதன் தன் சுயபுத்தியை பயன்படுத்தி, சுபாவ முறைக்கடுத்த சில மூல சத்தியங்களையும், சில பொதுக் கடமைகளையும் அறிந்துகொள்ளக்கூடும். இதை ஒருவரும் மறுப்பதில்லை. உதாரணமாக சிருஷ்டிகர் ஒருவர் உண்டு. அவரே ஆதியும் அந்தமுமாகிய தனி முதற்கடவுள் என்று நம்மைச் சுற்றியிருக்கும் படைப்புப் பொருட்களைக்கொண்டு நமது சுபாவ புத்தியின் வெளிச்சத்தால் நிச்சயமாய் அறிய லாம்.

ஆனால், தேவ அறிக்கையின்றி சுபாவத்துக்கு மேலான சத்தியங்களையும், கடமைகளையும் கடவுளின் தன்மையையும் அறிந்துகொள்ள இயலாது. உலகம் உண்டான நாளிலி ருந்து மனிதனின் வாழ்க்கையே இதற்குச் சான்று. உலக

மக்கள் எத்தனை தவறுகளையும், அபத்தங்களையும் கடைப்பிடித்து வந்தார்கள்! சிலர் படைக்கப்பட்ட சூரிய சந்திரனைக் கடவுள் என்று கருதினார்கள். சில ஜாதி மக்கள் முதியோராகிய பெற்றோரைக் கொன்றார்கள் வேறு சில மக்கள் கடவுளுக்குப் பலியென தங்கள் பாலர்களைக் கொன்றார்கள். கிரேக்கர், ரோமர் முதலியவர்கள் மிகுந்த நாகரீகமுடையவர்களாக இருந்தபோதிலும் எத்தனையோ தகாத காரியங்களைத் தேவ வணக்கம் என்று நடத்தி வந்தனர். நமது நாட்டு மக்கள் இடையில் இருக்கும் மூடக்கொள்கை, நம்பிக்கை, ஆசாரம் இவைகளைப்பற்றி நமக்குத் தெரியும்.

## 50. இதிலிருந்து நாம் அறிவதென்ன ?

மனிதன் சகலவித இச்சைகளுக்கும் இணங்கும் தன்மையுள்ளவன். அதனால் சொந்தப் புத்தியின்படி விட்டுவிட்டால், சுபாவ வேதத்துக்கடுத்த கடமைகளைக்கூட முழுதும் தெளிவுடன் அறியமாட்டான். ஆதலால், தப்பு தவறு ஒன்றுமில்லாமல், கலப்பில்லா உண்மையை அறிந்து கொள்ள கடவுள் தாமே தமது தேவ அறிக்கையைப் போதிக்க வேண்டும்.

மேலும், சுபாவத்துக்கு மேலான முறைக்கடுத்த எந்த உண்மையையும், கடமையையும் மனிதன் சுயபுத்தியினால் அறிந்துகொள்ள முடியவே முடியாது. சுபாவ முறைக்கடுத்த எல்லா சத்தியங்களையும் கடமைகளையும் கண்டறியவே, அவனால் முடியாது என்று கவனித்தோம்; அப்படியானால் சுபாவத்துக்கு மேற்பட்டவைகளைப்பற்றி அவன் அறிவது எப்படி? எனவே, தேவ அறிக்கை இன்றியமையாதது என்பது தெளிவாகிறது.

## 51. தேவ அறிக்கையை நாம் விசுவசிக்க வேண்டுமா ?

கடவுள் நமது இறைவன். அவருக்குச் சித்தமான போது அவர் உண்மைகளையும், சத்தியங்களையும் வெளிப்படுத்தக்கூடும் அவருடைய திருச்சித்தம் என்று அறிந்த

வுடனே நாம் அதற்கு இணங்க வேண்டும். தவறாத வரத்தையுடைய சத்திய சொரூபியாகிய சர்வேசுரன் நமக்கு ஒரு சத்தியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்று தெரிந்தால் போதும். அதுவே, நாம் அந்த சத்தியத்தை விசுவசிப்பதற்குப் போதிய காரணமாகும். கடவுள் நம்மை ஒரு போதும் ஏமாற்றமாட்டார் அவர் ஏமாறுகிறவரும் அல்ல. இவ்வுலகில் விஞ்ஞானிகளும், தத்துவ சாஸ்திரிகளும் கூறுகிறார்கள் என்று நாம் எத்தனை காரியங்களை ஏற்றுக்கொள்ளுகிறோம். நாம் உண்ணும் உணவு இரத்தமாக மாறி, நமக்கு வளர்ச்சியைக் கொடுக்கிறதே, இதை சரிவர அறிந்த மக்கள் எத்தனை பேர்? இதை யாராகிலும் மறுக்கிறார்களா?

ஆகையால், அறிவுக்கெட்டாத சத்தியங்களை சர்வேசுரன் மனிதருக்கு அறிவித்தல்கூடும். மனிதன் அந்த சத்தியம் சர்வேசுரனால் அறிவிக்கப்பட்டதென அறிந்த உடனே, அதை விசுவசிக்க கடமைப்பட்டிருக்கிறான்.

## 52. பாரம்பரை என்றால் என்ன?

ஏட்டில் எழுதப்படாமல் செவி வழிச் செய்தியாகத் தொன்று தொட்டு, இன்றுவரை பழக்கத்தில் இருக்கும் உண்மைகள் பாரம்பரை எனப்படும். ஒவ்வொரு மதத்தினரும் கடவுளைப்பற்றியும், அவருக்கு வழிபாடு செய்தலைப் பற்றியும் அதற்குரிய வழிவகைகளையும் தம் முன்னோரிடமிருந்து கேட்டறிந்து, பகுத்தறிவுக்கு விரோதமில்லாத வகையில், அவ்வுண்மைகளை நடைமுறையில் வம்சவாரியாக கையாண்டு வருவதே பாரம்பரை எனப்படும்.

# 9. கடவுளின் பிரதிநிதிகள்

## 53. கடவுள் பேரால் பேசும் பிரதிநிதிகள் யார்?

சேசுக்கிறிஸ்து, வரலாற்றில் காணப்படும் உலகில் தலை சிறந்த உத்தமர், எதார்த்த மனதுடன் வரலாற்றைக் கூர்ந்து கவனிக்கும் எவனும் வேதநூலில் அறியும் உண்மை இது—கிறிஸ்து ஓர் திருச்சபையை நிறுவினார் என்பது.

அவர் தம் வாழ்நாளில் மக்களுக்கு சத்தியங்களைப் போதித்தார். தம்மைப் பின்பற்றி வந்த சீடர்களிலிருந்து பன்னிருவரைப் பொறுக்கி எடுத்தார்; தனிப் பயிற்சி கொடுத்தார். பல சிறந்த வரங்களையும் அவர்களுக்கு அளித்து, எங்கும் சென்று போதிக்கக் கற்பித்தார். "பிதா என்னை அனுப்பினது போல, நானும் உங்களை அனுப்புகிறேன்"—(அரு. 20/21) அந்தப் பன்னிரு அப்போஸ்தலர்களில் (அனுப்பப் பட்டவர்கள்) சிமோன் இராயப்பரைத் தலைவராக நியமித்தார். அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் போய் போதிக்க வேண்டும். அவர்களுக்குச் செவி சாய்க்காதவர்கள் தண்டிக்கப்படுவார்களென்று அச்சுறுத்தினர். "நீங்கள் உலகமெங்கும் போய் எல்லா சிருஷ்டிகளுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சணியமடைவான். விசுவசியாதவனோ ஆக்கினைத் தீர்வையிடப்படுவான்." (மாற்கு 16/15) இறுதியாக, அவர் தாம் நிறுவிய திருச்சபையோடு எக்காலமும் இருப்பதாக வாக்குறுதி கொடுத்தார், "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அனுசரிக்கும்படி அவர்களுக்குப் போதியுங்கள். இதோ! நான் உலகம் முடியுமட்டும் எந்நாளும் உங்களோடு கூட இருக்கிறேன் என்று திருவுளம் பற்றினர்". (மத். 28/20)

கிறிஸ்துநாதருடைய போதனைகளைப் பரவச் செய்யவும் அவைகளுக்கு உண்மையான விளக்கம் கொடுக்கவும். ஓர் அதிகார பூர்வமுள்ள அமைப்பு ஒன்று இருந்தாலே தவிர, அவரது வாழ்நாள் உழைப்பும், சகல மனிதரின் ஈடேற்றம் கருதிய அவரது இறப்பும் வீண் என்றே சொல்லவேண்டியிருக்கும். அந்த அதிகாரபூர்வமுள்ள அமைப்புத்தான் அவரால் நிறுவப்பட்ட திருச்சபை. கிறிஸ்துவிடம் நேரடியாக அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்களும், அவர்களது வழித்தோன்றல்களாகிய கத்தோலிக்க மேற்றிராணிமார்களும், குருக்களும், திருச்சபையின் காணும் தலைவரான புனித பாப்பரசரும், உண்மைகளையும் சத்தியங்களையும் போதிக்கும் இறைவனின் பிரதிநிதிகள் ஆவார்கள்.

# 10. உண்மை

## 54. உண்மையை அறிய அனைவருக்கும் உரிமை உண்டா ?

கடவுள் சகல மனிதருக்கும் பொதுத் தந்தையாவார். உண்மையை அறியும் தத்துவமான புத்தியை மனிதன் பெற்றிருக்கிறான். எனவே, கடவுளைப்பற்றியும், அவருக்கு வழிபாடு செய்யும் வழி வகைகளைப்பற்றிய உண்மைகளையும் அறிய அவனுக்கு உரிமையுண்டு. மனிதன் பிறருடன் சேர்ந்துவாழும் சமூக உறுப்பினர். அதனால் மனம், மொழி, மெய் எனப்படும் மூவித செயற்படு கருவிகளிலும் அவன் உண்மையுடையவனாயிருக்க வேண்டும்.

## 55. நாம் உண்மை பேசக் கடமையா ?

நாம் பேசும்போதெல்லாம், உண்மையென்று உணர்ந் திருப்பதையே உரைக்கக் கடமை; பொய் என்று நமக்குத் தெரிந்திருந்தும், அதை உண்மை போல் கூறுவது தவறு.

## 56. இந்தக்கடமை ஏற்படுவானேன் ?

முதலாவது; பொய் பேசுதல், நமது தத்துவங்களைத் தீய வழியில் உபயோகித்தலாகும். இரண்டாவது; பிற ருக்கு அதனால் அநியாயம் செய்கிறோம்.

## 57. பொய் பேசுதல் நமது தத்துவங்களை தீயவழியில் செலுத்துதல் என்று கூறுவது ஏன் ?

நாம் உண்மையை அறியவும். தவறானதை நீக்கவும் நமக்குப் புத்தி என்னும் தத்துவத்தைக் கடவுள் அளித் திருக்கிறார். நமது மனதிலுள்ளதைப் பிறருக்கு வெளிப் படுத்துவதற்காகவே, பேசும் திறமை நமக்குக் கொடுக்கப் பட்டுள்ளது. ஆகையால் மனதிலுள்ளதை உள்ளதுபோல் வெளிப்படுத்துவது உண்மை அல்லது மெய் பேசுதல் எனப்படும். தவறானதைச் சிந்திப்பது புத்தியைத் தீய வழி

யில் செலுத்துவதாகும். அதுபோல் பொய் பேசுதல்; பேசுந் திறமையைத் தீய வழியில் பயன்படுத்துவதாகும்.

## 58. பொய் பேசுதலே, பிறருக்கு அநியாயம்செய்தல் என்று கூறுவதேன் ?

ஏனெனில் நாம பேசும்போது உண்மையைச் சொல்வோம் என்றுதான் பிறர் எதிர்பார்க்கிறார்கள். நாம் பொய் சொல்வோம் என்கிற சந்தேகம் அவர்களுக்கு இல்லை. ஆகையால் நாம் பொய் சொன்னால் அவர்களை ஏமாற்று கிறோம். இது அவர்களுக்குத் தீங்கு புரிவதல்லவா? அதனால்தான் பொய் சொல்லுதலைப் பிறருக்கு அநியாயம் செய்தல் என்று கூறுகிறோம்.

## 59. ஒருவர் சொல்லுவதை ஒருவர் நம்பவேண்டியதில்லை என்று அனைவரும் ஒப்பந்தம் செய்து கொண்டால் அதனால் ஏற்படும் கெடுதி என்ன ?

அப்படியானால், மக்களுக்குள் பெருங் குழப்பமும், எல்லாம் தாறுமாறாகவும் இருக்கும்; பிறருடன் பேசிப் பழகுவது மிகுந்த தொந்தரவாக இருக்கும். இதனால் வாயை மூடிக்கொண்டிருப்பதே உத்தமமாகும். ஆனால், பிறருடன் பேசிப் பழகுவதற்காக நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் பேசும் திறமை வீணாகும்.

## 60. சகலவிதமான பொய்மொழிகளும், எத்தகைய வேறுபாடுமின்றி கெட்டவை எனலாமா ?

பொய் சொல்வதினால் நமக்கு லாபம் வந்தாலும் சரி; பிறருக்கு நன்மை உண்டானாலும் சரியே. பொய் என்றால் எல்லாப் பொய்யும் கெட்டதுதான். ஆனால் பிறருக்குத் தீங்கு விளைவிக்கிற பொய் அதிகக் கெட்டது. பொய்மொழியால் உண்டான தீங்கு எவ்வளவு கனமானதோ, அதற்குத் தகுந்தாற்போல் பொய்யின் கனமும் அதிகரிக்கிறது.

**61. அதிகக் கனமான பொய் எது?**

யாருக்காவது அதிகமான உடல் தீங்கு அல்லது ஆன்மக்கேடு, உடைமை அல்லது நன்மதிப்புக்குக் கனமான தீங்கு வருவிக்கக்கூடிய பொய், அதிகக்கனமானது.

**62. இதை சில எடுத்துக்காட்டுகளால் விளக்குக.**

நாம் பொய் சொல்வதினால் ஒருவனுக்கு ஏதேனும் ஆபத்து அல்லது தீங்கு நேரிட்டால், அவனுடைய உடைமை அல்லது உத்தியோகம் போவதற்குக் காரணமானால், அவன் பிறரை விரோதிக்கவும், அவர்கள்மேல் நம்பிக்கையற்றுப் போகவும், அல்லது அவனுக்கும் மற்றொருவனுக்குமுள்ள சிநேகம் விட்டுப்போகக் காரணமானால்; நாம் சொன்ன பொய்யினால் ஒருவனுக்கிருந்த மதிப்பைக் கெடுத்துக் குற்றமில்லாதவன் தண்டனை அனுபவிக்கக் காரணமானால், இத்தகைய பொய்களெல்லாம் மிகவும் கனமானதாகும்.

**63. தன்னைப் பாதுகாக்கும் பொருட்டுப் பொய் சொல்லக் கூடாதா?**

அநியாயமான துன்பத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ளுவதற்காகக்கூட நாம் பொய் சொல்லவே கூடாது.

**64. நாம் வெளியிடக்கூடாத மிக முக்கியமான இரகசியம் ஒன்று இருக்கிறது; அப்போது என்ன செய்வது?**

அதைப்பற்றிக் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல மாட்டோம் என்று மறுத்துவிடலாம்; அல்லது அதைவிட்டுவிட்டு வேறு செய்திகளைப்பற்றிப் பேசலாம் அல்லது, "உனக்கென்ன அதைப்பற்றி? உன் வேலையைப் பார்!"—என்று நம்மைக் கேட்டவனை நோக்கிக் கூறலாம்.

**65. நாம் மறுமொழி சொல்ல மறுப்பதினாலேயே, இரகசியம் வெளியாகிறதாயிருந்தால், என்ன செய்வது ?**

அத்தகைய சமயங்களில் அந்த இரகசியம் நமக்குத் தெரியாதுபோல் பதில் உரைக்க வேண்டும்.

**66. ஆனால் உண்மையிலேயே அந்த இரகசியம் நமக்குத் தெரிந்திருக்க, இவ்விதம் கூறுவது பொய்யல்லவா ?**

அது பொய்யல்ல; கொஞ்சம் விவேகமுடைய எவனும் அது விஷயம் கேட்கத்தகாதென்றும், பதில் கூறத் தேவையில்லை என்றும் உணர்ந்துகொள்வான். அப்படிப்பட்ட விஷயத்தில் ஒருவன் பதில் உரைக்கும் வகையிலிருந்து, சொல்லும் மறுமொழி "நழுவலான பேச்சு"—என்று மற்றவன் தெரிந்துகொள்வான்.

குறிப்பு:— குற்றவாளி தான்குற்றம் செய்திருந்தாலும் குற்றமற்றவனாக வழக்காடலாம். அவனுடைய கருத்து யாதெனில்; "நான் என் குற்றத்தை ஒப்புக்கொள்ள மாட்டேன்; நான் குற்றம் செய்ததாக நீதிமன்றத்தில் ருசுப் படுத்தட்டும்"—என்பதாகும்.

இரகசியமான ஒரு விஷயத்தைப்பற்றிக் கட்டாயமாய் பதில் சொல்ல நேரிடும்போது, "இல்லை, எனக்குத் தெரியாது"—என்கிற மொழிகள் "நான் பிறருக்கு அதை வெளிப்படுத்தக்கூடிய விதமாய் அறியவில்லை"—என்று பொருள் படும்.

**67. இரகசியத்தை வெளியிட நமக்கு இஷ்டமில்லாதபோதெல்லாம், இவ்விதமாய் பதல் உரைக்கலாமா ?**

கூடாது; மிகவும் கனமான பெரிய விஷயங்களில் இரகசியத்தை வெளியிட்டால், கடவுளுக்கும், பிறருக்கும் அல்

லது நமக்கும் அநியாயம் நேரிடக்கூடுமான சமயங்களில், ஏதாவது பதில் சொல்லித்தான் தீரவேண்டியதானால்மட்டுமே மேற்கூறியவிதம் பதில் உரைக்கலாம்.

**68. தாங்கள் அறிந்த இரகசியங்களை வெளியிடாதிருக்கக் கடமைப்பட்டவர்கள் யார்?**

(1) கத்தோலிக்கக் குருவானவர், பாவசங்கீர்த்தனத்தில் அறிந்தவைகளை வெளியிடக்கூடாது.

(2) வக்கீல் அல்லது வைத்தியன் தன் தொழில் மூலமாய் அறிந்த விஷயங்களை வெளியிடலாகாது.

(3) அரசாங்க அலுவலர் தம் அலுவலகத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தக்கூடாது.

(4) வெகு இரகசியமாக வைத்துக்கொள்ளும்படி நம்மிடம் சொன்ன கனமான விஷயங்களை ஒருவருக்கும் வெளியிடக்கூடாது.

## 11. சத்தியம்

**69. நாம் கொடுத்த வாக்கை மீறுதிருக்கவும், அதன்படியே நடக்கவும் கடமையா?**

நாம் உறுதிமொழி அளித்தபடி நடக்கக் கடமைதான்; ஆனால் நாம் வாக்களித்த காரியம் வேறொருவனுக்குக் கெடுதி அல்லது பாவத்துக்குக் காரணமாகிறதாகப் பிற்பாடு தெரியவந்தால் அந்த வாக்குப்படி நடக்கக் கடமையல்ல; அதற்கு மாறாக வாக்கை மீறிப் போகக் கடமையுண்டு.

**70. சத்தியப்பிரமாணமாய் சொன்ன காரியங்களில் தவறலாமா?**

ஒருக்காலும் தவறக்கூடாது. ஏனெனில் சத்தியம் செய்யும்போது, நாம் சொல்வது மெய். முற்றிலும் மெய்யானது, யாதொரு கலப்பும் இல்லை என்பதற்கும், அல்லது நாம்

செய்வதாக வாக்களிக்கும் காரியங்களைக் கட்டாயம் செய்து முடிப்போம் என்பதற்கும், கடவுளையே சாட்சியாகக் கூறுகிறோம். ஆகையால், சத்தியத்தை மீறுவது, கடவுளுக்கு அவசங்கை, அவமதிப்பான பெரும் பாதகமாகும்.

## 71. தீய காரியங்கள் ஏதேனும் செய்வதாகச் சத்தியம் செய்திருந்தால் என்ன செய்வது?

அத்தகைய சத்தியம் ஒருபோதும் செய்திருக்கக் கூடாது. ஆகையால் அதன்படி நடக்கவும் கூடாது.

குறிப்பு :—(1) இரகசிய சபைகளில் செய்யப்படும் சத்தியங்கள் இத்தகையானவை. அவ்விதமான சபைகளில் இருந்து விலகிக்கொண்ட பிறகு, அந்தச் சபையில் இரகசியமாய் அறிந்த விஷயங்களை மேலான நன்மையின் பொருட்டன்றி யாருக்கும் வெளியிடக்கூடாது. ஆனால், அந்த சபையில் கொடுத்த குருட்டுக் கீழ்ப்படிதலின் வார்த்தைப்பாட்டை அனுசரிக்க சிறிதேனும் கடமையில்லை. அவ்விதமான வார்த்தைப்பாட்டை ஒருக்காலும் கொடுத்திருக்கலாகாது.

(2) கற்புக்கு அல்லது நீதிக்கு விரோதமாக நடக்கக் கொடுத்த வாக்கை அனுசரிக்கக் கடமையில்லை.

## 72. உண்மையை விளம்பரப்படுத்திப் பரவச்செய்ய அனைவருக்கும் உரிமையுண்டா?

உண்டு "யான் பெற்ற பேறு பெருக இவ்வையகம்" என்னும் பொன்மொழிப்படி நாம் அறிந்த உண்மைகளை நமது சமூக மக்களுக்கும், ஏன்? உலக மக்களுமே அறியும்படிச் செய்ய உரிமையுண்டு. ஏனெனில், இது மனிதனின் அடிப்படை உரிமைகளில் ஒன்று. ஆனால் இந்தப் பிரசாரத்தால் பிற சிநேகக் கடமையையும் அனுசரித்து, பிறருக்கு வருத்தமோ, இடறலோ ஏற்படாதபடி கவனிக்கவேண்டும். இதனால் உண்மையை மறைக்கவேண்டும் என்பது கருத்தல்ல; ஆனால், அதை எடுத்துரைக்கும் விதம் விவேகமுள்ளதாக இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, பிறருடைய

தவறுகளை எடுத்துக் கூறும்போது உள்ளத்தைப் புண் படுத்தக்கூடிய கடினமான வார்த்தைகளையோ, அந்தத் தவறுகளைக் கைக்கொண்டுள்ளவர்களின்மீது மிதமிஞ்சின ஆத்திரத்தையோ கையாளக்கூடாது.

73. உண்மையைப் பிரச்சாரம் செய்வதை யாரும் தடுக்கலாமா ?

காலம், இடம், முதலிய வசதிகளைப் பொருத்தமட்டில் உரிமையாளர் சில கட்டுத்திட்டம் பண்ணலாமே தவிர வேறு எந்த தனி ஆளோ, சமூகமோ, தலைவர்களோ தடுக்க உத்தரவில்லை.

# 12. பொய்சாட்சி

74. பேசுவதில் ஏற்படும் பொய்யைத்தவிர வேறு விதமான பொய் வகை உண்டா ?

உண்டு. பொய்சாட்சி சொல்வது வேறு வகையான பொய்யாகும். இது உண்மைக்கு எதிரான பொய் என்றும் கூறப்படும்.

75. பொய்சாட்சி ஆவதென்ன ?

வேண்டுமென்று பொய்யான காரியங்களைச் சொல்லி விட்டு, அவை உண்மை என்று சகலரும் நம்பும்படிப் பிரசித்தமாய் கடவுள் பேரால் சத்தியம் செய்வது பொய் சாட்சியாகும்

76. பொய்சாட்சி சொல்லுவது எப்படிப்பட்ட பாவமாகும் ?

பொய்சாட்சி சொல்லுகிறவன் கடவுளை அவமானப் படுத்துகிறான். உள்ளபடி அவன், தான் சொல்லும் பொய்க்கு சத்திய சொரூபியாகிய கடவுளை உடன் கூட்டாளியாக அழைக்கிறான். ஆகையால் பொய்சாட்சி சொல்லுவது கனமான பாவம்.

### 77. பொய்சாட்சி சொல்லுகிறவர்கள் யார் ?

பஞ்சாயத்துக்கு முன்பாக, நீதி மன்றத்தில் நீதிபதிக்கு முன்னிலையிலும், பொய்யான சங்கதியைமெய்யானதென்றும் மெய்யானதைப் பொய்யானதென்றும், வேண்டுமென்று கடவுள் பெயரால் சத்தியம் செய்கிறவர்கள்.

### 78. பொய்சாட்சி சொன்னவனுடைய கடமை என்ன?

தான் சொன்னது பொய் என்று அவன் பிரசித்தமாய் தெரியப்படுத்துவதோடுகூட, தன்னால் பிறருக்கு வந்த நஷ்டத்தை ஈடு கட்டவும் கடமை உண்டு.

## 13. வீண் தீர்மானம்

### 79. வீண் தீர்மானம் ஆவதென்ன ?

(1) தக்க முகாந்தரமின்றி அற்ப சொற்ப அடையாளத்தைக் கொண்டும்,

(2) ஒருவன் இன்னென்ன குற்றங்களைக் கட்டிக் கொண்டானென்றும், அல்லது இன்னென்ன தீய குணமுள்ளவனென்றும்,

(3) மனது பொருந்தி,

(4) மனதுக்குள்ளேயே உறுதியாகத் தீர்ப்பு செய்வது வீண் தீர்மானமாகும்.

### 80. வீண் தீர்மானம் செய்வது பாவமா ?

பிறர் தன்னை மதிக்கவேண்டுமென்று எதிர்பார்க்க ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டு. அயலார்மீது சரியான ஆதாரமின்றி, மனதுக்குள்ளேயே உறுதியாகத் தீங்கு நினைக்கிறவன் அந்த உரிமையைப் பறித்துக்கொள்ளுவதனால், நீதிக்கும், பிறர் சிநேகத்துக்கும் விரோதமான

பாவம் கட்டிக்கொள்ளுகிறன். "ஒருவரையும் குற்றவாளிகளாகத் தீர்க்காதேயுங்கள்". (லூக். 6/37) என்பது கிறிஸ்துவின் பொன்மொழி.

### 81. அது எப்படிப்பட்ட பாவம்?

மேற்கூறிய நான்கு காரியங்கள் எல்லாம் கனமான விஷயத்தில் ஒருங்கே சேர்ந்திருந்தால், அவ்வித வீண் தீர்மானம் கனமான பாவமாகும். இந்த நான்கில் ஏதேனும் ஒன்று குறைந்தால் கனமான பாவமாகாது.

### 82. வீண் தீர்மானம் செய்கிறவர்கள் யார்?

(1) தக்க காரணமின்றி, மனது பொருந்தி பிறர்மீது மன வெறுப்புக்கு இடங்கொடுக்கிறவர்கள்,

(2) பிறத்தியான் ஒரு கிரிகை செய்யும்போது உதவாத நோக்கத்தோடு அதைச் செய்தான் என்றும்,

(3) அவனுடைய நியாயங்களைக் கேட்காமல் அவனைக் குற்றவாளி என்றும்,

(4) அவன் ஒரு குற்றத்தைச் செய்ததினாலே அதை வழக்கமாய்ச் செய்வான் என்றும் தீர்மானிக்கிறவர்கள்.

### 83. கெடுதலான சந்தேகம் என்றால் என்ன?

தக்க காரணமின்றி, பிறனுடைய நடத்தையைப்பற்றி வீண் சந்தேகத்துக்கு மனது பொருந்தி இடம் கொடுக்கிறது.

### 84. பிறரைப்பற்றிய வீண் தீர்மானம் செய்யாமல், அவன்மீது தக்க முகாந்தரமின்றி தவறான சந்தேகத்துக்கு இடம்கொடுத்தால் பாவமா?

இதில் தவறுவது சாதாரணமாய் அற்ப குற்றமாக இருக்கும்.

85. பிறர் மனதிலே கெட்ட அபிப்பிராயம் கொள்ள நமக்கு வரக்கூடிய ஆபத்துகளை நீக்கி எச்சரிக்கையாக இருக்கும்படி சிலஏற்பாடுகளைச் செய்துகொள்வது பாவமா ?

இல்லை. அது குற்றமாகாததுமின்றி, புத்திசாலித்தனமாக இருக்கும். உ-ம் அவர்களிடம் அதிகப் புழக்கம் இல்லாது இருப்பது.

## 14. புறணி

86. புறணி என்றால் என்ன ?

(புறம்=வெளி) பிறனுக்குப் பின்னாலேயும், அவனுக்குத் தெரியாமலும், அவன்பேரில் குற்றங்குறைகளைச் சொல்லி அவனுடைய கீர்த்தியைக் கெடுப்பது புறணி எனப்படும்.

87. எத்தனைவிதமாகப் புறணி பேசக்கூடும் ?

(1) பிறர்மீது பொய்யான குற்றங்களைச் சுமத்துவதினாலும்,

(2) அவனுடைய இரகசியமான குற்றங்களைத் தெரியாதவர்களுக்கு வெளியாக்குவதாலும் புறணி பேசக்கூடும்.

88. ஒருவன்மீது பொய்யான குற்றங்களைச் சுமத்துவது எப்படிப்பட்ட பாவம் ?

அது பிறர்சிநேகத்துக்கும், நீதிக்கும் விரோதமான பாவந்தான். ஆனால் அவனுக்குக் கனமான நஷ்டம் அல்லது அவகீர்த்தி உண்டானால் கனமான பாவமாகும்.

89. பிறர்மீது பொய்யான குற்றங்களைச் சொன்னவர்கள் செய்யவேண்டியதென்ன ?

(1) அவர்கள் தங்கள் குற்றத்துக்குப் பரிகாரமாகத் தாங்கள் பிறர் மீது சாட்டியது பொய்யென்று அனைவரும் அறியும்படி தெரிவிக்கவேண்டும்.

(2) பிறருக்கு விளைவித்த நஷ்டத்தைத் தங்களால் கூடியமட்டும் ஈடுசெய்யவேண்டும்.

## 90. ஒருவனிடம் உண்மையாகவே குற்றங்குறைகள் இருக்கும்போது அவைகளை வெளிப் படுத்தலாமா ?

அதைப்பற்றித் தெரியாதவர்களுக்கு, அவைகளை ஏற்ற காரணமின்றி வெளிப்படுத்தக்கூடாது அவைகளை வெளிப்படுத்துகிறவன், அநியாயமாய் பிறருடைய கீர்த்தியைக் கெடுப்பதால், நீதிக்கும், பிறர்சிநேகத்துக்கும் விரோதமான பாவம் கட்டிக்கொள்கிறுன்.

## 91. இது எப்போது கனமானதாக அல்லது அற்பமானதாகும் ?

(1) பிறர் செய்த குற்றம் கனமானதாயிருந்து, அதை தெரியாதவர்களுக்குத் தெரியப்படுத்தினபடியால், அதன் பொருட்டு அவனுக்குக் கனமான நஷ்டம் அல்லது அவமானம் உண்டானுல் கனமான பாவமாகும்.

(2) கவனக் குறைவினுல் பிறருக்கு விரோதமாகப் பேசினுல் அல்லது பேசின விஷயம் அற்பமானதாக இருந்தால் அற்பப்பாவமாகும்.

## 92. பிறருடைய ரகசியமான குற்றங்களை வெளியாக்குதல் எப்போதும பாவமாய் இருக்குமா ?

குற்றம் செய்தவனுக்கு நன்மை செய்யக்கூடியவரிடத்திலும், குற்றத்தை வெளிப்படுத்தாவிட்டால் நஷ்டப்படுகிறவனிடத்திலும், குற்றத்தை அறிவிப்பது பாவம் அல்ல. உதாரணமாக ஒருவன் கெட்டவழியில் நடக்கிறுனென்று வைத்துக்கொள்வோம்; அதை அவனுடைய தகப்பனுருக்கு அறிவித்தால் நன்மை விளையுமென்று தெரியும்போது, அவரிடம் அதைப்பற்றி தெரிவிக்கலாம்.

93. பிறருடைய இரகசியமான குற்றத்தை வெளியாக்குவது நமது கடமையாக இருக்கக் கூடுமா?

சிலசமயங்களில் இருக்கக்கூடும். எப்போதென்றால், பொதுநன்மைக்கோ, நமது அல்லது பிறருடைய நன்மைக்கோ அவசியமாயிருக்கும்போது. உதாரணமாக; பிள்ளைகளுக்குள்ளே, யாரேனும் ஒருவன் தன் உரையாடல்களாலோ, செயல்களாலோ, மற்றவர்களுக்குக் கனமான பாவத்துக்குக் காரணமாயிருக்கும்போது, அவன்மேல் அதிகாரமுள்ளவர்களிடம் மட்டும் அவனுடைய நடத்தையைப்பற்றி அறிவிக்கக் கடமையுண்டு.

94. பிறருடைய இரகசியமான குற்றத்தைத் தக்க முகாந்தரமின்றி அறிவித்தவன் செய்ய வேண்டியதென்ன?

அவனுக்கு விளைவித்த நஷ்டத்தை தன்னால் கூடிய மட்டும் பரிகரித்து அவனுடைய கீர்த்தியை விளங்கப் பண்ணவேண்டும்.

95. பிறர் செய்த குற்றம் எல்லோருக்கும் தெரிந்ததாயிருந்தால் அதை வெளிப்படுத்துவது புறணியாகுமா?

அது புறணியல்ல. அப்படிப்பேசுவது நீதிக்கு விரோதமான பாவமாயிருக்கலாம்.

96. புறணி பேசுவதற்கு உடந்தையாயிருக்கிறவர்கள் யார்?

(1) புறணி பேச ஒருவனைத் தூண்டுகிறவனும்,

(2) அவன் தைரியம் கொள்ளுவதற்குக் காரணமாக இருக்கிறவனும்,

(3) புறணியை நிறுத்தக் கடமைப்பட்டிருந்து அதை நிறுத்தாமல் இருக்கிறவனும்,

(4) அவன் சொல்வதைமகிழ்ச்சியுடன் கேட்கிறவனும் புறணி பேசுவதற்கு உடந்தையாக இருக்கிருர்கள்.

## 97. அவர்கள் கட்டிக்கொள்ளும் பாவம் என்ன ?

கனமான காரியத்தில் அவர்கள் நீதிக்கும், பிறர் சிநேகத்துக்கும் விரோதமான கனமான பாவம் கட்டிக் கொள்ளுகிருர்கள் என்று சொல்லலாம்,

## 98. புறணியைக் கேட்கிறவர்கள் செய்யவேண்டிய தென்ன ?

தங்களால் கூடியமட்டும் அதை நிறுத்த முயற்சி செய்ய வேண்டும். இது முடியாவிட்டால், இவ்விதமான பேச்சை மாற்றி வேருெரு விஷயத்தைக் குறித்துப் பேசத் துவக்கவேண்டும். அல்லது தன்னுடைய மௌனத்தாலும், முகக் குறியினுலும், இத்தகைய பேச்சை தனக்கு இஷ்டமில்லை என்று காட்டவேண்டும்.

## 99. ஒருவன்மீது விரோதமாகச் சொல்லப்பட்டதை அவனிடத்தில் போய் அறிவிக்கலாமா ?

புறணி பேசுவதைவிட இது அதிக அருவருப்புக் குரியது. ஏனெனில், இதனுல் மக்களுக்குள் பகை, சண்டை சச்சரவு, பிரிவினை, சமாதானக் குறைவு முதலான கேடுகள் விளையும். சகோதரர்களுக்குள்ளே பிரிவினை உண்டாக்குகிறவர்களை கடவுள் வெறுக்கிருர். "சமாதானமுள்ள அநேகரைக் கலகப்படுத்துகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள்"

## 100. அப்படி கலகம் விளைவிக்கிறவன் எவ்விதமான பாவம் கட்டிக்கொள்ளுகிறுன் ?

சாதாரணமாய் இப்படிப்பட்ட புறணி பொருமையால் உண்டாகிறதினல், அப்படிப் பேசுகிறவன் வாயால் கட்டிக் கொள்ளும் பாவங்களில் காய்மகாரம் என்னும் பாவம் கொள்ளுகிறுன்.

## 101. இரகசியம் ஆவது என்ன ?

ஒரு காரியம் அதன் தன்மையினிமித்தமோ (உதாரணமாக: ஆலோசனை கேட்கும் பொருட்டு தனக்கு அறிவிக்கப்பட்டவைகள்) அல்லது அதைப்பற்றிச் செய்திருக்கும் ஒப்பந்தத்தினிமித்தமோ, வெளியிடப்படக் கூடாததாயிருந்தால் இரகசியமாகும். மேலும், பிறருக்குள்ளே நடந்த பேச்சுவார்த்தைகளைக் கேட்பதினலும், அவனுடைய பெட்டியில் உள்ளவைகளை ஆராய்வதினலும், அவனுடைய கடிதங்களை வாசிப்பதாலும், இரகசியம் ஏற்படக்கூடும்.

## 102. இரகசியத்தை வெளிப்படுத்துவது பாவமா ?

ஆம் அது பிறர் சிநேகத்துக்கும், நீதிக்கும் விரோதமான பாவமாகும்.

(1) தன் தன்மையினிமித்தம், வெளியிடக்கூடாத காரியம் கனமானதாயிருந்தால், அதை வெளிப்படுத்துவது கனமான பாவமாகும்.

(2) ஒரு காரியத்தை வெளியிடமாட்டேனென்று ஒருவன் வாக்குக் கொடுத்திருப்பானேயாகில், அந்த காரியத்தின் தன்மையினிமித்தமாகிலும், கொடுத்த வாக்கின் தன்மையினிமித்தமாகிலும் அற்ப அல்லது கனமான பாவமாகும்.

103. பிறருக்குச் சொந்தமான கடிதங்களைத் திறந்து வாசிக்கிறது பாவமா?

அதிகாரம் அல்லது உத்தரவு இன்றி, அல்லது தக்க முகாந்தரமில்லாமல் அப்படி வாசிப்பது தன்னில் தானே கனமான பாவமாகும்.

104. இரகசியத்தை எப்போது வெளியிடலாம்?

(1) இரகசியம் சொன்னவன் அதை வெளியிடுவதற்கு உத்தரவு கொடுப்பானென்று எண்ணுவதற்குத் தக்க முகாந்தரம் இருக்கும்போதும்.

(2) தற்செயலாய் அல்லது வேறே வழியாய் இரகசியம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும்போதும.

(3) பொது நன்மையினிமித்தமாகவும் அல்லது பிறருக்குக் கெடுதி நேரிடாதபடியும் இரகசியத்தை வெளிப்படுத்தலாம்.

## 15. மனது

105. மனது அல்லது சித்தம் என்றால் என்ன?

உறுதியாக யாதொன்றை விரும்பவும், வெறுக்கவும் எவ்விதமாய் நடப்பது உசிதமானது என்று தீர்மானிக்கும் உள தத்துவமே மனது என்று சொல்லப்படும்.

106. மனதின் தொழில் என்ன?

சத்தியம், நன்மை இவைகளைத் தேடுவதும், பொய், தீமை ஆகியவற்றை நீக்குவதும் மனதின் தொழிலாகும்.

107. நன்மை என்பது என்ன? அது எத்தனை வகைப்படும்?

தேடுகிறவர்களுக்கு மன நிறைவையும், அவர்களது வாழ்க்கைக்குப் பிரயோஜனமாகவும் இருக்கும் நன்மை

யுள்ள எதுவும் நன்மை என்று சொல்லப்படும். நன்மை பலவகைப்படும். ஐம்புலன்களுக்கும் திருப்தி அளிக்கக் கூடிய இடம், பொருள், மக்களின் குண நலன்கள், முதலி யவை இவ்வுலகத்துக்கடுத்த நன்மைகள் எனப்படும். ஆன் மாவின் தத்துவங்களுக்கு நிறையை அளிக்கத்தக்க மன நிம்மதி, தெய்வீக ஒன்றிப்பு (இவ்வுலகிலோ அல்லது மறு வுலகிலோ) ஆகியவை ஞான நன்மை அல்லது ஆன்மீக நன்மைகள் எனப்படும்.

108. உலகுக்கடுத்த நன்மைகளில் மேலும் சில வற்றைக் கூறுக.

நுண்ணறிவு, திறமை, பேச்சுத்தன்மை, மதிப்புக்குரிய தன்மை, அழகு, உடல் நலம், செல்வம், சுற்றுச்சூழல் முதலியனவாகும்.

109. இவற்றை அடைய உரிமையுள்ளவர்கள் யார்?

நாட்டுக்காகவோ, கடவுளின் சேவைக்காகவோ, வேறு மேலான கருத்துக்காகவோ, இவற்றை முழுவதுமோ, அல்லது சிலவற்றையோ மாத்திரம், நேர்ச்சி, வாக்குறு திகள் மூலம் துறந்து விட்டவர்களைத் தவிர மற்ற யாரும் இவற்றை அடைய உரிமையுண்டு.

110. இவ்வுரிமையைக் கொடுக்கக் கடமைப்பட்ட வர்கள் யார்?

ஒப்பந்தம், பிறப்புரிமை, பிரஜா உரிமை முதலிய நியாய மான வழியில் கேட்கும் உரிமையாளர்க்குக் கொடுக்க எல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

111. இந்த நன்மைகளை தேடும் விதமென்ன?

கடவுள் மனிதனைத் தனக்காக உண்டாக்கினார்; மற்ற சிருஷ்டிகளை மனிதனுக்காக உண்டாக்கினார். இந்த

நன்மைகளின் சிருஷ்டிகர் கடவுள். ஆகவே இவற்றைத் தேடுபவர்கள் கடவுளின் திட்டப்படியும், விருப்பப்படியும் தேடுவது சிறந்தது; இதை வாழ்க்கை சட்டம் என்று கூறலாம்.

## 16. தீமை

### 112. தீமை என்றால் என்ன?

நன்மையைத் தேடுபவர்கள், அதை அடையமுடியாதபடி தடையாக இருப்பதே தீமை எனலாம். இவ்வுலக வாழ்வில் ஏற்படும் இடையூறுகளை, இவ்வுலகுக்கடுத்த தீமை யென்றும், மறுவுலக வாழ்வை அடைய முடியாதபடி தடுக்கக்கூடியதை ஆன்மீக தீமை அல்லது பாவம் என்று சொல்லலாம்.

### 113. உலக வாழ்வுக்கடுத்த தீமை யாவை?

ஐம்புலன்களும் விழையும் இன்பம் கிடைக்காததினால் ஏற்படும் ஏமாற்றம், அயர்வு, களைப்பு, நோய், வறுமை, அறியாமை, மடமை, அவகீர்த்தி, திக்கற்றநிலை, உறுப்புக் குறைகள், புலக்குறைவு முதலியனவாகும்.

### 114. இந்த தீமைகளுக்குக் காரணம் என்ன?

இந்த தீமைகளின் காரணத்தை, உள்ளவாறு கடவுள் ஒருவரே அறிவார். தீமையை அனுமதிப்பவர் அவரே, அந்தத் தீமையைக்கொண்டும், அதன் வழியாகவும், தான் விரும்பும் நன்மையை அடையக்கூடியவர் அவர் ஒருவரே! ஏனெனில், "கடவுள் ஒருவரே தீமையின் வழியே நன்மையை விளைவிக்கும் ஆற்றல் உடையவர்"—என்பது அறிஞர் கண்ட அனுபவ உண்மை. நாம் சொல்லக்கூடியது எல்லாம் இதுதான். அதாவது;

(1) கடவுள் ஒருவனுக்கு தீமைநேர அனுமதிக்கும்போது அவனைத் தண்டித்து, நரகில் தள்ளவேண்டு

மென்ற தீய கருத்துடன் அவனுக்குத் தீமையை அனுப்ப மாட்டார். அதைக்கொண்டு அவனே அவனைச் சுற்றியுள்ள வர்களோ, தங்களின் உண்மை நிலையை அறிந்து, தங்களைத் திருத்திக்கொண்டு, கடவுளை அதிகமாக நேசிக்க வேண்டும் என்பதற்கே, அதை அனுமதிக்கிறார் என்று உறுதியாகச் சொல்லலாம் சிலர் கூறுவதுபோல, இது முன் வினைப்பயன் இல்லை, அவ்வாறு நினைப்பது தவறாகும்.

(2) ஒருவன்மேல் வைத்த இரக்கத்தின் பயனாக, அவனுக்குத் துன்பத்தைக் கொடுத்து, அவன் அதனால் தன் குற்றங்களுக்கு இவ்வுலகிலேயே பரிகாரம் செய்யவும் திருவுளமாயிருக்கலாம் அல்லது பிறருடைய குற்றங்களுக்குப் பரிகாரமாக ஒப்புக்கொடுக்கும்படியும் அனுமதித்து இருக்கலாம்.

(3) அவனது விசுவாசத்தை சோதித்து அறியும் கருவியாகவும், துன்பத்தைக் கொடுத்திருக்கலாம்.

## 115. இவ்வாறு துன்பங்கள் வந்தபோது நாம் செய்யவேண்டியது என்ன?

ஒருவன் எந்த நன்மையையும் தானாக சம்பாதித்துக் கொள்ள முடியாது. ஆதலால் அதைப்பற்றி பெருமைப் படுவதற்கு இடமில்லாததுபோல, துன்பம் வந்த காலத்திலும், தனது சொந்தக் குற்றத்தினால் வந்திருக்க வேண்டுமென்று தன்னையே வருந்திக்கொள்ள வேண்டியதில்லை. பிறர் தனக்கு, மனம் பொருந்தி தீங்கு செய்ததாகக் காணும் போதுகூட, கடவுளது சித்தமில்லாமல் நடந்திருக்காது. ஆதலால் அவர்களை விரோதித்துப் பழிவாங்க நினைக்கவும் கூடாது. பிறரைக் குறைகூறுவதிலும் பயனில்லை. ஆகவே துன்பம் முடிவடையும்வரை சகிப்புத்தன்மையுடன் பொறுமையாக இருந்து குறையை நியாயமான வழியில், நீக்கிக் கொள்ளத் தன்னால் இயன்ற அளவில் முயற்சி செய்தல் நல்லது. துன்பத்தை அனுப்பும் இறைவன் இரக்கமுள்ளவர் என்றால் அவரைப்பற்றி முறையிட்டுத் தகாதவிதமாகப் பேசுதல் தேவ தூஷணமாகும்.

# 17. பாவம்

## 116. ஆன்மீக தீமை அல்லது பாவம் என்றால் என்ன?

தேவகட்டளையை மீறுவது பாவம். சிருஷ்டிகராகிய இறைவனுக்காகப் படைக்கப்பட்ட மனிதன், அவரது சொற்படி கேட்டு, அவரோடு ஒன்றித்துவாழவேண்டியது அவனது கடமை. அப்படியின்றி அவன் இறைவனைவிட்டு விட்டு, ஏதேனும் ஒரு படைப்புப்பொருள் மேல் (மனிதன், பொருள்) பற்றுவைத்து, அதைச் சார்ந்து நின்று இறைவனை எதிர்த்துநிற்கும் நிலை பாவநிலை எனப்படும்.

## 117. கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட ஆன்மா கடவுளை எதிர்க்கமுடியுமா?

ஆதியில், சாத்தானை நம்பி தேவகட்டளையை மீறிய ஆதித்தாய் தந்தையரின் பாவத்தோஷம், மனுக்குலம் முழுவதையும் பாதித்துவிட்டது. பாவ நாட்டத்துடன் தான் எல்லா மனிதரும் பிறக்கின்றனர். தனக்குள்ள மனச் சுதந்திரத்தை உபயோகப்படுத்தி, பாவ நாட்ட நேரத்தில், தேவகட்டளையை மீறவும், அல்லது மீறாது தேவகட்டளையை அனுசரிக்கவேண்டிய தீர்மானம் செய்வதும் மனிதனேயாவான். கடவுள் இந்த சுதந்திரத்தைப் பெரிதும் மதிப்பதால், அவனை வற்புறுத்தி பாவத்தையோ, புண்ணியத்தையோ அவன் தன் விருப்பத்துக்கு மாறாகச் செய்யும்படி கட்டாயப்படுத்தமாட்டார். ஆனால், அவனுக்குப் போதிய அளவு அறிவையும், உதவியையும் கொடுப்பார் என்பது உறுதி. தன்னலங்கருதுபவனே கடவுளை எதிர்த்து நிற்பான்.

## 118. தேவகட்டளை என்றால் என்ன?

மனிதன் இவ்வுலகில், நன்முறையில் வாழவும், மறு வுலகில் நித்தியத்துக்கும், இன்பவாழ்வு அடையவும், அதற்

குரிய வழிவகைகளாக கடவுள் அவனுக்குக் கொடுத்துள்ள விதிகளே தேவகட்டளையாகும். இவற்றை இறைவன் கற்பித்து, அனுசரிக்கும்படி கூறியிருப்பதால், இவற்றை தேவ கட்டளை என்று கூறுகிறோம்

119. இந்தவழியைக் கடவுள்தான் காட்ட வேண்டுமா?

ஆம். ஏனெனில், இவ்வுலக வாழ்க்கையில் நம்மைப் பராமரிப்பவர் அவரே. மறுவுலக வாழ்வில் நமது பேரின்பமாக இருப்பதும் அவரே. எனவே, அதற்குரிய வழியை, அவரே காட்டுதல் பொருத்தமானதேயாகும்.

## சரீரத்தின் அதம தத்துவங்கள்.

120. சரீர தத்துவங்கள் யாவை?

உடல் உறுப்புகள், ஆசாபாசங்கள், உறுப்புகளின் அசைவு முதலிய செயல்கள் ஆகியவை சரீர தத்துவங்களாகும்.

# 18. ஆசாபாசம்

121. ஆசாபாசங்கள் எவை?

வேகமாய் உள்ளத்திலிருந்து கிளர்ந்தெழுந்து, செயலுக்குக் காரணமாகிற தீவிரமான உணர்ச்சிகளாகிய விருப்பு, வெறுப்பு ஆகியவை இரண்டும் ஆசாபாசம் எனப்படும்.

122. இவை இரண்டுக்கும் உதாரணம் கூறு.

இன்பத்தைத் தரும் நிகழ்ச்சிகளிலும், விஷயங்களிலும் பற்றுதல், ஆசை, மகிழ்ச்சி, ஆர்வம், துன்பம் தரும் காரியங்களிலும், நிகழ்ச்சிகளிலும் வெறுப்பு, அருவருப்பு, கோபம், பயம் ஏற்படுவதாகும்.

123. நம்மை பாவத்துக்கு செலுத்தக்கூடிய ஆசா பாசங்கள் எவை?

(1) நமக்கு விருப்பமான காரியங்களில்:–சாப்பிடவும், குடிக்கவும் ஆசை; சிற்றின்பப் பிரியம் அல்லது காமம், பண ஆசை அல்லது பொருளாசை, மகிமை, கீர்த்தி, அதிகாரம் இவைகளின் மேல் பற்றுதல், விநோதப் பிரியம், இன்ப சுகபோகப் பிரியம்.

(2) நமக்குப் பிரியமில்லாத காரியங்களில்:—துன்ப வருத்தங்கள், முயற்சி முதலியவைகளை வெறுத்தல்; பிறரை அருவருத்தல், பகை, காய்மகாரம், பொறாமை, கோபம், துன்பம், எடுத்த காரியங்களில் தோல்வி, நஷ்டம் வருமோ என்னும் அச்சமும், சந்தேகமும், அல்லது பிறர் மீதுள்ள பயம்.

124. ஆசாபாசம் எழும்புவதற்குக் காரணம் என்ன?

அதை கிளர்ந்தெழச்செய்யும் காரியங்களைப் பார்ப்பதால், அல்லது அவற்றைப்பற்றி யோசிப்பதால் உண்டாகிறது.

125. இதை விளக்க சில உதாரணங்கள் கூறுக.

அன்னபானத்தைக் கண்டதும், அல்லது உணவுப் பொருட்களை முகர்ந்ததும் அவற்றின்மேல்விருப்பம்உண்டாகிறது காமத்தைத் தூண்டும் பொருட்களைக் கண்டதும் அல்லது தொட்டதும் சிற்றின்பப் பிரியம் உண்டாகிறது. நமக்குப் பிரியமில்லாத அல்லது அருவருப்பான ஆளையோ அல்லது பொருளையோ கண்டால் கோபம் உண்டாகிறது. பொருளைக்காணுவிட்டாலும அந்த நினைவே நமக்கு வெறுப்புண்டாக்கப் போதுமானது.

126. ஆசாபாசம் எழும்பாதபடி தடுக்கக்கூடுமா?

நமது ஐம்புலன்களை அடக்குவதால் தடுக்கலாம்.

## 127. நமது புலன்களை அடக்குவது எப்படி?

ஆசாபாசத்தை எழுப்பக்கூடிய பொருட்களிடத்தே அவைகளைச் செல்லவிடாமல், வேறு விஷயங்களைக் கவனிக்கும்படி அவற்றைச் செலுத்துவதால் அடக்கலாம்.

## 128. இதை சில மேற்கோளுடன் விளக்குக.

பாவத்துக்கான ஆசை, அல்லது கோபம் வருவிக்கத் தக்க பார்வைகளிலிருந்து கண்களைத் திருப்பிக்கொள்ளுதல்; அதுபோன்ற காரியங்களைக் கேட்காதபடி செவிப் புலனைத் தடுத்தல்; சிற்றின்ப உணர்ச்சியை உண்டாக்கும் பொருட்களைத் தொடாதிருத்தல். போசனப் பிரியத்தை உண்டாக்கும் உணவு வகைகளை ருசிபார்க்காமல் இருத்தல் ஆகிய போன்றவை.

“கடவுள் நமக்குக் கண்களும், கண் இமைகளும் கொடுத்திருக்கிறார். இமைகள் என்னத்துக்கு? பார்க்காதபடி. உன் கண்கள் பார்க்கும்படி; உன் இமைகள், பார்க்காதபடி தடுப்பதற்கு உனக்கு இருக்கின்றன. இவ்வுலகில் பற்பல கெட்ட பொருள்கள் உண்டு. அவைகளைப் பார்க்காதபடி கண் இமைகளையும், நல்ல பொருட்களைப் பார்ப்பதற்குக் கண்களையும் கடவுள் கொடுத்திருக்கிறார். கண் இமைகளைப் பயன்படுத்து; கெட்ட காரியங்களைப் பார்க்காதே! (Bernard Vaughan)

“தன்னைத்தானே அடக்கியாள்வதில், மிகச் சிறந்த வீரச்செயல் யாதெனில், ருசி பார்த்தும் அருந்தாமல் இருப்பது” என்று ஒரு விஞ்ஞானி வர்ணித்திருக்கிறார்.

## 129. இதன் பொருள் என்ன?

ஏதேனும் ஒரு உண் பொருளை ருசி பார்த்தபின் சாப்பிடாமல் இருப்பதைவிட ருசி பார்க்காமல் இருப்பது எளிது. இப்படியே மற்ற நான்கு புலன்களைப்பற்றியும் கூறலாம்.

### 130. கெட்ட பொருட்களிலிருந்து நமது புலன்களைப் பாதுகாப்பது எப்போதும் சாத்தியப்படக்கூடியதா?

முழுவதும் கூடுமான காரியமல்ல இது. ஆனால் ஆசாபாசம் எழும்பத்துவக்கினவுடன், அது எவ்வளவுதான் நமக்கு இன்பமளித்தபோதிலும், நம்மால் இயன்றவரை அப்பொருட்களிலிருந்து விலக முயற்சி செய்யவேண்டும்.

### 131. ஒருபோதும் ஆசாபாசம் எழும்பாமல் தடுக்கக்கூடுமா?

எப்போதும் அது எழும்பாமல் தடுப்பது நம்மால் ஆகும் செயலல்ல. ஆனால் அது எழும்பியவுடன, அதை அடக்கிக் கட்டுப்படுத்திப் பாவத்துக்கு வழியாகாதபடி தடுக்கக்கூடும்.

### 132. ஆசாபாசத்தை அடக்குவது கடினமா?

மிகவும் தீவிரமாக ஆசாபாசம் எழும்பிவிட்டாலும் அதற்கு இடங்கொடுத்து, அது நம்மை மேற்கொள்ளும்படி விட்டுவிட்டால், பிறகு அதை அடக்குவது கடினம்; ஆனால், ஆரம்பத்தில் அது எழும்பினவுடன் அடக்குவது சற்று எளிதாகவே இருக்கும்.

### 133. ஆசாபாசத்தை ஆரம்பத்தில் அடக்குதல் எளிதாதல் எப்படி?

ஏனெனில் சாதாரணமாய், அது அமைதியாக ஆரம்பித்து வரவர தீவிரங்கொண்டு இறுதியில் அடக்குவதற்குக் கடினமாகி விடுகிறது. இதனால் துவக்க நிலையில் இருக்கும்போதே அதை அடக்கியாளுவது எளிது. இதுபற்றியே வள்ளுவரும்,

"இளைதாக முண்மரம் கொள்க! களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து"

என்று கூறியுள்ளார். அதாவது முள்மரம் சிறிய செடியாக

இருக்கும்போதே பிடுங்கி எறிந்துவிடுதல் நலம்; ஏனெனில் அது மரமாகிவிட்டால் அதை அழிக்க வருகிறவர்களின் கையைப் பதம் பார்த்துவிடும் என்பது பொருள். ஆசாபாசத்தின் நிலையும் இப்படித்தான்!

## 134. ஆசாபாசம் எழும்பின பிறகு அதை அடக்குவது எவ்விதம்?

(1) அதை எதிர்த்து நிற்கும் மனத்திடனைக் கையாள வேண்டும்.

(2) அதைத் தூண்டும் பொருட்களிலிருந்து விலக வேண்டும்.

(3) வேறு ஏதாவது நல்ல காரியத்தின்மேல் நமது சிந்தனையைச் செலுத்த முயற்சிக்கவேண்டும்.

(4) தவறான செயலைச் செய்வதற்கு உடலுறுப்புகள் முயற்சி செய்யாதபடி தடுக்கவேண்டும்.

(5) நாம் மனவுறுதியாயிருக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும்.

## 135. கெட்டசெயலில் உடல்பிரவேசித்துவிட்டால் நாம் என்ன செய்யவேண்டும்?

உடனே அதை அடக்கி, நமது உள்ளத்தைத் திடப்படுத்திக்கொண்டு அதை மறந்துபோவதற்கு ஏதுவான வேறு எந்தக் காரியமாகிலும் செய்யவேண்டும்.

## 136. ஆசாபாசத்துக்கு இடங்கொடுத்தால்என்ன நேரிடும்?

நாம் ஒருதடவை ஆசாபாசத்துக்கு இடங்கொடுத்தால், மறுதடவை அது, அதிக தீவிரமாய் எழும்பும். இவ்விதமாக அடிக்கடி அதற்கு உடன்படுவதால், அது நமக்கு ஒரு "பழக்கம்" ஆகிவிடும்.

## 137. பழக்கம் என்பது என்ன ?

ஆசாபாசம் அடிக்கடி வேகமாகவும், விரைவாகவும் எழும்பி, உடனே செயல்படும் தன்மை ஏற்படக் காரணமாயிருப்பதைத்தான் பழக்கம் என்கிறோம்.

## 138. ஒரு பழக்கம் ஏற்பட்டபின் அதைத் தள்ளி விடக்கூடுமா ?

கடினமான முயற்சியால் ஆகும் காரியமேயன்றி, இது எளிதல்ல.

## 139. இதிலிருந்து நாம் அறியத்தக்கது என்ன ?

ஆசாபாசத்தைத் துவக்கத்திலேயே அடக்கி, அது முதிர்ந்து பழக்கமாகிவிடாதபடிக்கு தடுக்க முயலவேண்டும். இவ்விதம் செய்தால், நல்லவழியில் நடப்பது எளிதாயிருக்கும். இவ்விதம் செய்யாமல் அசட்டையாக இருந்தால், நல்ல வழியில் நடக்க நாம் எப்போதும் போராடிக்கொண்டே இருக்கவேண்டும்.

## வாக்கு செயல், ரூபிகரம் (கற்பனுசக்தி)

## 140. மேற்கூறியவற்றைத் தவிர, இன்னும் வேறு எதையாவது நாம் அடக்கவேண்டியதுண்டா?

ஆம். நமது நாவையும், மெய்யசைவுகளையும், கற்பனு சக்தியையும் அடக்கவேண்டும்.

## 141. நாக்கை ஏன் அடக்கவேண்டும்?

நாவானது வழுவழுப்பாய் இருந்துகொண்டு வழவழவெனச் சொல்லத்தகாத காரியங்களைச் சொல்லிவிடுகிறது. அது சுழலத் துவக்கின பிறகு அதை அடக்குவது மிகவும் கடினம். மேலும், " நா அசைய நாடு அசையும்"—என்பது

அறிஞர் கண்ட உண்மை. நாவை அடக்காவிட்டால், மக்கள் துன்புறுவர் என்று உணர்வதற்காக வள்ளுவரும்,

> "யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."—என்று

கூறியுள்ளார்.

## 142. உடல் அசைவுகளை ஏன் அடக்கவேண்டும்?

ஏதாவது ஒரு ஆசை தோன்றிவிட்டால், உடனே உடலானது தன் விருப்பப்படி இயங்கி, செயல்பட ஆரம்பிக்கும்; அதைத் தடுக்காவிட்டால், தகாததை செய்தே முடிக்கும்.

## 143. ரூபிகரம் அல்லது கற்பனாசக்தி என்பது யாது?

ரூபிகரம் மனதின் "கண்" என்று சொல்லப்படும். நாம் காரியங்களைக் கண்ணால் கண்டதுபோல, அது நினைவில் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

## 144. ரூபிகரத்தை ஏன் அடக்கவேண்டும்?

ஏனெனில், ஐம்புலன்களை விட அதிக வேகமாக ரூபிகரம் ஆசாபாசத்தை எழுப்பக்கூடியது.

## 145. ரூபிகரத்தை அடக்கிக் கட்டுப்படுத்துவது கடினம் அல்லவா?

ஐம்புலன்களைக் கட்டுப்படுத்துவதைவிட இது அநேக சமயங்களில் மிகவும் கடினமானதே. ஆகையால் ஆசாபாச நெருப்புக்கு விறகுபோன்ற பொருட்களை உற்றுப்பார்க்காமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், பார்த்த அந்தப் பொருள்கள் நமது ரூபிகரத்தில் தோன்றிப் பாவத்துக்கு ஏதுவாகும்?

16444 1
-600 008

146. ஆசாபாசம் அதி தீவிரமாகவும், அடக்கக் கடினமாயும் இருப்பதைப்பற்றி, அதனால் ஏற்படும் செயல் பாவம் அல்ல என்று சொல்லலாமா?

ஒருவன் பாவத்தில் விழுந்ததற்குக் காரணம், ஆசாபாசத்தின் வேகம் எனலாமே தவிர, அவனுக்குப் பாவம் இல்லை எனலாகாது. ஏனெனில் ஆசாபாசம் எவ்வளவுதான் வேகங்கொண்டாலும், அவனுக்கு அதை எதிர்க்கும் தத்துவம் உண்டு.

147. ஒரு தீய பழக்கம் ஏற்பட்டுப் போனதை முன்னிட்டு நான் என்ன செய்வேன், அது எனக்குப் பாவம் இல்லை எனலாமா?

நீ பாவத்தில் மிக எளிதாய் விழுவதற்குக் காரணம் உன் தீய பழக்கம் என்பது சரியாகுமேயல்லாது, அதனால் உனக்குப் பாவம் இல்லை என்பது சரியல்ல. ஏனெனில், பழக்கத்தைப் பழக்கத்தால் மேற்கொள்ள முடியும்.

148. பாவத்தை தடுக்க மிக சிரமமாயிருந்தால், அந்த செயல், பாவம் அல்ல என்று சொல்லக்கூடாதா?

ஒருபோதுமில்லை. எத்தகைய சிரமமும், பாவத்தை இல்லை என்று சொல்ல முடியாது. சிரமமாயிருந்தால் அதை அதிக உறுதியுடன் எதிர்க்கக் கடமை ஏற்படுகிறதல்லாமல் வேறல்ல

149. வேறுவிதமாய்ச் செய்ய நம்மால் இயலவில்லை என்றால் சாக்குப்போக்கு செல்லுமா?

செல்லாது. நாம் இவ்விதம் சொல்லத் துவக்கினால் வெகு விரைவில் அதை நம்பி, பாவத்தை அற்பமாய் எண்ணி, ஒவ்வொரு தடவைக்கும் மிக எளிதாகப் பாவத்தில் விழுந்து, கடைசியாக முற்றும் தீயவராக மாறிவிடுவோம்.

Ar:31

B

# 1. குணபான்மை: அதன் பொருள் அதன் மதிப்பு

## 1. குணம் என்றால் என்ன?

வாழ்க்கையின் நிகழ்ச்சிகளில், சூழ்நிலைக்கேற்றபடி உள்ளத் தூண்டுதலை ஒட்டி நடந்துகொள்வது குணம்.

## 2. குணபான்மை என்பது யாது?

எந்தவித சூழ்நிலையாலும் அலைக்கழிக்கப்படாது, நெறிப்படி இயங்கச் செய்யும் முழு ஆளுகையினால் பயின்ற கூறுகளின் தொகுதியே குணபான்மை.

## 3. குணபான்மை உள்ளவன் யார்?

தான்செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஏதேனும் ஒரு கொள்கையின் அடிப்படையில் செய்து வருகிறவனே குண பான்மை உள்ளவன் எனப்படுவான்.

## 4. கொள்கைகள், சான்றுகள் என்பன யாவை?

நமது வாழ்க்கையின் நடைமுறை எப்போதும் சீராக அமையும்படி சில பொதுக்குறிப்புகளை உள்ளத்தில் ஆழ்ந்து பதியும்படி அமைத்துக்கொண்டு அவ்வண்ணமே நடந்து வருவது. இவ்விதம் நமது மனதில் ஊன்றியிருக்கும் குறிப்புகளே கொள்கைகள், சான்றுகள் எனப்படும்.

கொள்கைகள் மனதில் உறுதியாக வேரூன்றியிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அவற்றை நன்றாய் கண்டுபிடிக்கவும் நமக்குத் தேவையானபோதெல்லாம். அவற்றை எளிதாய் நினைவுபடுத்திக்கொள்ளவும் முடியும். மேலும் அவற்றில் கவனம் செலுத்தி அதன்படியே நடந்து வர மனதைப் பயிற்சிக்க வேண்டும்.

### 5. இதனால் விளையும் பயன் யாது?

இதனால் குணபான்மை உள்ளவன் தனது செயல் ஒவ்வொன்றிலும் உறுதியாகவும், சீராகவும் இருப்பான்; அவனது வாழ்க்கை ஒழுங்காகவும், முறை தவறாமலும் இருக்கும்.

### 6. குணபான்மை இல்லாவிட்டால் என்ன?

குணபான்மையில்லாத மனிதனுக்கு எவ்விதமான கொள்கைகளும், சான்றுகளுமில்லை. அவற்றின் பயிற்சியோ பழக்கமோ அவனுக்கு இருக்காது. சமயததுக்குத் தகுந்தது போல் மாறிமாறி நடப்பான். ஒரு சமயம் ஒருவிதமாகவும். மறுசமயம் வேறுவிதமாகவும் நிலையற்றவிதமாக நடந்து கொள்வான். அவனது வாழ்க்கை ஒழுங்கற்றதாகவும், நிலைதவறியதாகவும் இருக்கும்.

## 2. குணபான்மையின் வகைகள்

### 7. குணபான்மையில் பலவகை இருக்க முடியுமா ?

ஆம். குணபான்மை உறுதியானது அல்லது உறுதியற்றது. நற்குணபான்மை, துர்க்குணபான்மை எனப் பலவகையாக இருக்கலாம்.

### 8. உறுதியான குணபான்மையின் இயல்பென்ன ?

கொள்கைகளை ஊன்றி உணர்ந்து அவற்றை அச்சம், கலக்கமின்றி, திடமுடன் செயல்படுத்தும் குணபான்மை உறுதியானது

### 9. உறுதியற்ற குணபான்மை யாது ?

கொள்கைகளை அரைகுறையாக உணர்ந்து அவற்றைச் சந்தேகத்துடனும், மனத்திகிலுடனும் செயல்படுத்தும் குணபான்மை உறுதியற்றது.

10. உறுதியற்ற குணபான்மையால் நேரிடும் தீமை யாது?

உறுதியற்ற குணபான்மையுள்ளவன் எளிதில் தன் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுப்பான். தீக்குணம் மிக எளிதில் உண்டாக்கிவிடும். அதனால் அவன் துர்க்குண பான்மை உள்ளவனாக மாறிவிடுவான.

11. நற்குணபான்மை என்றால் என்ன?

கொள்கைகள் யாவும் நன்மைத்தனம் உடையனவாயும் ஒருவனை அவற்றின்படி ஒழுங்காக நடக்க வைக்கும் நிலைமை.

12. துர்குணபான்மை என்பதின் இயல்பென்ன?

தீமையான அல்லது தவறான கொள்கைகளை அடிப் படையாகக் கொண்டு ஒருவனைத் தீயவழியிலே இட்டுச் செல்லும் நிலைமை.

13. துர்க்குணபான்மை உள்ளவன் அல்லது குணபான்மையே இல்லாதவன் ஆகிய இரு வரில் யார் அதிகம் கெட்டவன்?

துர்க்குணபான்மை உள்ளவனே மிகவும் கெட்டவன். ஏனெனில் அவன் வேண்டுமென்றே அக்கிரமமாய் துஷ்டத் தனம் செய்கிறான். குணபான்மை அற்றவனோ சமயத்துக் கேற்ற விதமாய் நடந்துகொள்ளும் கோழை (சமய சஞ்சீவி). நல்லுணர்ச்சி தோன்றினால் நல்வழியில் நடப்பான். தீய உணர்ச்சி தோன்றினால் தீய வழியில் நடப்பான். ஆகை யால் அவனுடைய குற்றம் கோழைத்தனமே அன்றி அக்கிர மம் ஆகாது.

14. துர்குணபான்மை உள்ளவனை முழுவதும் துஷ்டன் என்பது சரியா?

இல்லை. அவனிடத்தில் அநேக நற்குணங்கள் இருக்க லாம். ஆனால் ஒன்றிரண்டு கெட்ட கொள்கையினால் அவ

னுடைய குணபான்மைக் கெட்டுப் போயிற்று. இதற்குக் காரணம் அவனை ஆட்கொண்டிருக்கும் முதன்மையான உணர்ச்சி உந்தல் அல்லது ஆசாபாசம்.

## 15. முதன்மையான ஆசாபாசம் என்றால் என்ன ?

பற்பலவிதமான குற்றங்களுக்கு அடிப்படையான ஏதேனுமொரு தீய நாட்டம் மனதில் ஆழமாய் வேரூன்றியிருந்தால் அதை முதன்மையான ஆசாபாசம் அல்லது உணர்ச்சியின் உந்தல் என்கிறோம். உதாரணமாக முதன்மையான அல்லது முக்கிய ஆசாபாசம் அகங்காரம் (பெருமை, பிறரை மதியாத குணம்) என்றால், இது பேராசை, கர்வம், காய்மகாரம், பொறுமை, பகைவாமம், கோபம் முதலான குணங்களுக்கு வழியாகும்.

சிற்றின்பப் பிரியர் தலைமையான ஆசாபாசம் என்றால் அஃதுள்ளவன் போசனப் பிரியம், குடிவெறி, காமம், சோம்பல், அசமந்தம், கவனமின்மை, இன்ப நாட்டம், கடமையை அலட்சியம் செய்தல் முதலிய தீய குணங்களுக்கு ஆளாவான்.

## 16. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு முக்கிய ஆசாபாசம் உண்டா ?

அனைவரிடத்திலும் இது உண்டென்று திட்டமாய் கூறக் காரணமில்லை. ஆனால் ஏறக்குறைய எல்லோரிடத்திலும் ஒரு முக்கிய ஆசாபாசம் உண்டு எனலாம். இது ஒருவனிடம் இருக்கிறது என்று அறிந்தால் அதைக் கவனத்துடன் வேரோடு களைந்து எறிய முயலவேண்டும். ஏனெனில் தீமை சிறிதெனினும் விரைவில் நீக்காவிடில் பிறகு மிகவும் கடினமாகிவிடும். இதுபற்றியே வள்ளுவரும்,

"முள்மரம் கொல்க ; களையுநர்
கைக்கொல்லும் காழ்த்த இடத்து"

(முள்மரம் செடியாக இருக்கும்போதே அதைப் பிடுங்கி எறிந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் பெரிய மரமாகும்

போது அதை வெட்டியவர்களின் கையைப் பதம் பார்த்து விடும்) என்று கூறுகிறார். இவ்விதம் செய்தால் மற்ற அநேக குற்றங்குறைகள் அத்துடன் நீங்கிப்போகும்.

# 3. குணபான்மையின் சிறப்பு

## 17. குணபான்மை உள்ளவனாயிருப்பது மிக முக்கியமான விஷயமா?

ஆம். மேலும் நற்குணபான்மை உள்ளவனாயிருப்பது மிகமிக அவசியம். ஏனெனில் இந்தக் குணபான்மையுள்ளவன் தன் வாழ்க்கை முழுவதையும் நீதி கடமைகளுக்கு ஏற்ற வகையில் ஒழுங்குடன் அமைத்துக்கொள்ள முடியும். திடீரென்று ஏற்படும் உணர்ச்சி தாக்குதல்களாலும், வேறு பிற காரணங்களாகப் புறத்தே எழும் நிகழ்ச்சிகளாலும், அலைக்கழிக்கப்படமாட்டான். தனது உயர்ந்த குறிக்கோளாகி வீடுபேற்றை அடைவதற்கேற்ற வழியில் தனது வாழ்க்கையை அமைத்துக்கொள்வான். குணபான்மையற்ற மனிதனின் வாழ்க்கையும் குறிக்கோளும் காற்றினால் அலைக்கழிக்கப்படும்; துரும்புக்கு சமமாய் உறுதியற்றதும், நிலையற்றதுமாக இருக்கும்.

## 18. குணபான்மையினால் வேறுவிதமான பயன் உண்டா?

உண்டு; மனிதன் தனது காரியங்களைச் சரிவர செய்து தன் வாழ்க்கையைச் சிறப்புற அமைத்துக்கொள்வதற்குக் குணபான்மை மிக்க உதவியாக இருக்கும். கொள்கைகளை நன்கு உணர்வதால் தன் குற்றங்குறைகளை நன்குணர்வான். அவற்றை வேருடன் களைந்தெறிய முயற்சி செய்வான். கோழைத்தனத்தாலும், உறுதியற்ற மனப்பான்மையாலும் ஏற்படும் பலவிதமான குற்றங்கள் இவனிடம் இருக்காது. குணபான்மை உடையவன் குறித்த நேரத்தில் யாவும் செய்வான். கொடுத்த வாக்கை மீறாமல் தன் வேலைகளைச் சரிவர செய்துமுடிப்பான். திட்டவட்டமான தீர்மானங்

களைச்செய்து, அவற்றைத் திறமையுடன் செயல்படுத்து வான், பிறருடைய கண்ணுக்கு முன் ஒருவிதமாகவும், மறைவில் வேறுவிதமாகவும் நடக்கமாட்டான். சுருங்கச் சொல்லவேண்டுமானால், எல்லா விஷயத்திலும் அனைவருக் கும் திருப்திகரமாக நடந்துகொள்வான்.

உறுதியற்ற குணபான்மை உடையவன் அல்லது குண பான்மை இல்லாதவன் இதற்கு முற்றும் மாறாக நடப்பான். சமயத்துக்கு ஏற்றாற்போல் நடந்து, தன் விஷயத்திலும் சரி மற்றவர்கள் விஷயத்திலும் சரி, ஒழுங்கின்றி, நிலையற்றவித மாக—நாணலைப்போல் வளைந்து கொடுத்துக்கொண்டிருப் பான். அவனை நம்பி ஒருவரும் ஒரு காரியமும் செய்யமுடி யாது. இத்தகைய மனிதனோடு பழகுவது அனைவருக்கும் வெறுப்பாக இருக்கும். அவன் தனக்கும் பிறனுக்கும் பய னற்ற பூண்டு என்பதே சரி.

## 19. குணபான்மைக்கும் வாழ்க்கைச் சட்டத்தை அனுசரிப்பதற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா?

மிகவும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஏனெனில் வாழ்க்கைச் சட்டம் நற்குணபான்மைக்கு அடிப்படையாக அமைந்துள்ளது. நற்குணபான்மைக்கு கொள்கைகளும், ஆதாரங்களும் அவசியம் என்பது நமக்குத் தெரியும். ஆனால் எவ்வகையான கொள்கைகளும், ஆதாரங்களும், வாழ்க்கைச் சட்டத்தின் விளக்கமே தவிர வேறல்ல. தக்கது எது, தகா தது எது என்னும் இந்த அடிப்படை உண்மையை நன் குணர்வதால் குணபான்மை உள்ளவன் அதன்படியே நடக்க எப்போதும் தயாராக இருப்பான். துர்க்குண பான்மை உள்ளவன் அல்லது குணபான்மையே இல்லாத வன் அந்த உண்மையை மறந்தவனாய் அல்லது சமயாசம யங்களில் மட்டுமே அதைப்பற்றி நினைப்பவனாக இருப்பான்.

20. சோதனையை ஜெயிக்கவும், பாவத்தை விலக்கவும் குணபான்மை உதவுமா?

உதவும், உள்ளத்தில் தோன்றும் தீய உணர்ச்சிகளையும் மற்ற தீமைக்கான புறக்காரணங்களையும் எதிர்த்து வெற்றிகொள்வதற்கு அவசியமான மன உறுதியைக் குணபான்மை மனிதனுக்கு அளிக்கிறது.

நல்ல கொள்கைகளையுடைய புத்தியும், அவற்றை அனுசரிக்க எப்போதும் தயாராயிருக்கும் மனதும் ஒருவனுக்கு இருக்குமானால், அத்தகைய மனிதன் ஆபாச உணர்ச்சிகள் துவக்கும்போது அதை உணர்ந்துகொள்வான். அதை அடக்க உடனடியாக முயற்சி எடுத்துக்கொள்வான். அவ்வண்ணமே துர்மாதிரிகையும், வேறு புறக்காரணங்களும் தன்னைத் தீண்டாமல் இருக்கும்படி காத்துக்கொள்வான். அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய திடமும், மன உறுதியும் அவனிடம் இருக்கும்.

# 4. குணபான்மையை அடைதல்

21. குணபான்மையை அடைவதற்குச் செய்ய வேண்டியது யாது?

முதல் முதலாக அதை அடைய உண்மையான விருப்பம் இருக்கவேண்டும். இரண்டாவது நமது புத்தியையும் மனதையும் விசேஷ வகைகளில் பயிற்சிப்பது அவசியம்.

22. புத்தியை பயிற்சிப்பது எப்படி?

(1) நல்லொழுக்கத்துக்கேற்ற கொள்கைகளைக் கற்றறிந்து அவற்றை மதித்து அடிக்கடி உபயோகிப்பதால்,

(2) சகலவிதமான துர்நினைவுகளையும், தீய கொள்கைகளையும் அகற்றி, அவற்றை அருவருக்கவும், நீக்கவும் பழகுவதால்.

(3) கடவுளைப்பற்றியும், அவர் மட்டில் நமக்குள்ள கடமைகளைப்பற்றியும் அடிக்கடி சிந்தித்து உண்மையாகவே நல்ல மனிதன் ஆவது எவ்வளவு அவசியமானது என்று உணர்வதால் — புத்தியைப் பயிற்சிக்கலாம்.

## 23. மனதைப் பயிற்சிப்பது எவ்விதம்?

நமது தினசரி காரியங்களில் ஊக்கமும் திடனும் காட்டி, ஏற்றதை எப்போதும் செய்து, செய்வதையும் கூடிய வரை செவ்வனே செய்து இன்பதுன்பம், விருப்பு வெறுப்பு இவற்றால் இடையூறுநேரிடாதபடி நம்மைத்தானே ஒறுத்து அடக்கி வருவதால் மனதைப் பயிற்சிக்கக்கூடும்.

இவ்விதமான தினசரி கிரிகைகளில் ஊக்கமும், திடனும், ஒழுங்கும் ஏற்பட்டால், நமது மிகமுக்கிய அலுவலாகிய ஆன்ம விஷயம், வேத விஷயம், அறநெறி ஒழுக்கம் ஆகியவற்றில் இதே ஊக்கமும், திடனும் ஏற்படும் என்பது திண்ணம்

இந்த நடைமுறை வெற்றியடைய வேண்டுமாயின் அச்சத்தோடு, ஆர்வத்தோடு, உழைக்கவேண்டும். "காரணம் தப்பினால் மரணம்" —என்னுார் ஆன்றோர் வாக்கை நினைவுப்படுத்திக் கொள்ளவேண்டும். செய்யும் காரியங்களைத் திருத்தமாகச் செய்யவேண்டும். "செய்வன திருந்தச்செய்" என்பதையும் மறக்கக்கூடாது.

## 24. a) சோதனைகள் வரும்போது நமது மனதை உபயோகிப்பது எவ்விதம்?

சோதனையை எதிர்த்து நின்று, "நான் சம்மதியேன்" என்று உறுதியாகக் கூறலாம். ஆனால் அநேக சமயங்களில் இது எளிதல்ல. சில சமயங்களில் சோதனைக்கு உட்பட்டு சம்மதிப்போம் என்று பயப்படவும் காரணமுண்டு அந்த சமயங்களில் நமது சிந்தனையை (எண்ணம) மாற்றுவது

அதாவது, சோதனையின் நினைவை அகற்றி புலனகளும், கற்பனை சக்தியும் அதில் கவனம் கொள்ளாதபடி விலக்கி சோதனையை மறந்துபோகும் வண்ணம் வேறு ஏதாவது காரியம்செய்ய முயற்சிக்கவேண்டும்.

சில சாதாரண விஷயங்களில் சோதனையை எதிர்த்து நின்று, மன உறுதியால் அதை வெற்றிகொள்ள முயற்சித்தால் நமது குணபான்மைக்கு அதிக வலிமை உண்டாகலாம். ஆனால், சோதனை மிகவும் கடுமையாய் நம்மைத்தாக்கி, தோற்கடிக்கக் கூடுமாயிருந்தால் எதிர்த்து நிற்பதால் நமக்கு அபாயம் நேரிடும். ஆகையால் சோதனையை விட்டு ஓடிவிலகுவதேஉத்தமம்.

## b) இப்படி ஓடி விலக்கவேண்டிய சோதனைகள் எவை?

இத்தகைய சோதனைகளில்முக்கியமானது ஆபாசமான சிற்றின்பச் சோதனை. இது எப்போதும் ஆபத்துக்குரியது. இது நீடிக்கும் ஒவ்வொரு வினாடியும் ஆபத்து அதிகரிக்கிறது. ஒவ்வொருவனும் தனது அனுபவத்தால் அறிந்துகொள்ளவேண்டியது. சிலர் போசனப்பிரியம், குடிவெறியால் ஆபத்துக்குட்படலாம். சிலருக்குப் பந்தய ஆட்டம், சூதாடல் ஆபத்தாயிருக்கலாம். திருடத் தேடுவது சிலருக்கு மிகுந்த ஆபத்தைத்தருவதாக இருக்கலாம்.

விசுவாசத்திற்கும், பரிசுத்த கற்புக்கும் விரோதமான சோதனைகளுக்கு ஓடிஒளிவதே உபாயம். இவ்விதம் ஓடி ஒளிவது கோமைத்தனம் அல்ல. ஏனெனில், சண்டையால் தோல்வி அடைவாய் என்று உறுதியாகத் தெரிந்திருந்தால் அதைவிட்டு விலகுவது கோழைத்தனமா?

"வீரத்தில் சிறந்தது விமரிசை"

நமது பலவீனத்தை அறிந்து எச்சரிக்கையாக இருப்பது கோழையின் குணமல்ல. அது விவேகம் ஆகும்.

# 5. குணபான்மையின் தொகுதி அமைப்பு புண்ணியப் பொதுக் கொள்கைகள்.

## 25. நற்குணபான்மையின் தொகுதி யாது?

நமது செயல்கள் யாவையும், ஒழுங்குபடுத்திக் கட்டுப் படுத்தத்தக்க கொள்கைகள் ஒன்றுசேர்ந்து நற்குண பான்மை என்னும் தொகுதியாகிறது. அந்தக் கொள்கை களைத் தவருது பின்பற்றி, நமது வாழ்க்கையில் அமைத்து நடக்கும்போது அவற்றிற்குப்புண்ணியங்கள் என்ற பெயர் வழங்குகிறது. எளிதாகவும், தவருமலும் நற்செயல்கள் செய்யத்தக்க உள்ள உரமே புணணியம் எனப்படும்.

## 26. அறநெறிக்கடுத்த சாதாரண புண்ணியங்கள் யாவை?

விமரிசை, நீதி, திடம், மட்டாயிருத்தல் என நான்கு. விமரிசையால் நமது செயல்கள் தம்மிலே தகுந்தவைகளா கின்றன. நீதியானது பிறர்மட்டில் அவை தகுந்தவை களாகச் செய்கின்றன. திடம் அல்லது தைரியம், மட் டாயிருத்தல் அல்லது மிதம் ஆகிய இரண்டும் நமக்கு வரும் இடையூறுகளை விலககுகின்றது

## 27. நீதி என்ருல் என்ன?

ஒவ்வொருவருக்கும் உரியதை அவர்களுக்குக் கொடுப் பதே நீதியாகும். மக்களின் உடைமை, உயிர், உடல், ஆன்மா இவற்றின் உரிமைகளைப் பொதுநலத்துக்குத் தீங்கு நேராதவகையில் பாதுகாப்பது. சுதந்திரம், நற் பெயர், பண்பு, உடல்நலம், குடும்பம், சமூகம், சமூக நிலைக் குரிய அவனது வாழ்க்கைத்தரம்—தொழிலாளியாயிருந்தால் அவனது குடும்பநிலை—யாவற்றுக்கும் மேலாக அவன் உயி ரைக் காப்பாற்றிக்கொள்வதில் அவனுக்குள்ள உரிமை. இன்ப வாழ்க்கை நடத்த அவனுக்குள்ள ஆர்வம், ஆகிய வற்றை—நியாயத்துக்கு ஏற்ற வகையில் சீர்தூக்கி ஆவன செய்வது நீதி என்பதைச் சார்ந்ததாகும்.

## 28. நீதிக்கு விரோதமாக நடப்பது கனமான குற்றமா ?

எத்தகைய உரிமைகள் தாக்கப்பட்டு அதனுல் ஏற்படும் துன்பத்தின்தரம் கணிக்கப்படுகிறதோ, அவ்வளவு கனு கனமுடையது நீதிக்கு விரோதமாகச் செய்யப்படும் குற்றம்.

## 29. உரிமை என்பது என்ன?

ஒருவன் தன் சொந்தமானது என்று பாராட்டக்கூடிய எந்தக் காரியமும் உரிமை எனலாம். அதாவது பிறரிடம் இருந்து நியாயமாக எதிர்பார்க்கக்கூடிய எந்தக் காரியமும் அவனுக்கு உரிமை.

## 30. உரிமைக்கும். கடமைக்கும் உள்ள தொடர்பு என்ன ?

இரண்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஒரு சாராருக்கு ஒரு உரிமை உண்டானுல், மறு சாராருக்கு அதைப்பற்றிய கடமை உண்டு.

## 31. யார் யாருக்கு உரிமைகள் உண்டு?

கடவுளுக்கும், பிறருக்கும், நமக்கும் உரிமைகள் உண்டு.

## 32. கடவுளுடைய உரிமைகளும் அவர் மட்டில் நமக்குள்ள கடமைகளும் யாவை?

நம்மை உண்டாக்கின சிருஷ்டிகளுக்குரிய உரிமையும், நம்மை ஆண்டுவரும் எஜமானனுக்குரிய உரிமையும், கடவுளுடைய உரிமைகள். அவரை அறிந்து அவருடைய நன்மைத்தனத்தையும், குணநலன்களேயும், ஆராதித்து வணங்கித் துதித்து, கொண்டாடி, அவரின்றி நாமில்லை என்பதை ஏற்றுக்கொண்டு அவருடைய கட்டளேப்படி நடப்பது நமது கடமை.

## 33. பிறருடைய உரிமைகளும், அவர் மட்டில் நமக்கு உள்ள கடமைகளும் யாவை?

தங்கள் உயிர், உடல், சுவாதீனம், சொத்து, தன் மதிப்பு இவற்றிற்கு ஆபத்து நேரிடாதிருக்கப் பிறருக்கு உரிமை உண்டு. உண்மையை அறியவும் உரிமை உண்டு. பிறரோடு உறவாடுவதில் நீதி, நேர்மை, உண்மைப் பிரகாரம் நடக்க நமக்கு கடமை உண்டு. அவர்களை ஏமாற்ருமலும், அவர்களுடைய உயிர், உடல், சுவாதீனம், சொத்து, கீர்த்திக்குத் தீங்கு விளைவிக்காமலும் இருக்க நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

## 34. நமது சொந்த உரிமைகளும், நம்மீது நமக்குள்ள கடமைகளும் என்ன?

பிறருக்குள்ள உரிமைகள்தான் நமக்கும் உண்டு. நமது உயிரையும், உடல் நலத்தையும் கவனிப்பது நமது தத்துவங்கள் அனைத்தையும் நல்வழியில் பயன்படுத்தி, தவருன வழிகளைத் தவிர்ப்பது நாம் அடையவேண்டிய கடைசிக் கதிகளாகிய மோட்ச இன்பத்தைப் பாவத்தால் இழந்து போகாதபடி நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுதல் —ஆகிய இவை நம்மீது நமக்குள்ள கடமைகள்.

## 35. நம்மீதும், பிறர்மீதும் உள்ள கடமைகள், கடவுள் மட்டில் நமக்குள்ள கடமைகளில் இருந்து முழுவதும் வேறுபட்டனவா?

இல்லை. சகல உரிமைகளும், முடிவில் கடவுளுக்கே சொந்தம். ஆகையால் நம்மீதும், பிறர்மீதும் நமக்குள்ள கடமைகள், கடவுள்மட்டில் உள்ள கடமை என்றே சொல்ல வேண்டும். அவ்வாறு இருக்கும்போது அவற்றை வேருகப் பிரித்துக் கூறுவதேதெனில் சில உரிமைகள் கடவுளுக்கு மட்டும் உரித்தானவை; வேறு சில உரிமைகள் அவர்

மக்களுக்கு அளித்து, நமக்குத்தானே உரித்தானதுபோல் நாம் அவற்றை மதித்துப் பாராட்டி வரும்படியாக நமக்குக் கற்பித்திருக்கிறார்.

## 36. நமக்கு அல்லது பிறருக்கு விரோதமான பாவம் கடவுளுக்கும் ஏற்காதா?

அத்தகைய ஒவ்வொரு பாவமும் கடவுளுக்கு ஏற்காத குற்றம்தான் ஏனெனில் அது அவருடைய கற்பனையை மீறுவது ஆகும், தீங்கு நேரிடுவது நமக்கு அல்லது பிறருக்குஎன்பது உண்மைதான். ஆனால்பாவம் கடவுளுக்கு விரோதமானதே'

## 37. நமக்காவது பிறருக்காவது நற்செயல் செய்தால் அது கடவுள் மட்டிலும் நற்செயல் எனப்படுமா ?

ஆம். ஏனெனில் அந்தநற்செயல் அவருடைய கட்டளையையும். அவரிடத்து நமக்குள்ள கடமையையும் அனுசரிப்பதால் ஏற்பட்டவையேயன்று வேறல்ல. ஆகையால் நமது பெற்றோருக்கும், பெரியோருக்கும் அரசியல்அதிகாரிகட்கும், சட்டதிட்டங்கட்கும் கீழ்ப்படியும்போது எல்லா அதிகாரத்துக்கும் ஊற்றாகிய இறைவனுக்கே கீழ்ப்படிகிறோம் என்பதை உணரவேண்டும்.

## 38. நீதிக்கு விரோதமாக செய்யப்பட்ட குற்றத்தை நீக்குவதற்கு செய்யவேண்டியதென்ன ?

நீதிக்கு விரோதமாக செய்யப்படும் குற்றம் கடவுளுக்கு மட்டும் விரோதமானதல்ல. நமது அயலாருக்கும் விரோதமாகும். துன்புறுத்தப்பட்டோர், அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டாலன்றி துன்பமிழைத்தோர் அதற்கேற்ற பரிகாரம் செய்யக் கடமைப்பட்டவராவர். அவ்வாறே ஒரு வேலைக்காரனுக்கு அநியாயமான கூலி கொடுக்கப்பட்டால், அதை நீக்குவதற்கேற்ற ஈடுசெய்யவேண்டும். எடுத்துக்

காட்டாக அவனது வயோதிக காலத்துக்கு ஆதாரமாக ஏதேனும் செய்வதன் மூலம் சரிக்கட்டலாம். ஒருவரைப்பற்றி அவதூறு. பொய் வதந்திகளைப் பரப்பியிருந்தால், தன்னால் இயன்றவரை முயன்று அவரது நற்பெயரையும், கீர்த்தியையும் நிலைநாட்ட ஆவன செய்யவேண்டும்.

## 39. பிறருடைய நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவது பற்றி நமது கருத்தென்ன ?

மக்கள் தமது நற்பெயரை, செல்வத்தைவிட சிறப்பாக மதிக்கின்றனர். அத்தகைய பெருமைக்குரியதை, நாம் அநியாயமாக அவதூறு. பழிச்சொல், புறணி, ஆராயாத தீர்மானம் முதலியவற்றால் சிறுமைப்படுத்துவோமானால், அவர்களுடைய உடைமைகளுக்கு இழைக்கும் தீங்கைவிட அதிகமான தீமையைச் செய்தவர்களாவோம். எனவே இத்தகைய குற்றங்களுக்கு நம் சக்திக்கு ஏற்றவாறு பரிகாரம் செய்யக் கடமைப்பட்டவர்களாவோம். ஆனால் இந்தக் கடமையை நிறைவேற்றுவது அவ்வளவு எளிதல்ல.

## 40. உடமைகளைப் பொருத்தமட்டில் அடிக்கடி ஏற்படக்கூடிய அநீதிகள் என்ன ?

திருட்டு, கொள்ளையிடுதல், ஏமாற்றுதல், ஏழைகளைத் துன்புறுத்துதல், வேலைக்காரர்களுக்கும், தொழிலாளருக்கும் சரியான கூலி கொடாதிருத்தல், கடனையும், ஒப்பந்தங்களையும் தீர்ப்பதில் அசட்டையாயிருத்தல். அநியாய வட்டி, பிறருடைய பொருட்களுக்கு சேதம் வருவித்தல் முதலியவை.

## 41. நீதியைப்பற்றி நாம் அறிந்துகொள்ளக் கூடிய முக்கியமான படிப்பினை யாது ?

(a) பிறருடைய உடைமை எவ்வளவு அற்பமாயிருந்தாலும், அதை நமதாக்கிக்கொள்ள நம்மில் எழும் ஆசையை உடனே, உள்ள உறுதியுடன் தள்ளிவிடவேண்டும். பிறருடைமையை விழுங்கி ஏப்பமிடும் பெரும் பேராசைக்காரர்

கள் துவக்கத்தில் சிறு சிறு பொருட்களை அபகரித்துப் பழகினதால்தான் பிற்காலத்தில் பல ஏழைகளின் ஜீவனத்துக்கு ஆதாரமானவற்றை ஏமாற்றி பிடுங்கிக்கொள்ளத் தயங்கவில்லை

(b) ஒரு இளைஞன், பரிசுத்தத்தனத்துக்கு விரோதமான எண்ணத்திலோ, ஆசையிலோ மூழ்கி அதை வளரச் செய்தால் அவன் மிக விரைவில்; வெட்கத்துக்குரிய நடத்தையில் இன்பமடைபவன் ஆகிவிடுவான். அது போலவே நாம் சட்டபூர்வமாக சம்பாதித்து பொருளீட்ட ஆசிக்காமல், மற்றவர்களுடைய பொருட்களை நயவஞ்சகமாகக் கவர்ந்துகொள்ள முயற்சிக்கும்போது நாம் நேர்மையற்ற தன்மைக்கு எளிதில் அடிமையாகிவிடுவோம்.

## 42. ஏழைகளைப் பொறுத்தமட்டில் அநீதியானது மிகவும் கனமான குற்றமாகக் கருதப்படுவது ஏன்?

ஏனெனில் அவர்களது வறுமையும், தேவைகளுமே இதற்குக் காரணம் மிகவும் சிறிய அநீதியான நிகழ்ச்சி கூட, அவர்களைப் பொறுத்தமட்டில் மிகப் பெரிய அளவில் நஷ்டத்தையும், துன்பத்தையும், கடின உழைப்பையும் ஏற்படுத்தலாம். ஆகவே, அதற்கொத்த அளவில் அது கடவுளுக்கு விரோதமான பெருங்குற்றமாகலாம் பற்ற மக்களைப் போலவே, ஏழைகளும் இறைவனின் மக்களாவர். அவர்களுக்குத் தீங்கு செய்யும்போது அவர்களது பரலோகப் பிதாவை அவமதிப்பதாகும். அதனால்தான் நாம் இத்தகைய பாவங்கட்கு, மனஸ்தாபப்பட்டு, கடவுளிடம் பொறுத்தல் அடைவது மட்டும் போதாது. நம்மால் இயன்றவரை முயன்று நம்மால் வஞ்சிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரத்தின் வழியாக ஈடு செய்யவேண்டும்.

43. ஏழைகளைத் துனபுறுத்துதலுக்கு சில உதா ரணம் தருக.

நீதிக்கும். பிறர் சிநேகத்துக்கும் மேற்பட்ட வகையில் அவர்களை வற்புறுத்தி வேலை வாங்குதல்; வேலைக்குத் தகுந்த கூலி கொடாயலிருப்பது; அநீத வட்டி வாங்குதல்; ஒப்பந்தங்களில் ஏமாற்றி ஊதியம் பெறுதல்; அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தை அனுவசியமாகக் காலந் தாழ்த்திக் கொடுத்தல் அல்லது கொடுக்க மறுத்தல்; உணவுப் பொருட்களை அதிக விலைக்குக் கொடுத்தல்; அதிக மான வாடகை வாங்குதல்; குடிநீர் வசதிகள் செய்து கொடுக்க மறுத்தல்; அவர்களது குழந்தைகள் கல்வி கற்ப தற்குரிய வசதிகளைக் கொடுக்காமை—ஆகியவைகள்.

44. நீதிக்கடுத்த முறையில், வேலைக்காரர் களுக்கும், தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டிய தொகை யாது?

அவர்கள் வாழும் சமூகத்துக்கு ஏற்றவகையில், சிக்கன மாகவும், சீராகவும் தங்கள் வாழ்க்கைத்தரத்தை அமைத்துக் கொள்ளவும், மக்கட்பண்புக்கு ஏற்ற வகையில் மதிப்புடன் வாழவும், வியாதி, வயோதிகம் முதலியவற்றிற்கு ஆதார மாக இருக்கும்படி சிறுசேமிப்பு சேர்த்து வைத்துககொள்ள வும் ஆகியவிததத்தில் அவர்களுக்கு ஊதியம் அளிக்க வேண்டும்.

# 6. பிறர் சிநேகம்

45. நீதிக்கும் பிறர் சினேகத்துக்குமுள்ள வேறு பாடு யாது?

பிறருக்கு உரியதை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று நீதி கூறுகிறது; ஆனால் பிறர் சினேகமோ, அவனி டம் இல்லாத பொருளை, ஆனால் அவனுக்குத் தேவைப்படு வதை நாம் மிகுந்த அளவில் வைத்திருந்து அதன் தேவை

நமக்கு அவசியம் இல்லாதிருக்கும்போது, அதனை நமது பிறனுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என எதிர்பார்க்கிறது. நீதியானது ஒருவனுடைய உரிமை; அதன் இயல்பு பொறுப்புணர்ச்சி, கடமை ஆகியவற்றினை அறுதியிட்டுக் கூறுகிறது. பிறர் சிநேகமோ இந்தவிஷயங்களில் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. ஒருவன் மிக நெருக்கடியான நிலைமையில் இருக்கும்போது மட்டுமே உதவி செய்ய வேண்டும், என்றாலும் இயல்பாகவே பிறர் சிநேகத்தின் அளவு மிகவும் விரிந்து பரந்திருப்பதாகும்.

## 46. பிறர் சிநேகத்தைப் பொறுத்த கடமைகள், நீதியைப்போல் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லையா?

அதைப்பற்றித் திட்டவட்டமாய் கூறமுடியாது. ஆனால் நீதியினால் ஏற்பட்டுள்ள கடமைகளை அனுசரிக்க வேண்டியதுபோல் நாம் மனமிரங்கி மற்றவர்களுக்கு உதவி செய்வதை கடமையாகக்கொள்ளவேண்டியதில்லை. அது நமது இரக்கத்தையும், தாராள குணத்தையும் பொறுத்து அமைவது.

## 47. பிறர் சிநேகச் சட்டம், நாம் பிறருக்கு நமது உடமைகளை பகிர்ந்தளிப்பதை மட்டும்தானா கற்பிக்கிறது?

இல்லை. எல்லாவிதமான உதவியையும் நாம் பிறருக்குச் செய்யவேண்டும் என்று கற்பிக்கிறது. உடலுக்கடுத்ததும், ஆன்மாவுக்கடுத்ததுமான சகலத்திலும் நாம், நமது பிறனுக்கு உதவி செய்யவேண்டும். அவனுக்கு நம்மால் இயன்ற உடலுழைப்பையும், அனுதாபம், அறிவுரை, அறவுரை, மருத்துவ உதவி, பொருளாதார உதவிகளையும் செய்யவேண்டும் எல்லாவற்றிற்கும் மேலாக அவனது ஆன்மீக விஷயத்தில் உதவி செய்ய மிகவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

## 48. பிறனுக்கு உதவுவது எவ்வாறு?

நமது உற்ருர், உறவினர், பெற்ருேர், சுற்றத்தார் முதலியவர்கள் நமக்கு நெருங்கிய தொடர்புடைய அயலார் ஆவர். ஆனுல் மக்கள் யாவரும் கடவுளின் பிள்ளைகள் என்ற முறையில் அனைவரும் நமது அயலாரே! மேலும் கடவுள் நமக்களித்துள்ள நன்கொடைகளுக்கும், நமது பொறுப்பில் ஒப்படைத்திருக்கும் பொருட்களுக்கும் அவருக்கு நாம் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். எனவே நம்மைச் சுற்றிலும் வசிக்கும் மக்களிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்ளுகிருேம் என்றும் அவர்களும் கடவுளால் நமக்குக் கொடுக்கப் பட்ட உதவியாளர்கள் என்பதால், அவர்களிடம் நாம் பழகும் முறைகளைப்பற்றியும் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கும்.

## 49. நமக்கு தீங்கு செய்தவர்களுக்கும் நாம் உதவி செய்யவேண்டுமா?

ஆம். அவர்களும் கடவுளின் பிள்ளைகள் ஆனபடியால் நமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் உதவி செய்யவேண்டும்.

## 50. முக்கியமான சில தர்மக் கிரிகைகள் யாவை?

இவை ஆத்துமத்துக்கடுத்தவை; சரீரத்துக்கடுத்தவை என இரு வகைப்படும்.

ஆத்துமத்துக்கடுத்த தர்மக் கிரிகைகள் :—

1. பாவிகளை மனந்திருப்புகிறது.
2. தெரியாதவர்களுக்குப் படிப்பிக்கிறது.
3. சந்தேகப்படுகிறவர்களுக்குப் புத்தி சொல்லுகிறது.
4. கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லுகிறது.
5. நிந்தைகளைப் பொறுமையுடன் சகிக்கிறது.

6. பொல்லாப்புகளைப் பொறுத்துக்கொள்ளுகிறது.
7. சீவியர்களுக்காகவும், மரித்தவர்களுக்காகவும் கடவுளை மன்றாடுகிறது!

சரீரத்துக்கடுத்த தர்மக் கிரிகைகள் :—

1. பசியாயிருக்கிறவர்களுக்குப்போஜனம் கொடுப்பது
2. தாகமாயிருப்பவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பது.
3. உடை இல்லாதவர்களுக்கு உடை அளிப்பது.
4. பரதேசிகளுக்கு இடம் கொடுக்கிறது.
5. நோயாளிகளைச் சந்திப்பது.
6. சிறையிலிருப்பவர்களைச் சந்திப்பது.
7. மரித்தவர்களை அடக்கம் செய்கிறது.

# 7. கருணையுடமை

## 51. தண்டனை அளிப்பது எப்போதும் கொடுமைப்படுத்துவது ஆகுமா?

இல்லை. சில சமயங்களில் ஒருவருடைய நன்மையைக் கருதி சில வருந்தத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. அதன்மூலம் அவர்களுக்குப் பெரிய நன்மையும், பெருந்தீங்குகளிலிருந்து தப்பிக்கும் வாய்ப்பும் உண்டாகலாம். எடுத்துக்காட்டாக உயிரைக் காக்கும்பொருட்டு நோயாளியின் கை, கால் முதலியவற்றை நீக்கிவிடுதல், பிள்ளைகள் குற்றம் செய்யும்போது தண்டித்தல், பொது நலத்தைப் பாதுகாக்கத் திருட்டு, கொலை முதலியவற்றிற்குக் கடின தண்டனை வழங்குதல் முதலியவை.

## 52. கொடுமைகளுள் மிகக்கொடியது என்று கருதப்படும் செயல் யாது?

மிகக் குரூரமான செயல், மனித உயிரை அநியாயமாகக் கொல்வது. பிறக்காமல் இருக்கும் சிசுவை அழிப்பது

மிகவும் கொடிய செயலாகும். இதைப்போலவே, மனித உயிரை சித்திரவதை செய்வதும். சிறையில் கொடிய தண்டனைகளை மனித சுபாவத்துக்கு மீறியமுறையில் அளித்தலும், கொடுமை ஆகும்.

## 53. மனித உயிரை மனதார அழிப்பது நீதிக்கு ஏற்றதாகும் சந்தர்ப்பம் ஆகலாமா?

சட்டபூர்வமான முறையில் தற்பாதுகாப்புக்காகத் தன் உயிருக்கு அபாயம் நேரும்போதும், பொதுநலத்தைக் காக்கும் பொருட்டும் பிறருடைய உயிரை நீக்கலாம். உதாரணமாகத் தன்னை ஒருவன் கொல்ல முயற்சிக்கும்போது; நீதியான முறையில் நடக்கும் போரில் மற்றவர்களைக் கொல்லலாம்.

## 54. தற்காப்புக்காகப் பிற உயிரைக் கொல்லுவதற்குரிய நிபந்தனைகள் யாவை?

1. ஒருவன் நம்மை அநீதியாகத் தாக்குபவனாக இருக்கவேண்டும்.

2. அவனது உயிரை வாங்குவதைத் தவிர, நம்மைக் காப்பாற்றிக்கொள்ள வேறு எந்தவழியும் இல்லாமல் இருக்கவேண்டும்.

இந்த இரு சந்தர்ப்பங்களிலும் நாம் பிறனுடைய உயிரைக் கொல்லலாம்.

## 55. கருணையுடமை நமது வெளிச்செயல்களை மட்டும் பொறுத்ததா?

இல்லை. தமது உள்ளத்தில் எழும் எண்ணங்கள் உணர்ச்சிகளையும் பொறுத்தது. இவைகளை சரியான விதத்தில் பயிற்சித்து அடக்காவிட்டால் அவை வெளிப்படையான அநீத செயல்களைச் செய்யத் தூண்டுகோலாகும். எனவே நமது கோபம், வைராக்கியம், பகை, பழி

வாங்கும் எண்ணம் பொருமை ஆகியவற்றை அடக்கியாள முயற்சிக்கவேண்டும். இந்த காரணங்களுக்காகவே, சண்டை சச்சரவு விடுதல் கலகம் விளைவித்தல் முதலியவைகளை நீக்கி, பணிவு, சாந்தம், மரியாதை, அமைதி முதலிய நற்குணப் பயிற்சிகளையும் அனுசரிக்கவேண்டும்.

## 56. பிராணிகளைப் பொறுத்தமட்டில் நமது ஜீவ காருண்யம் எவ்வாறு இருக்கவேண்டும்?

பிராணிகளும் கடவுளால் படைக்கப்பட்டவைகள் என்பதை மனதில் வைத்து அவைகளுக்கு அநாவசியமான துன்பங்களை இழைக்கக்கூடாது. நம்மால் தகுந்த விதமான முறையில் உணவு கொடுத்து போஷிக்க முடியாத அளவுக்குப் பிராணிகளை வளர்க்கக் கூடாது. அவைகள் கடவுளின் படைப்புகள் என்றமுறையில் மதித்துப் பாதுகாக்கவேண்டும். ஆனல் நம்முடன் வாழும் மக்கள் அவற்றைவிட சிறந்தவர்கள் என்பதை மறந்துவிடலாகாது. ஏனெனில் இயற்கைத்தத்துவங்களே, மனிதர்கள் பிராணிகளைவிட மேலானவர்கள் என்பதைப் பறைசாற்றுகின்றன. மக்களில் சிலர் மனித உயிர், பிராணிகளைவிட சிறந்தது, மேலானது என்பதை நூலளவில் மறுத்தாலும், அதை நடைமுறையில் எல்லோரும் ஒத்துக்கொள்ளுகின்றனர்.

# 8. திடம் அல்லது தைரியம்

## 57. திடம் என்ருல் என்ன?

நமது கடமையை நிறைவேற்றுவது கடினமாயிருந்தாலும் கஷ்டத்தைப் பாராது கடமையைச் செய்து முடிப்பதற்கான மன உறுதியைத்தான் திடம் என அழைக்கிருேம்.

## 58. நமது கடமை எவ்வெவ்விதத்தில் கடினமாய் இருக்கக்கூடும் ?

சில சமயம் அதில் உடல் வருத்தம் இருக்கலாம். களைப்பு, அசதி, சோம்பல் அல்லது உடல் நலக்குறைவு ஏற்படும்போது இது உண்டாகும். சில சமயம் மனதுக்கு வருத்தம் ஏற்படலாம். நாம் செய்ய விரும்புகிற அல்லது செய்ய நினைக்கும் எந்தக் காரியத்தையாவது, நமது கடமைக் குறுக்கிட்டுத் தடை செய்தால் இது நேரிடக் கூடும். ஆசாபாசங்கள் கிளர்ச்சிகொண்டு எழும்பினால் அவற்றை எதிர்ப்பதில் கஷ்டம் ஏற்பட்டு, கடமையைச் செய்வது கடினமாயிருக்கக் கூடும். வேறு சில சமயங்களில் நாம் கடமையைச் செய்வதால் நமக்குப் பிரியமான பொருட்களை இழக்க நேரிடலாம். அல்லது நாம் கடமையைச் செய்வது கண்டு பிறர் நம்மைக் கேலி பண்ணி நகைக்கலாம். அல்லது அதைச் செய்யாதபடி தடை செய்யலாம். உதாரணமாக கிறிஸ்துவ வேதசாட்சிகள் தங்கள் வேதத்தை மறுதலிப்பதைவிட கொடிய வேதனைகளை அனுபவிக்கவும் மனதாயிருந்தனர், உயிரையும் கொடுத்தார்கள். இதனால் அவர்கள் மனத்திடம் சிறந்த முறையில் வெளிப்படையாகத் தெரிகிறது.

## 59. மனத்திடத்தில் அல்லது தைரியத்தில் பயிற்சி அடைவதெப்படி ?

நமது கடமை கடினமாய்த் தோன்றினாலும் அதை நிறைவேற்றுவதில் பிரமாணிக்கமும், மன உறுதியும் காட்டி தைரியமாய் கஷ்டங்களையும், இடையூறுகளையும் சகித்து தடைகள் ஏற்படுவதினிமித்தம் பயிற்சித்து வெற்றி பெறலாம்.

பாவம் சகல தீமைகளிலும் பெரியது. புண்ணியம் சகலத்திலும் சிறந்த நன்மை ; தற்போது நமது கஷ்டங்களை எவ்வளவுக்குப் பொறுத்துக் கொள்கிறோமோ, அவ்

வளவுக்கவ்வளவு, பிற்பாடு அவற்றைப் பொறுத்துக்கொள்வது எளிதாகும். நமது கஷ்டத்துக்குத் தகுந்த அளவு நமது சம்பாவனையும் அதிகமாகும் "—என்ற சிந்தனைகள் நமக்கு மிகவும் உதவியாகும்.

# 9. மிதம் அல்லது மட்டாயிருத்தல்

## 60. மட்டாயிருத்தல் என்பது என்ன ?

இன்பத்தை அனுபவிப்பதிலுள்ள சுகத்தை மிதமிஞ்சி பொருட்படுத்தாமல் நமது கடமையை நிறைவேற்றத்தக்க மன உறுதியே "மட்டாயிருத்தல்" எனப்படும்.

## 61. எல்லாவிதமான இன்பமும் கெட்டதா ?

இல்லை. இன்பம் இறைவனது நன்கொடைகளுள் ஒன்று. நாம் ஆர்வத்துடனும், எளிதாகவும் நமது அலுவல்களைச் செய்வதற்கு உதவியாக இருப்பது. இந்த நோக்கத்துடன், அதைப் பயன்படுத்திக்கொள்ளும்வரை அது நன்மையானதுதான்.

## 62. இன்பம் தீமையாகிறது எப்படி ?

இன்பத்தை அடைவதற்காகத் தீய காரியங்களைச் செய்தால் அல்லது நமது கடமையை அலட்சியம் பண்ணினால், இன்பம் தீமையாகிறது.

## 63. இன்பத்துக்காகவே என்று செய்யும் சில தீய காரியங்களைக் குறிப்பிடுக ?

நாவினால் அடையும் சுவை இன்பத்துக்காக அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுதல், அளவுக்கு மீறி மது வகைகளைக் குடித்தல், தனியே அல்லது பிறரோடு சிற்றின்பத்துக் கடுத்த கிரிகைகளைச் செய்தல், கடமையைச் செய்யாமல்,

விளையாட்டு வேடிக்கைகளில் பொழுது போக்குதல்; நமது சக்திக்கு மேற்பட்ட விதத்தில் பந்தயம் வைத்தல், சூது விளையாடுதல்; முதலியன.

## 64. எதிலும் மட்டாயிருக்கப் பயிற்சிப்பது எவ்வாறு?

இன்ப சுகங்களில் மட்டுத்திட்டமாயிருத்தல் உடலின்ப உணர்ச்சி உக்கிரமாய் நம்மைத் தாக்குமுன் அதை விலக்க முயற்சித்தல், பிறருடைய நன்மையை முன்னிட்டு, நமது இன்ப சுகங்களைத் தியாகம் செய்தல் துன்பத்தை தைரிய மாய் ஏற்றுக்கொள்ளுதல் இவை போன்ற பயிற்சிகளால் மிதமுடைமையை பழக்கத்துக்குக் கொண்டுவரலாம்.

## 65. இறுதியில் கூறியது (துன்பத்தைத் தைரிய மாய் ஏற்றுக்கொள்ளுதல்) திடம் என்னும் புண்ணியத்தைச் சார்ந்ததல்லவா?

ஆம்; திடமும், மட்டாயிருத்தலும் ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய தொடர்புடைய புண்ணியங்கள்.

## 66. இவையிரண்டும் தொடர்புடையவையாய் இருப்பதேன்?

இன்ப சுகத்தை வேண்டாம் என்று நீக்குவது மிகவும் சிரமமான காரியம். மனவுறுதி இருந்தால்தான் இவ்விதம் செய்ய முடியும். மேலும் நாம் இன்பத்தையே தொடர்ந்து அனுபவித்தால் நமது மன உறுதி குன்றி திடமற்றவர்கள் ஆகிறோம் துன்ப வருத்தங்களைச் சுகிக்கும் பழக்கம் இருந் தால் அவசியமானபோது, இன்பத்தைக் கைவிடப் போது மான மன வலிமையையும், உறுதியையும் அடைவோம்.

# 10. மிதமுடைமை

## 67. மிதமுடைமை என்னும் ஒழுக்கச் சட்டம் நம்மிடம் எதிர்பார்ப்பது யாது?

நமது தத்துவங்களையும், சக்திகளையும், சரியான முறையில் அடக்கியாளவும், நமது உணர்ச்சிகள், எழுச்சிகள், கவர்ச்சிகள் ஆகியவற்றை சரியான விதத்தில் செலுத்தவும், நமது ஆத்ம தத்துவங்களையும். பல உணர்ச்சிகளையும் நன்முறையில் நடத்தவும் மிதமுடைமை கற்பிக்கிறது. ஏனெனில் நமது ஐம்புல உணர்ச்சிகள் எளிதில் நம்மை மேற்கொண்டு விடும் சக்தியுடையவை எனவே மிதமுடைமையை இவ் விஷயத்தில் கண்டிப்பாக அனுசரிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

## 68. மிதமுடைமை, முழுதும் விலக்கிவிடல் இவற்றிற்கு ஏதேனும் வேறுபாடு உண்டோ?

ஆம். மிதமுடைமை என்பது, சட்டபூர்வமான அனுமதிக்கப்பட்டுள்ள இன்பங்களை, ஒருகுறிப்பிட்ட அளவோடு அனுபவிப்பது. ஆனல் முழுவதும் விலக்கிவிடல் என்பது அவற்றை ஒரு சிறிதும் அனுபவிக்காமல் முழுவதும் நீக்கி விடுதலாகும். சில விஷயங்களில் இந்த முழு நீக்கம். மிதமுடையைக் கையாள வழியாக இருக்கலாம்.

## 69. எந்தெந்த காரியங்களில் நாம் மிதமுடைமையை அனுசரிக்கவேண்டும்?

சிறப்பாக உணவு, பான வகைகளிலும், ஐம்புல இன்பங்களிலும் அதைக் கையாளவேண்டும் ஏனெனில் இந்தக்காரியங்களில்தான் நாம் எளிதாகத் தவறிவிடுகிறோம். விசேஷமாகப் போதை தரும் பானங்களைக் குடிப்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## 70. மதுவகைகளை மிதமிஞ்சி உபயோகிப்பதால் ஏற்படும் தீங்கு யாது?

(1) போதைகொள்ளும் வரை மதுவைக்குடிப்பதால் தேவசாயலாக உண்டாக்கப்பட்டுள்ள மனிதனின் மதிப்பு அழிந்துவிடுகிறது. எனவே ஒரு கனமான பாவமாகும்.

(2) இயல்பாகவே இப்பழக்கம், சண்டை சச்சரவு, கலகம், அடிதடிப் பிரயோகம் முதலியவை ஏற்படக் காரணமாயிருக்கிறது.

(3) பல குடும்பங்கள் கெட்டழிவதற்குக் காரணமாயிருக்கிறது.

(4) வறுமை, நோய், பைத்தியம், ஏழ்மை முதலியவற்றிற்கு மூலகாரணமாகிறது.

## 71. போசனப்பிரியம் குற்றமாகக் கருதப்படுவது ஏன்?

ஏனெனில்:—

(1) நமது புல உணர்ச்சியைத் திருப்திப்படுத்த மட்டுமே நாம் உணவு வகைகளை உபயோகிக்கும்போது கடவுளால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒழுங்குமுறைக்குத் தடைசெய்கிறோம்.

(2) இப்பழக்கம் மிக எளிதாக நமக்கு நோயுண்டாக்கும வழியைத் தேடி தருகிறது.

(3) நம்மைத்தானே அடக்கியாளும் சக்தியை இத்தீயப்பழக்கம் குறைத்து, நாம் குணபான்மை உடையவர்களாக இருப்பதற்கு இடையூறாக இருக்கிறது.

# 11. தன்னலம் மறத்தல்

## 72. தன்னலம் மறத்தல் என்னும் நற்குணத்தை எவ்வாறு பயிற்சிக்கலாம்?

தன்னலமறுத்தலைப் பல வகைகளில் பயிற்சிக்கலாம். ஒருசந்தி, உபவாசம், விரதம், நோன்பு முதலியவற்றை அனுசரிப்பதாலும், நமது வாழ்க்கையை எளிதாக அமைத்துக் கொள்வதாலும், நமது பார்வை பேச்சு இவற்றைக் கட்டுப்படுத்திக் கொள்வதாலும், நமது புலனுணர்ச்சிகளை அடக்கி ஆளுவதாலும், தன்னலமறுத்தலைப் பயிற்சிக்கலாம்.

நாம் விரும்பும் சில இன்பங்களை அனுபவிக்காமல் இருப்பது நமக்கு விருப்பமில்லாத காரியங்களைச் செய்யும் போது நம்மில் இயல்பாகவே எழும் பொறுப்புணர்ச்சிகளைத் தாங்கிக்கொள்ளுதல் முதலியவை நமது சுபாவத்துக்கு இயல்பாகவே பிடித்தமாயிருப்பதில்லை. இவை ஒரு விதத்தில் சிறுசிறு தொந்தரவுகள் தான். மனதில் எரிச்சலை எழுப்புவன தான்! ஆனால் இவற்றை மனமுவந்து ஏற்றுக் கொள்வதில் தான் சுயநலம் தாக்கப்படுகிறது.

## 73. இளைஞர்கள் பயிற்சிக்கக் கூடிய தன்னல மறுப்புகள் யாவை?

இயற்கையிலேயே தீங்கற்ற பேச்சு, பார்வை, கேள்வி இவற்றில்கூட கட்டுபாடாக இருக்கப் பழகிக்கொள்ளுதல், மது வகை, லாகிரி வஸ்துக்களை உபயோகியாமை, பீடி, சிகரெட், சுருட்டு முதலியவற்றைப் புகைக்காமை, காலந் தவறாமை. ஒழுங்குடமைகளை நுணுக்கமாய் அனுசரித்தல். கடமையைச் சரியான நேரத்தில் சரியான முறையில் நிறைவேற்றல், சில சமயங்களில் இன்பமான பொழுதுபோக்குகளில் கலந்துகொள்ளாமை முதலியவை இளைஞர்கள் பயிற்சிக்கக்கூடிய தன்னலமறுப்புச் செயல்களாகும்.

74. தன்னல மறுத்தலைப் பயிற்சிப்பதற்குரிய நோக்கம் யாது?

நமது ஆன்ம தத்துவங்களை உறுதிப்படுத்தவும், நமது குணபான்மையை உருவாக்கவும், மனிதப் பண்புகளை வளர்ப்பதற்கும், இப்பயிற்சி அவசியமானது இதனால் நாம் எப்போதும்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு நமது செயல்களைச் செய்வோம்; உணர்ச்சி வசப்பட்டு, ஆத்திரமாகக் காரியங்களைச் செய்யமாட்டோம். இப்பயிற்சி ஆக்கவேலைக்கு ஏற்றதாக இருக்கவேண்டுமே தவிர, நமது உணர்ச்சிகளை மட்டும் கட்டுப்படுத்தும் கருவியாக இருக்கக் கூடாது.

இப்பயிற்சிகளை நாம் கடவுளின் அன்புக்காக, அல்லது நமது அயலாரின் நல்வாழ்வுக்காக என்று நாம் செய்வோமாகில் (பல துறவிகள் செய்வதுபோல்) இவை சமயத்துக் கடுத்த நற்பணிகளாக மாறும். அவற்றிற்கு கிடைக்கும் சம்பாவனைகளும் உயர்ந்த மதிப்பிற்குரியவைகளுமாயிருக்கும். ஆயிரக்கணக்கான இத்தகைய முயற்சிகள், மனிதன் இவ்வுலகத்திலேயே உயர்ந்தவிதமான வாழ்க்கையை அடைவதற்குத் தகுந்த வழிவகைகளாக அமையும். மறு உலக இன்பத்தை அடைவதற்குரிய ஏணியாக இருக்கும்.

# 12. சிறந்த ஒழுங்கு

75. மட்டாயிருத்தல் என்பது "மையநிலை" என்னும் பொருள்படும் அல்லவா?

ஆம், மத்தியமே புண்ணியம் என்பதுபோல மட்டாயிருத்தல் "மையநிலை" என்னும் பொருள்படும்.

## 76. "மத்திபமே புண்ணியம்" — என்பதன் பொருளென்ன?

அநேக காரியங்களில் எப்பக்கத்திலும் சாராமல் நடுமையமாய் இருப்பதில் தான் புண்ணியம் அடங்கியுள்ளது. எந்தப்பக்கம் சாய்ந்தாலும் பாவமாகிறது. இதைப்பற்றியே "மத்திபமே புண்ணியம்" என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

## 77. எந்த இரண்டு காரியங்களுக்கு மையமாய் இருப்பதால் விமரிசை என்னும் புண்ணியம் ஏற்படுகிறது?

நாம் எந்தவிதமாய் நடக்கவேண்டும் என்பதைப்பற்றி ஆலோசிக்காமல், அலட்சியமாய் இருத்தல் ஒன்று; அதைப் பற்றி அனாவசியமாய் அதிக நேரம் யோசித்து இறுதியில் ஒன்றும் செய்யாமல் போவது வேறொன்று. இந்த இரண்டு விதமான நடத்தைக்கும் இடைப்பட்டது விமரிசை; அல்லது விவேகம் ஆகும்.

## 78. நீதி என்கிற புண்ணியமும் நடுநிலைமையால் உண்டாவதென்று காட்டக்கூடுமா?

பிறருக்கு அளவுக்கு மீறி கொடுக்காமலும், குறைத்துக் கொடுக்காமலும் இருப்பவே நீதியாகும். குறைத்துக்கொடுத்தால் அவர்களுடைய உரிமையைக் கெடுக்கிறோம். அதிகமாய்க் கொடுக்கும்போது சில சமயங்களில் புண்ணியமாகலாம். ஆனால் சிலசமயங்களில், அது அவர்களுக்கு அல்லது நமக்கே தீமையாயிருக்கலாம்.

## 79. இதை சில எடுத்துக்காட்டுகளினால் விளக்குக.

பெற்றோர் பிள்ளைகளுக்குப் பணம் அதிகமாகக் கொடுப்பதால், அளவை அவர்களுக்கு மிதமிஞ்சின வசதிகளைத் தேடுவதால் அவர்களைக் கெடுக்கிறார்கள். பிள்ளைகள் செலவு

மாய் வளர்ந்து எப்போதும் இன்பத்தை நாடிப் பிற்காலத்தில் ஒன்றுக்கும் உதவாத வீணர்கள் ஆகிவிடுவார்கள். இது பிள்ளைகளுக்கும் தீமையல்லவா? தகுந்த காரணமின்றி தங்களுக்கு உரிமையானது என்று நினைத்துப் பிறர் கேட்பதெல்லாம் அவர்களுக்குக் கொடுப்பதால், அல்லது அவர்களுடைய தவருன கருத்துக்களை ஏற்றுக்கொள்வதால், அவர்களுக்கு நாம் தீங்கு செய்யக்கூடும்.

## 80. நடுநிலைமையால் திடம் அல்லது தைரியம் உண்டாவது எப்படி?

துன்பத்துக்குப் பயந்து கோழைத்தனமாய் இருக்கக்கூடும்; அல்லது முரட்டுத்தனமாய் முன்பின் யோசியாமல் துன்பங்களுக்கு நம்மை நாமே ஆளாக்கக்கூடும். கோழைத்தனமாய் நடப்பதற்கும், முரட்டுத்தனமாய் நடப்பதற்கும் "நடுநிலைமை" யாயுள்ளது தைரியம்.

## 81. மட்டாயிருத்தல் நடுநிலைமையால் உண்டாவது எவ்வாறு?

இன்பம் என்ருல் எல்லாவிதமான இன்பமும் நல்லது அல்லது கெட்டது என்று சொல்லாமல் இரண்டுக்கும் மத்திமமாயிருப்பது மிதம் அல்லது மட்டாயிருத்தல் ஆகும்.

## 82. இதை விளக்கிக் கூறுக.

சிலர் எல்லாவற்றையும் தவருன எண்ணத்துடன் கணித்து, தவருகவே உணர்ந்து, தங்களுக்கு நன்மை செய்யக்கூடிய இன்பத்தையும் நீக்கிவிடுகிருர்கள் வேறு சிலர் இதற்கு மாருக இன்பம் என்ருல் முழுவதும் சுகிக்கலாம் என்று பிறகு உணர்ந்து, தங்கள் கடமையையும் கவனிக்காமல், இன்பசுகத்தையே நாடி வீணர்களாகக்கூடும்.

## 83. இந்த நான்கு புண்ணியங்களுக்கும், குணபான்மைக்கும் உள்ள தொடர்பென்ன?

இந்த நான்கு புண்ணியங்களில் இருந்தும் நான்கு கொள்கைகள் உண்டாகின்றன. முக்கியமான பொதுக்

கொள்கைகளாகிய வாழ்க்கைச் சட்டத்தை (நினைவு, வாக்கு, கிரிகைகளில் தக்கதைச் செய்து தகாததை நீக்க) அனுசரிப்பதற்கு இந்த நான்கு கொள்கைகளும் உதவியாய் இருக்கின்றன.

## 13. விரோதமான தீயகுணங்கள்

84. மேற்கூறிய புண்ணியங்களைக் கைக்கொள்ளாமல் அவற்றிற்கு எதிராக, ஒருவன் வாழ்ந்தால், அவனுடைய நடத்தையைப்பற்றி என்ன சொல்வோம்?

சமயாசமயங்களில் புண்ணியங்களுக்கு மாருக, ஓரோர் காரியம் செய்தால், அதைப் பாவம் என்று சொல்வோம். ஆனல் வழக்கமாய் அதைச்செய்துவந்தால் அவனைத் தீய நடத்தை உடையவன் என்கிரும்.

85. தீயகுணங்கள், புண்ணியங்களுக்கு விரோதமாவது எங்ஙனம்?

ஒவ்வொரு தீய குணமும் "விமரிசைக்கு" — விரோதமானதே. ஏனெனில் தகுந்த காரியத்தைப்பற்றி சிந்திக்காமல் இருப்பதும், அல்லது அது வெற்றிகரமாக முடிவதற்குரிய வழிவகைகளைத் தேடாமல் இருப்பதும், பாவத்துக்குக் காரணம்! அதுபோலவே ஒவ்வொரு தீயகுணமும் "நீதிக்கு" விரோதம். ஏனென்ருல் கடவுளுக்கு, நமக்கு அல்லது பிறருக்குத் தீங்கு விளைகிறது பாவத்தால் தான். மேலும் ஒவ்வொரு தீயகுணமும் "தைரியம் அல்லது திடம்" என்னும் புண்ணியத்துக்கு விரோதம்; ஏனெனில் மனத்திடம் இல்லாதபடியால் தான் துன்பத்துக்குப் பயந்து பாவம் செய்கிரும்.

இறுதியாக ஒவ்வொரு தீயகுணமும் "மிதமுடமை அல்லது மட்டாயிருத்தலுக்கு விரோதம்" — எனலாம். ஏனெனில் ஏறக்குறைய எல்லாபாவமும் நமது சுகத்தையும் இன்பத்தையும் தேடுவதால்தான் உண்டாகிறது.

# 14. தீயகுணபான்மை ஏற்படுவது

## விசேஷ தீக்குணங்கள்

86. குணபான்மையை அடைவதில் நாம் கவனிக்கத்தக்கது யாது?

இரண்டு காரியங்கள் கவனிக்கத்தக்கது; முதலாவது நாம் நீக்கவேண்டிய தீயகுணங்கள், இரண்டாவது பயிற்சிக்க வேண்டிய நற்குணங்கள்.

87. தீக்குணம் என்பது என்ன?

புத்தியிலும், மனதிலும், ஆழமாய் வேரூன்றிப் பாவப் பழக்கத்தை உண்டாக்கும் துர்நாட்டப், தீக்குணம் எனப்படும்.

88. நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய தீய குணங்கள் யாவை?

அகங்காரம், பேராசை, காய்மகாரம் அல்லது பொறாமை கோபம், மோகம், போசனப்பிரியம், சோம்பல் ஆகிய ஏழு தீயகுணங்களாகும்.

89. எல்லாத் தீயசெயல்களையும், "தீயகுணம்" என்று ஏன் சொல்லக்கூடாது?

சில தீச்செயல்கள், பாவப்பழக்கத்தால் உண்டாவன அல்ல. ஏதோ ஒரு விசேஷ சோதனை அல்லது உள்ளக் கிளர்ச்சியால் நேரிடுகின்றன. அடிக்கடி இவை ஏற்படுவதில்லை. சமயாசமயங்களில் விளைகின்ற பாவங்கள் எடுத்துக் காட்டாக கொலை, கொள்ளை, பொய், 'பெரியோருக்குக் கீழ்ப்படியாமை, பொய்ப்பத்திரம் உண்டாக்குவது முதலியன. தீயகுணம் இப்படிப்பட்டதல்ல. ஒருவனின் குணபானமை அதாவது அவனுடைய இயல்பைக் காட்டுவது, இந்தச் சமயத்தில்தான் அது பாவமாகும் என்று திட்டமாய்க் கூறமுடியாது. எந்தச் சமயத்திலும் அது பாவத்துக்கு வழியாகக் கூடும்.

# 15. அகங்காரம் அல்லது தற்பெருமை

## 90. அகங்காரம் என்றால் என்ன?

அகம் + காரம், தான் என்னும் ஆணவம், நமக்கு மேற்பட்டவர்களையும், கீழ்ப்பட்டவர்களையும் அவமதிக்கும் விதமாகத் தன்னைத்தானே பெருமையாக எண்ணுதல் அகங்காரம் அல்லது ஆங்காரம் எனப்படும்.

## 91. நமக்கு மேற்பட்டவர்கள்மீது நமது ஆங்காரத்தைக் காட்டுவது எப்படி?

நாம் வைத்ததே சட்டம் என்பதுபோல, பிறர் சொல்வதைக் கவனியாமல், தன் இஷ்டம்போல் நமக்குத் தேடுவதினாலும், கடவுளையும் அவரது பிரதிநிதிகளான ஞான உலக அதிகாரிகளையும் அவமதித்து, அவர்களுக்கு விரோதமாய் புரட்சி செய்வதாலும் நமது ஆங்காரத்தைக் காட்டிக் கொள்கிறோம்.

## 92. நமக்குக் கீழ்ப்பட்டவர்கள் மட்டில் நமது ஆங்காரம் எவ்வாறு வெளியாகிறது?

அவர்களை நிந்தித்துக் கொடுமையாக நடத்துவதால் வெளியாகிறது.

## 93 ஆங்காரத்தோடு தொடர்புடைய வேறு தீய குணங்கள் யாவை?

தற்பெருமை; அதாவது தனக்குள்ள திறமை. அறிவு முதலிய குணங்களைப் பாராட்டி, அனைவரிலும் தன்னை மேலாக நினைத்து நினைத்து. தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளுதல். தொட்டால் சுருங்கிபோல, அற்ப சொற்ப காரியத்துக்கெல்லாம் கோபித்துக்கொள்வது. வீண் பெருமை அல்லது தான்செய்த மிகச்சிறிய காரியமும் தனக்குச் சிறப்பு என்பதாக நினைத்து, அதைப்பற்றி மகிழ்ச்சி அடைவது; தனது உரிமைகள், தத்துவங்கள், சக்தி

ஆகியவைபற்றிய தவருன எண்ணத்தால், ஏற்படும் செருக்கு, கர்வம், தனது திறமையைப்பற்றியும் செயல்களைப் பற்றியும், யாவரும் அறிய விளம்பரப்படுத்திப் பெருமைப் பாராட்டல், பிறரை அவமதித்தல், பிறரைத் தன்னேடு ஒப் பிட்டுப் பார்த்து, அவர்களை இழிவுபடுத்தல் தன்னுடைய திறமையைக் காட்டும்படி பட்டம், பதவி, அதிகாரம் மகிமைக்கு ஆசைப்படுதல், கொடுங்கோன்மை அல்லது பிறரைத் தன் அடிமைகளாகப் பாவித்தல் ஆகிய இவை போன்றவைகளாம்.

"சாதாரணமாய், பெருந்தப்பிதங்கள் அனைத்துக்கும் மூலகாரணம் ஆங்காரம். மற்ற சகல ஆசாபாசங்களாலும் சமயாசமயங்களில் நன்மை விளைவதுண்டு. ஆனல் ஆங் காரம் எங்கே தலைகாட்டுமோ அங்கே எல்லாம் பாழ்; சர்வ நாசம்தான். அமைதியாகக் குற்றமற்றவிதத்தில் செய்யக் கூடியதை எல்லாம் ஆங்காரமாய்ச் செய்வது ஆபத்துக்கு இடந்தரும்" என்பது அறிஞர் ரஸ்கின் (Ruskin) என்ப வரின் பொன்மொழியாகும்.

## 94. ஆங்காரத்திலும் நல்லவிதமான ஆங்காரம் உண்டா?

எல்லாவற்றிலும் சிறந்ததைச் செய்யத்தேடும் மேன்மை யான குணம் ஒன்று உண்டு. இந்தக் குணம் உள்ள வனுக்கு சிறந்த மேலான நற்கிரிகைகளைச் செய்வதே இன் பம். அவன் ஒருபோதும் இழிவானதையோ தவருன தையோ செய்யமாட்டான். ஒருவன் "நேர்மையானவன், உண்மையுள்ளவன், உள்ள உறுதியுடையவன், ஆண்மை யுடையவன், தன்மதிப்புள்ளவன்"—என்று அவனைப் புகழும்போது, இந்த அர்த்தத்தில்தான் சொல்லுகிறேம். இது ஆங்காரம் என்னும் தீய குணம் அல்ல; நன்மைத் தனத்திலும, புண்ணியத்திலும் உள்ள உயர்ந்த விருப்பமே ஆகும்.

95. தன் திறமை, சாமர்த்தியம், நிலைமையைப் பற்றி பெருமைகொள்வது சரியா ?

நம்மிடத்தில் அமைந்துள்ள நற்குணங்களைப்பற்றியும், நமது உயர்ந்த நிலையைப்பற்றியும் நம்மை அனைவருக்கும் மேலாக எண்ணுதவரை இவற்றைப்பற்றி மகிழ்ச்சி அடைவது குற்றமல்ல. ஆங்காரத்துக்கும், அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய குற்றங்களுக்கும், இத்தகைய மகிழ்ச்சி காரணமாகும் போதுதான் இது தீயகுணமாகும்.

## 16. தலையான குற்றங்கள்

96. பேராசை என்பது என்ன ?

அநேக பொருட்களை அடைய நமக்கு மிதமிஞ்சிய ஆசை இருக்கிறது. அவற்றை அடைவதற்குப் பாவமான அல்லது தவருன வழிகளைப் பயன்படுத்தினலே தவிர அவைகளை அடைய முடியாது என்று தெளிவாகத் தெரிந்தாலும், அவற்றின்மீது அளவுக்குமீறின ஆசைகொள்வதுபேராசை யாகும். இதுவே பொருளாசை என்றும் சொல்லப்படும்.

97. இதனால் உண்டாகும் தீமைகள் யாவை ?

திருட்டு, வஞ்சகம், நேர்மையற்றதனம் முதலியன. மேலும் மிதமிஞ்சின இந்த ஆசை மனக்கலக்கத்தை உண்டாக்கி, மனக்குறை, மனவருத்தம் ஆகியவற்றை விளை விக்கிறது, நல்ல காரியங்களில் மனம் செல்லாமல் தடைப் படுகிறது.

98. காய்மகாரம் அல்லது பொருமை என்ருல் என்ன ?

மற்றவர்களுக்கு இருக்கும் நற்குணம், செல்வம், சொத்துசுகம் நமக்கு இல்லையே என்று ஏக்கம்கொண்டு இவை பிறர் இடம் இருக்கிறதே என்று வருந்துவது பொருமை அல்லது காய்மகாரம் எனப்படும்.

## 99. பொருமையால் வரும் கேடுகள் யாவை?

பிறர் மீது பகை, வர்மம், அருவருப்பு கொள்ளல், அவர்களிடத்திலுள்ள நன்மையைக் கெடுத்து, எந்த வழியிலாவது அவர்களுக்குத் தீங்கு செய்யத் தேடுதல், இவை இரண்டும் பொருமையால் ஏற்படும் கேடுகள். மன வெறுப்பையும் இது உண்டுபண்ணுகிறது.

## 100. கோபம் என்பது யாது?

நமக்கு விருப்பமில்லாத ஒரு ஆள் அல்லது பொருள் அல்லது இடம்பற்றி நமது மனதில் எழுப்பும் எரிச்சலான உணர்ச்சியே கோபம் எனப்படும். இந்த உணர்ச்சியினுல் நமக்குப் பிரியமற்ற பொருட்களைத்தாக்கி, நஷ்டப்படுத்தவும், நாசம் செய்யவும் விரும்புகிறோம்.

## 101. கோபத்தால் ஏற்படும் தீயகுணங்கள் யாவை?

சண்டை, சச்சரவு, குரோதம், கொடுமை, கொலை செய்தல்கூட சில சமயங்களில் நேரிடலாம். பகை, பழி, அவதூறு மூர்க்கத்தனம் ஆகியவைகளும் கோபத்தால் உண்டாகின்றன.

## 102. மோகம் என்ருல் என்ன?

சிற்றின்பத்தின் மீதுள்ள (உடலின்பம்) மிருகத்தனமான ஆசை மோகம் எனப்படும். உடல் இன்பத்தை அனுபவிக்கத்தகாத நிலையில் இருக்கும்போதுகூட, அதை சுகிக்க இந்த ஆசை நம்மைத் தூண்டுகிறது

## 103. இதனுல் விளையும் கேடுகள் யாவை?

கற்பென்னும் பரிசுத்த புண்ணியத்துக்கு விரோதமான கெட்ட எண்ணங்கள், நினைவுகள், கற்பனைகள் தனித்து அல்லது பிறருடன் செய்யும் அருவருக்கத்தக்க கிரிகைகளுமாம். பிறர் அதே பாவத்தைச் செய்யவும், அத

ஞல் அவர்களுக்கும், நமக்கும் உடலிலும், ஆன்மாவிலும் தீங்கு உண்டாகக் காரணமாகிறது. புத்தியை மந்தப் படுத்தி, உயர்ந்த மேலான விஷயங்களில் நமக்கு இருக்க வேண்டிய நாட்டத்தை இது கெடுக்கிறது.

## 104. போசனப்பிரியம் என்ருல் என்ன ?

உண்பதிலும், குடிப்பதிலும் அளவுக்கு மீறிய இன்பத் தைத் தேடல் போசனப்பிரியம் அல்லது மீதூண் விரும்பல் எனப்படும்.

## 105. இதனுல் ஏற்படும் கெடுதல்கள் யாவை?

அளவுக்கு மீறிய உணவினுல், உடல் நலக்குறைவு, மந்தத்தன்மை, சிற்றின்ப உணர்ச்சிகளின் கிளர்ச்சி, முதலி யவை ஏற்படும். மிதமிஞ்சிய குடியால் புத்தி மயங்கி, அறிவை இழந்து, உடல் நலம் கெட்டு, காமம், கோபம், சண்டை முதலிய தீயகுணங்களுக்கு உள்ளாகிருேம்.

## 106. கோபம் என்ருல் என்ன ?

முயற்சியைக்கண்டு விலகவும், வேலையைக்கண்டு அஞ்சவும், ஒன்றும் செய்யாமல் வீணுக நேரத்தைப் போக்க வும் காரணமுள்ள உடல் அல்லது புத்திக்கடுத்த மந்தக் குணமே சோம்பல் எனப்படும்.

## 107. இதனுல் ஏற்படும் தீங்குகள் யாவை ?

கடமையை நிறைவேற்ற ஏதேனும் முயற்சி செய்ய வேண்டியிருந்தால், கடமையை அலட்சியம் செய்யவும், கஷ்டமான அல்லது வருத்தமான யாவையும் நீக்கிவிடவும், இது காரணமாகிறது. சோம்பித் திரிவதால் தீய நினைவு களும், ஆசைகளும் எளிதில் உண்டாகும். போசனப்பிரி யம், காமம் முதலியவற்றிற்குரிய சோதனைகள் மிக எளிதாக உண்டாகும்.

# 17. வேறு சில பழக்கங்கள்

## 108. பந்தயம், சூதாட்டம் தீய குணங்களா ?

இவைகள் தம்மிலே குற்றமற்ற விளையாட்டுக்கள், தீய குணங்கள் அல்ல. ஆனால் மிக எளிதில் தீய குணங்களாக மாறலாம்.

## 109. பந்தயம், சூதாட்டம் எப்படி தீயகுணங்களாக மாறக்கூடும் ?

முதன் முதலாக மனதில் வேகமான கிளர்ச்சி உண்டு பண்ணி, மேலும்மேலும் அந்தக்கிளர்ச்சி வளரக்கூடிய மன நாட்டத்தை உண்டாக்குகிறது. இவ்விதமாக அது ஒரு ஆசாபாசமாகிறது. அதாவது இன்பத்தின்மீது முறையற்ற விதமான ஆவல், அல்லது லாபமடைய (வெற்றி கொள்ள) மிதமிஞ்சிய ஆசைப்படும் பேராசை என்னும் தீய குணமாகலாம்.

இரண்டாவது – தனக்கும், தன் குடும்பப் பாதுகாப்புக்கும் தேவையான பணத்தை இழக்கும் ஆபத்துக்குள்ளாக்குகிறது. இது, அவனுக்கும், அவன் குடும்பத்துக்கும் ஏற்படும் பெருந்தீங்கு ஆகின்றது.

மூன்றாவது – பந்தயம் எவ்வளவுக்கு ஆடுகிறானோ, அவ்வளவிற்கு அதிகமாய் இன்னும் விளையாட ஆசை அதிகரித்து, கடைசியாய் அதன்மேல் ஒருவித பைத்தியம் கொண்டவன்போல் ஆகிறான் இதனால் அப்பனிதனுக்கு, ஆன்ம விஷயங்களைப்பற்றிய அக்கறை இல்லாது போய் விடும். தன் கடமையைச் செய்யவும், அறநெறியில் நடக்கவும், எந்தவிதமான உயர்ந்த கொள்கைகளைக் கடைப்பிடிக்கவும் ஆர்வம் இல்லாது போகும்.

## 110. சுருட்டு குடிப்பதும், போதைதரும் பொருட்களை உபயோகிப்பதும் தீயகுணமல்லவா ?

உடல்நலத்துக்கு எத்தகைய இடையூறு நேராமலும், வெறி மயக்கம் கொள்ளாமலும் இருக்கும்வரை சுருட்டு

குடிப்பதும், போதையூட்டும் பொருட்களை (பானங்களை) உபயோகிப்பது குற்றமல்ல. இதனால் ஒருவனது பொருளாதார நிலை பாதிக்கப்படக் கூடாது

## 111. போதையூட்டும் குடிவகைகளைப் பற்றிய சிறந்த ஒழுங்கு யாது?

முதன்முதல்; இதுவரை அதில் பழக்கமில்லையென்றால் புதிதாக அந்தப் பழக்கத்தை உண்டாக்கிக்கொள்ளாதே. அதனால் வீண் செலவும், பாவச்சோதனையும் உண்டாகும்., இரண்டாவது; சிலகாலம் அதில் பழக்கம் ஏற்பட்டு அளவுக்குமீறி குடிக்க ஆசை ஏற்பட்டால் உடனே அந்த வழக்கத்தை நிறுத்திவிடு. ஏனெனில் பிறகு அதை நிறுத்துவது கடினமாக இருக்கலாம்.

## 112, நாடகம், நடனம், படக்காட்சி இவைகளைக் காண்பது தீயகுணமா?

உல்லாச பொழுதுபோக்கின் மீதுள்ள ஆவல், ஆசாபாசமாகி அல்லது அதன் விளைவாக முக்கியமான விஷயங்களில், கவனமும், கருத்தும் குறைந்து, உற்சாகம் குன்றி. கடமையைச் செய்வதில் அலட்சியம் ஏற்படுவதாயிருந்தால் அவற்றைப் பார்ப்பது தீயகுணமாகும்.

மேலும், இதில் கவனிக்கவேண்டியது யாதென்றால், ஆன்ம வாழ்வுக்கும். நல்லொழுக்கத்துக்கும் விரோதமான அல்லது பாவச் சோதனைக்கேதுவான காட்சிகள் காட்டப்படுமானால் அவற்றைஒருபோதும் பார்க்கக்கூடாது என்பது வெளிப்படை.

## 113. பலவித விளையாட்டுகள், பந்தாட்டம் முதலியவற்றில் பங்கெடுத்துக்கொள்ள விரும்புவது தீயகுணமாகுமா?

இல்லை.. உடலுக்கு நலத்தையும், புத்திக்கு தெளிவையும் அளிக்கக்கூடிய நல்ல பொழுதுபோக்குகள் அவை. தன

ணடக்கம், மனவுறுதி முதலான நற்குணங்களை வளர்க்க இவை மிகவும் உறுதியானவை. ஆனால் எல்லாவற்றிலும் மட்டுத்திட்டம் வேண்டும். அதிகக் களைப்புக்கும், சோர்வுக்கும் இடங்கொடுத்து நமது உடல் நலத்துக்குத் தீங்கு நேரிடாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். அதில் அதிக நேரத்தைப் போக்கி நமது கடமையை அலட்சியம் செய்யக்கூடாது.

### 114. கல்வி, அறிவுத்திறமை, உயர்ந்த பதவி அடைய ஆசைப்படுவது தீயகுணமா?

இத்தகைய ஆவல் நல்லதுதான். ஆனால் அகங்காரம், பேராசை, கடமையை அலட்சியம் செய்தல் முதலிய தீய குணங்கள் இவற்றால் உண்டாகாதபடி கவனமாயிருக்க வேண்டும்.

## 18. நற்குணபான்மையின் வளர்ச்சி— விசேஷ புண்ணியங்கள்

### 115. மேலே எடுத்துக்கூறிய தீயகுணங்களுக்கு மாறான புண்ணியங்கள் யாவை?

தாழ்ச்சி, மன அமைதி, பிறர் சிநேகம், சாந்தம், கற்பு, மட்டசனம், சுறுசுறுப்பு.

### 116. தாழ்ச்சி என்பது என்ன?

நமக்குப் பெரியவர்களிடத்தும், சிறியோரிடத்தும் தகுந்த மரியாதையுடன் நடந்துகொள்வதற்காக, நமது நிலைமையைச் சரியானபடி கண்டுணர்ந்து அதன்படி அவர்களுட [illegible] பழகுதல் தாழ்ச்சியாகும். இது ஆங்காரத்துக்கு எதி[illegible]து.

## 117. இதைச் சற்று விளக்கமாகக் கூறுக.

நாம் கடவுளுடைய சட்டத்துக்கும், சித்தத்திற்கும் கீழ்ப்பட்ட அவருடைய சிருஷ்டிகளென்றும் நமது நற்குணங்கள் முதலாய் பற்பல குறைகளால் பழுதுபடுகின்றவென்றும் நம்மிலும் நல்லோர், திறமையுள்ளோர் பலர் உண்டென்றும், நம்மிடமுள்ள நற்குணங்கள் நாம் சம்பாதிப்பவையல்ல, கடவுளால் அருளப்பட்ட நன்கொடைகள் என்பதே உண்மையென்றும், நாமே ஏற்றுக்கொள்ளும்படி செய்வது தாழ்ச்சியின் இயல்பு. ஆகையால் மெய்யான தாழ்ச்சியுள்ளவர்கள். தங்களுக்கு மேலானவர்களை அவமதியார், கீழானவர்களைப் புறக்கணியார். அனைவரையும் தகுந்த மரியாதை வணக்கத்துடன் நடத்துவார்கள்.

## 118. அமைதி என்றால் என்ன?

நம்மிடம் உள்ளதையும் நேர்மை நியாயத்துடன் நாம் அடையக்கூடியதையும் கொண்டு மனநிறைவு அடைவதே அமைதி எனப்படும். நாம் அடையக்கூடாத பிறர்பொருளின் மேல் ஆசைப்படாவண்ணம் இந்தப் புண்ணியம் நம்மைத் தடுக்கிறது. இது பேராசைக்கு எதிரானது.

## 119. உதாரகுணத்தையும் பேராசைக்கு எதிரானது என்று கூறலாமா?

நம்மிடம் இருப்பதைவிட அதிகமாய் அடைய விரும்புவதற்குப் பதிலாக, நம்மிடம் உள்ளதைப் பிறருக்குத் தாராளமாகக் கொடுக்கவும், நாம் ஆசிக்கிறோம் என்று உதாரகுணம் காட்டுவதால், இது பேராசைக்கு எதிரானது என்று சொல்லாமலே விளங்கும்!

## 120. பிறர் சிநேகம் என்றால் என்ன?

பிறரிடமுள்ள நன்மையைப்பற்றி அழுக்காறுகொள்ளாமல் அவர்களுக்கு உண்டாகும் லாபம், வெற்றி முதலியவைகளைப்பற்றி மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு, நன்மை செய்யத்

தேடுவது பிறர் சிநேக குணமாகும். இது காய்மகாரம் அல்லது பொறுமைக்கு எதிரானது.

## 121. சாந்தம் என்பது என்ன ?

சாந்தம் (பொறுமை, சகிப்புத்தன்மை) என்பது கோபத்தால் ஏற்படும் கொடுமைக்கு இடங்கொடுக்காமலும், பிறருடன் முரட்டுத்தனமாக இருக்காமலும், நமக்குப் பிரியமற்றதைப் பொறுமையுடன் சகித்துக்கொள்ளுதலாகும்.

## 122. கற்பு என்பது யாது ?

நினைவு, வாக்கு, கிரிகைகளில், உடலின்பம்பற்றி எழும் ஆசையானது கடவுளுடைய சித்தத்துக்கும், நோக்கத்துக்கும் விபரீதமான வழியில் செயல்படாது, அதைத் தடுத்து அடக்குவதே கற்பு எனப்படும்.

## 123. மட்டசனம் என்றால் என்ன?

நமக்கு நன்மை விளைவிக்கக்கூடிய அளவுக்கு மீறி உணவு, குடி வகைகளை அருந்தாமல், உடல் நலத்துக்குத் தேவையானதை மட்டும் அருந்துவது மட்டசனம் அல்லது மிதவுணவு எனப்படும்.

## 124. சுறுசுறுப்பு என்றால் என்ன ?

சுறுசுறுப்பு, முயற்சி, ஊக்கம் என்றால் நமது வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தேடிக்கொள்ளவும், பிறருக்கு உதவி செய்யவும், நமது கடமையை செவ்வையாய் நிறைவேற்றவும், அவசியமான அலுவலைச்செய்து உழைக்க விரும்புகிறோம் என்றும், சோம்பல், அசதி, அசட்டைத் தனம், தாமத குணம் ஆகியவற்றால் எந்த நற்கிரிகையையும் அலட்சியம் செய்யமாட்டோம் என்றும் பொருள்படும்.

# 19. நல்லது, மேலானது, சிறந்தது.

125. நாம் கடின முயற்சியுடன் அடையக்கூடியவற்றில் நற்குணபான்மையிலும் சிறந்தது ஏதாவது உண்டா?

உண்டு. நற்குணபான்மையில் மேலானது, உயர்ந்தது என்று சிறந்த நற்குணபான்மைகளும் உண்டு.

126. உயர்ந்த மனிதன் மக்களுள் சிறந்தவன் எனக் கருதப்பட வேண்டுமாகில் அவனது வாழ்க்கை எவ்வாறு இருக்கவேண்டும்?

சகல பாவங்களையும், தீய வழிவகைகளையும் விலக்கி, கடவுளுடைய கற்பனைகளையெல்லாம் அனுசரிப்பதுமின்றி, தனது உள் தத்துவங்களை சிறந்தமுறையில் உபயோகித்து அற்ப சொற்ப குற்றங்குறைகளையும் தவிர்த்து, மனிதனுல் செய்யக்கூடிய உயர்ந்த நற்கிரிகைகளைச் செய்து தனது வாழ்க்கையை விளங்கச் செய்யவேண்டும்.

127. மனிதருள் யாரும் மேற்கூறியவாறு உயர்ந்த முறையில் வாழ முடியுமா?

ஆம். யாரும் தனது உள் தத்துவங்களையும், புலன்களையும் தனக்கு இயல்பாக அமைந்துள்ள சக்திகளைக் கொண்டு ஆண்டு நடத்தி உயர்ந்தவனுகிவிட முடியும் என்று கூறமுடியாது. ஆனுல் கடவுளின் விசேஷ உதவியில் நம்பிக்கைவைத்து அதற்காகமுயன்று உழைத்து மேன்மேலும் புண்ணியத்தில் வளர யாவராலும் கூடும்.

128. உத்தம தனம் அல்லது புனிதத்தன்மை அடைய எவ்விதம் முயற்சி செய்ய வேண்டும்?

ஒரு சிறந்த மனிதனின் உயர்ந்த தன்மையை நமது சிந்தனையில்வைத்து, எண்ணிப்பார்த்து, அந்த உயர்ந்த

தன்மையை நாமும் அடையவேண்டும் என்று விரும்புவதினுல் புனிதத்தன்மையை அடைவதற்கு முயற்சி செய்வது போலாகும்.

நாம் ஏதேனும் ஒரு புண்ணியத்தில் தேர்ச்சி அடைய வேண்டும் என விரும்பினுல் அப்புண்ணியத்தினுல் சிறந்து விளங்கிய ஒரு மகானை அதாவது ஒரு புனிதரை, நமது மாதிரிகையாக வைத்துக்கொண்டு அதன்படியே எப்போதும் நடக்க முயற்சிக்க வேண்டும்.

## 129. ஒரு புனிதன் ஆக அல்லது நீதிமான் ஆக இயல்பிலேயே நமக்கு ஆசை உண்டோ?

உண்டு; "உற்றவிடத்து உன்னதமேற் சிந்தை கொள்வோம்"—என்பது இதற்கு எடுத்துக்காட்டாகும். நம்மைச் சேர்ந்தவர்கள், சிறநத புண்ணியங்களும், நற்குணங்களும் உள்ளவர்கள் என்று கண்டால், அவர்களுடைய அந்த நற்பண்புகளைப் பாராட்டிப் புகழ்ந்து, அவர்களைப்போல் நாமும் ஆகவேண்டும் என்று ஆசை கொள்ளுகிருேம்.

## 130. இந்த ஆசை உண்டாவதற்குக் காரணம் என்ன ?

கடவுளே, இதை நமது மனதில் பதித்திருக்கிருர். ஏனெனில் கடவுள் சிறந்த நன்மைத்தனமுள்ளவர். நம்மால் இயன்றமட்டும், முயன்று, அவரைப்போல் இருக்கவேண்டும் என்பது அவருடைய விருப்பம். நம்மைப் புனிதர்களாக உண்டாக்கவில்லை. ஆனல் நாம் அதற்காக வருந்தி உழைக்கவேண்டும் என்று நம்மை இவ்வுலகில் வைத்திருக்கிருர். "உங்கள் பரமபிதா உத்தமராயிருப்பதுபோல, நீங்களும் உத்தமராயிருங்கள்" என்பது கிறிஸ்துபெருமானின் ஆவல். நமக்கு புனிதத் தன்மையின்மேல், விருப்பம் உண்டாகும்படி நம்மைவிட சிறந்ததை நேசித்து, தேடும்படியான ஆர்வத்தை நமது ஆன்மாவில் அமைத்திருக்கிருர்.

131. இந்த ஆர்வத்தை செயல்படுத்த ஒருவன் செய்யவேண்டியது என்ன ?

(1) தன்னிடம் ஏதேனும் குற்றங்குறைகள் கண்டால், அது பாவம் இல்லாவிடினும், அதை நீக்கத் தன்னுல் இயன்றவரை முயற்சி செய்யவேண்டும்.

(2) ஒரு நற்கிரிகை செய்ய சமயம் வாய்க்கும்போது அதைச்செய்யத் தனக்குக்கடமை இல்லாவிட்டாலும், அதைச் செய்யவேண்டும்.

(3) எல்லா விஷயத்திலும் மேலானதையே செய்து பழகவேண்டும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்னும் பொன்மொழியை நினைவில் வைத்துச் செயலாற்ற வேண்டும்.

132. இவற்றைச் சில எடுத்துக்காட்டுகளால் விளக்குக.

(1) நாகரீகமற்ற பேச்சு, பண்பாடற்ற செயல்கள், மூர்க்கம், முரட்டுத்தனம், கயமை தன்னலம் பாராட்டுதல், அசட்டைத்தனம், கவனக்குறைவு — இவைகளை நீக்க வேண்டும்.

(2) பிறர் நம்மைக் கேட்காமுன்பே அவர்களுக்கு உதவிசெய்தல், பிறருக்காக உபகாரமாக எந்த விதமான தொழிலையும் செய்ய முன்வருதல்; பலக்குறைவானவர்களையும், சக்தியற்றோரையும் ஆதரித்தல்; பொறுமையுடன் சகல துன்பதுயரங்களையும் சகித்துக்கொள்ளல்; நம்மால் இயன்றஅளவு கடவுளைத்துதித்து ஆராதித்தல் முதலியன.

(3) குற்றம் செய்த பிள்ளையை நீதியின்படி தண்டித்துத் திருத்துவது நலமாயிருக்கலாம்; வேறுசமயம் இரக்கப்பட்டு மன்னிப்பது ஏற்றதாயிருக்கலாம்; வியாதிக்காரரைக் கவனிக்கும்படியாக, ஒருவனுக்கு சம்பளம் கொடுத்து உதவுவதைவிட, தானே அந்த நோயாளியைப் பேணி, மருந்து கொடுத்து பாதுகாப்பது, சிலசமயங்களில்

சிறந்த பிறர்சிநேக கிரிகையாகலாம்; பிறர் சொல்வதைப் பொருட்படுத்தாமல் நமது தீர்மானப் படியே நடப்பது சில வேளைகளில் நலம்; வேறுசிலசமயங் களில் பிறர் சொல்வதைக் கேட்டு நடப்பது, அதைவிட சிறந்ததாக இருக்கும். எனவே இடம், பொருள் முதலியன கருதி, எது மிகவும் சிறந்ததோ அதைச் செய்யவேண்டும். இத்தகைய வாழ்வைத்தான் "வாழ்வாங்கு வாழ்தல்"— என்று அறிஞர் கூறுகிறார்கள். இங்ஙனம் வாழ்பவனை, அவன் இவ்வுலகத்தில் வாழ்பவனாயினும், வானுலக வாசியைப்போலப் புகழுடன் போற்றப்படுவான்.

# 20. முயற்சியின் பலன்

133. உத்தமனாதல் நமது சக்திக்கு மேற்பட்ட தாயின், அதற்காக முயற்சி செய்வதால் பயன் என்ன?

மிகவும் பயனுண்டு. உத்தமனாகாவிட்டாலும் நாளுக்கு நாள் நல்லவனாகலாம் அதுபற்றிய மகிழ்ச்சியும், அமைதி யும் நமது உள்ளத்தில் உண்டாகும்.

மனிதனின் உயர்வெல்லாம், சிறந்ததை மேலானதை அடைய வாழ்நாளெல்லாம் முயற்சி செய்வதில்தான் அடங்கி யுள்ளது. அதில் வெற்றி அடையாவிடினும் அஃதோர் சிறந்த முயற்சியேயாகும். முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார் என்பது முற்றிலும் சிறந்த வாக்கு. இறைவனை முயற்சிப்பதே நமது ஆவலாக இருக்கவேண்டும்.

ஒருவன் சிறந்த கொள்கையை நோக்கி தன் வாழ்வை வகுத்துக்கொள்ளும்போது, அது, அவனுக்கு கடவுளுடைய கட்டளையை அனுசரிக்க எளிதாகிறது. ஏனெனில் முதலா வது, நன்மையைச் செய்வதில் உள்ள ஆர்வம் அதிகரிக்கு மாகில், தீயனவற்றை விரும்பான். தீமைக்கு இடங் கொடான்.

புண்ணியம் வீரத்தன்மையல்லவா; ஆகையால் புண்ணியத்தில் பயிற்சியடைகிற அளவு ஒருவன் சோதனையை வெற்றிகொள்வதற்கான மன உறுதி உள்ளவனுவான்.

## 134. புனிதத்தனத்தை நாடி முயற்சி செய்பவன் கூட பாவத்தில் தவறிவிடக் கூடுமா?

ஆம். மனிதன் குறையுள்ளவன் ஆனபடியால், ஒருவன் புனிதத்தன்மையை நாடி அதையடைய முயற்சிகள் செய்துகொண்டிருக்கும் நிலையிலும், அவன் மிக அருவருப்பான பாவத்தில் தவறி விழக்கூடும்.

இதில் வியக்கத்தக்கது ஒன்றுமில்லை. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா? அதுபோல மனிதன் எவ்வளவுதான் உயர்ந்த நிலையை நோக்கிச் சென்றும், மனித சுபாவம் அவனைவிட்டு நீங்காது. அவனுடைய பாசப்பற்றுதல்கள் அவனுடன் எப்போதும் இருக்கின்றன ஆகையால், திடீரென்று மிக்கக் கடுமையான சோதனை வந்து அவனைத் தாக்கினுல், அவன் அதற்கு இணங்கி பாவம் செய்யக்கூடும்.

இன்னும் சிலர் மெய்யான புண்ணியத்தில் நிலைநிற்கும் புனிதத்தன்மையை நாடாமல், ஏதோ ஒன்றைத் தங்கள் கற்பனையில் விசித்திரமாய் நினைத்துக்கொண்டு, அதன்படி நடக்கப் பார்க்கிருர்கள். இப்படிப் பகற்கனவு கண்டு கொண்டு முக்கியமான விஷயத்தை மறந்து போகிருர்கள்.

கடவுளுடைய சட்டத்துக்கு மாருக கற்பனையில் தோன்றும் ஏதோ ஒரு சிறந்த நிலையை ஒருவன் தனக்கு, மாதிரிகையாகப் பாவித்துக்கொள்ளக்கூடாது. கடவுளின் சட்டத்தை அனுசரிப்பதில் முதன்மையான கவனம் செலுத்த வேண்டும். அதன்பின் சிறந்த புண்ணியங்களைத் தேடும் வழிவகைகளை கைக்கொள்ள வேண்டும்.

## 135. இம்முயற்சியில் நமக்கு வேண்டிய மனப் பான்மை யாது?

(1) சிறந்த மாதிரிகையைப் பின்பற்றி நடக்கும்போது பாவத்தில் தவறி விழுந்தால், புனிதத் தன்மையடைதல் தன்போன்றவர்களுக்கல்ல என்று விட்டுவிடக்கூடாது. தனது பலக்குறைவை இதனால் கண்டறிந்து இன்னும் அதிகமாக முயற்சி செய்யவேண்டும்.

(2) நமது புண்ணியத்துக்கும், அதை அடைவதற்கும் நாம் செய்த முயற்சிகளுக்கும் ஏற்றவாறு சம்பாவனை அளிப்பார். கடவுள் சம்பாவனை அளிப்பதில், நாம் அடைந்த புண்ணியத் தேர்ச்சிக்கல்ல; நாம் அதற்காக செய்த முயற்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது நியாயமாகத் தோன்றுகிறது. இந்த நினைவு நமக்குத் தைரியத்தையும் நம்பிக்கையையும் கொடுக்கத்தக்கதாகும்.

# C - கடவுள்

## 1. கடவுள் யார்?

இவ்வுலகில் காணப்படும் படைப்புகள் பலவித மானவை. அவற்றுள் மிகவும் உயர்ந்த, சிறந்த படைப்பு மனிதன்தான். மனிதன் சிருஷ்டி என்ற முறையில் தானுக தோன்றியிருக்க முடியாது. ஏனெனில் தானுகத் தோன்றக் கூடிய சக்தி இருந்தால் அவன் தன் வாழ்வில் தனக்கு வேண்டிய சகல வசதிகளேயும் ஏற்படுத்திக்கொள்ள முடியும். தனக்கு நேரிடும் துன்பம், கஷ்ட நஷ்டங்கள் யாவும் தன்னே நெருக்காதபடி தடுத்துக்கொள்ள முடியும். எல்லா வித இன்பங்களேயும் எத்தகைய இடையூறுமின்றி அனுப விக்க முடியும். ஆனல், உலகின் நிலேயை ஊன்றிப்பார்த் தால் எங்கும் மனிதனின் இயலாமை, பலவீனம் காணப்படு கிறது. இதன் காரணமென்ன? அவன் சக்தியற்றவன். பிற ஒரு சிருஷ்டி கர்த்தரின் — ஆற்றல்வாய்ந்தவரின் ஆணேக்கு அடங்கியவன் என்பது விளங்குகிறது. இதிலி ருந்து அவன் யாரோ ஒருவரால் உண்டாக்கப்பட்டவன் என்பது தெளிவு. அப்படி அவனேயும், அவனேச் சுற்றிலும் உள்ள அனேத்தையும் உண்டாக்கினவரே கடவுள். எனவே, புகையைக் காணுமிடத்து நெருப்பு அங்கே உண்டு என்று உய்த்துணர்வதுபோல, எதுவும் காரணமின்றி, காரியம் ஆகாது என்பதை உணர வேண்டும். ஆகவே எவ்விதம் நோக்கினும், எப்பொருள் நோக்கினும் அப் பொருளேப் படைத்த ஒருவர் உண்டு என்பதை நோக்க வேண்டும். அதை முழுமனதுடன் ஏற்க வேண்டும்.

16441

## 2. எத்தனை கடவுள்கள் உண்டு?

ஒரே கடவுள்தான் இருத்தல் வேண்டும். பல தெய்வம் இருக்க முடியாது. அப்படி இருப்பது புத்திக்கும், நியாயத்துக்கும் ஒவ்வாது. ஏனெனில், ஒரு நாட்டில் ஒரே சமயத்தில், பல அரசர்கள் ஆட்சி செய்வது முடியாத காரியம். ஒரு குடும்பத்தில் அல்லது ஒரு கூட்டத்தில், பல தலைவர்கள் இருத்தல் முடியாது. ஒரே அதிகாரம்கொண்ட பல தலைவர்கள் இருப்பின் சட்ட திட்டங்கள் சரிவர நடைபெறு. கருத்து வேற்றுமைகள் ஏற்படும். பல இன்னல்களுக்கும், அலங்கோலங்களுக்கும் காரணமாகும். கடைசியில் குழப்பமும், கலகமுமே முடிவாகும்.

## 3. கடவுளைப்பற்றிக் குறிப்பிடும்போது, 'அவர்' என்று குறிப்பிடும் சொல் சரியா? அல்லது 'அவர்கள்'—என்னும் சொல் சரியா? எது உண்மை?

'அவர்'—என்பதுதான் சரியான சொல்; உண்மையும் இதுவேயாகும். ஏனெனில் கடவுள் ஒருவர் மட்டுமே இருக்கமுடியும். ஆதலால், பலரைக் குறிப்பிடும் 'அவர்கள்' என்ற சொல்லைக் கையாள முடியாது.

## 4. உண்மையான ஒரே கடவுளின் இலட்சணங்கள் யாவை?

உண்மையான ஒரே கடவுளின் இலட்சணங்கள் பல இருப்பினும், அவை ஒரு சிலவற்றில் அடங்கிவிடும். அவை யாவன:—

(1) அவர் உண்டாக்கப்படாதவர்:

கடவுள் யாராலும் உண்டாக்கப்படாதவர்; தனி முதற்பொருள். இவர் பிறரால் உண்டாக்கப்படுவதாயிருந்தால் அந்த உண்டாக்கினவர், இவரைவிடப் பெரியவராவார். உண்டாக்கப்பட்டவர் சிறியவர் என்றால் குறையுள்ளவர், குறையுள்ளவர் கடவுளாக இருக்க முடியாது.

(2) துவக்கமும் முடிவும் இல்லாதவர்:

படைப்பு பொருட்கள் துவக்கமும், முடிவும் உள்ளவை. துவக்கம் உள்ளவைகளுக்கு, அவசியம் முடிவும் இருக்கத் தான் வேண்டும். ஆனால், கடவுள் துவக்கம் இல்லாத வராக இருப்பதால், முடிவும் இல்லாதவர் என்று சொல்லப் படுகிறது நியாயம். அவரை ஒருவரும் அழித்தல் முடி யாது. அழிக்கப்படவும் மாட்டார். ஏனெனில், உண்டாக் கப்படாததால் துவக்கம் இல்லை. இவருக்கு மேல் அதிக சக்தியுள்ளவர் யாரும் இருக்கமுடியாதபடியால் இவரை அழிக்க முடியாது. அழிவில்லை என்றால் முடிவில்லை என் பது பொருள்.

(3) அரூபியானவர்:

அதாவது காணக்கூடிய உருவம் அற்றவர். அவர் சிருஷ்டிகளாயிருப்பதால்—எல்லாப் பொருட்களுக்கும் உள் ளேயே இருந்து அவைகளைப் போஷிக்க வேண்டியிருப்ப தால் உருவம் இருந்தால் மேற்கூறிய ஒவ்வொரு பொருளுக் குள்ளும் ஒவ்வொரு அணுவின் உள்ளும் இருப்பது எப்படி? ஆதலால், அரூபியாக, பார்க்க முடியாத உயிர்ப் பொரு ளாக இருப்பது பொருத்தமானது.

ஆனால், நாம் கடவுளின் நினைவை மனதில் வருவித்துக் கொள்ள அவரது குணலட்சணங்களைக் காட்டக்கூடிய பொருட்களையோ, படங்களையோ செய்து நினைவுப்படுத்திக் கொள்வது தவறில்லை. இப்படி தகுந்த குண உருவங்களை அமைப்பதால் அவருக்கு உருவம் உண்டு என்று கொள்வ தில்லை. அல்லது அந்த உருவங்கள்தான் தெய்வம் என்று நாம் வழிபடுவதில்லை. அந்த உருவம் நினைவூட்டும் பரம் பொருளுக்கே நாம் வழிபாட்டு ஆராதனை செய்வதாகும்.

அந்த உருவங்கள் அல்லது படங்கள், சிறப்புள்ள கடவுளின் வல்லமையில், சிருஷ்டிகளாகிய சூரியன், சந் திரன், கடல், மலை போன்ற வேறு எந்த பொருளும் அவை எவ்வளவு சிறப்பும், உயர்வும் உடையவைகளாக இருப்

பினும், காணக்கூடிய மரங்கள், பறவைகள், மிருகங்கள், பொருள்கள் நமது வாழ்வுக்கு எவ்வளவுதான் நன்மை பயக்கக்கூடியதாக இருப்பினும் அவை கடவுளாகமாட்டா.

(4) சகல நன்மையும் நிறைந்தவர்:—

அவர் எல்லா நன்மைகளுக்கும் ஊற்றுனவர். அவரிடம் இல்லாத நன்மைகள் ஒன்றுமே இல்லே. சகல நன்மைகளேயும், வரங்களேயும், கொடைகளேயும், புத்தி நுட்பத்தையும், சக்தி வல்லமையையும், இன்னும் நாம் எண்ணக்கூடுமான நன்மைகள் அனேத்தையும், அளவுகடந்த முறையில் தன்னில் கொண்டிருப்பவர். அவருக்குக் குறைவு என்பது கிடையாது. சுருங்கச் சொல்ல வேண்டுமானுல் அவரே சர்வான்மை ஆதலால், தீமை என்பது எதுவும், வியாதியோ, கஷ்டமோ, நஷ்டமோ எதுவாயிருப்பினும் அவரை நெருங்காது. ஆகவே அவர் சர்வநன்மை நிறைந்தவர். சகல நன்மையும் கொண்டவராதலால் நாம் என்ன கேட்டாலும் கொடுக்கக்கூடியவர் அவர். அவரை நம்பி, சலியாது, நமது எளிமையை ஏற்றுக்கொண்டு, தாழ்மையுடன் அவரது கட்டளேகளே மீருமல் தூய மனத்தோடு கேட்போமானுல் நமக்குக் கிடைக்கும். "கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்." என்பது கடவுள் குமாரனுகிய கிறிஸ்துவின் பொன்மொழிகள். ஆனுல் நமக்குத் தேவையற்றதைக் கொடுப்பார் என்று எண்ணுவது பகற்கனவாகும்.

(5) எங்கும் இருப்பவர்:—

கடவுள் சர்வவியாபி, எதிலும் நிறைந்திருப்பவர். அவர் இல்லாத இடமோ, பொருளோ கிடையாது. எவ்விடங்களிலும், எப்பொருள்களிலும், நிறைந்து, இருந்து, அவை ஒவ்வொன்றையும் காத்து ஆண்டு உயிர்கொடுத்து, நடத்தி வருகிருர். அவர் இல்லாவிடில் ஒரு பொருளும், பொருளாக இருக்கமுடியாது. ஒரு பொருள், பொருளாக இருக்கவேண்டுமானுல், அதில் அவர் இருந்துதான் ஆக வேண்டும்.

எப்பொருளை நோக்கினும், அப்பொருள் இறைவனின் ஒரு வெளிப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ''அவர் துரும்பிலும் இருப்பார்; தூணிலும் இருப்பார்''— என்று நாம் சொல்லி வருகிறோம். அவர் எங்கும் நிறைந்திருப்பதால்—வியாபித்திருப்பதால்— நாம் செய்யும், பேசும், நினைக்கும் ஒவ்வொன்றையும் அறிவார். அவருக்கு மறைவானது எந்த இரகசியமும் கிடையாது. எவ்வளவோ இரகசியமாய்ச் செய்யப்படும் நன்மை, தீமைகளோ, நினைத்துச் செய்யப்படும் திட்டங்களும் காரியங்களும் அவருக்கு மறைவானதல்ல. இதனுல்தான் கடவுளை எங்கும் இருப்பவர், எல்லாம் அறிபவர் என்று நியாயப் பொருத்தமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது.

(6) ஆதிகாரணமாக இருப்பவர் :—

உலகில் எல்லாக் காரியமும் கடவுளால் நடைபெறுகிறது. அவர் உத்தரவு இல்லாமல் ஒரு காரியமும் நடப்பதில்லை. ஆக்கவும், அழிக்கவும் வல்லமையுடையவர் அவர். அவரால்தான் உலகனைத்தும் ஒரு வார்த்தையால் உண்டாக்கப்பட்டது. அவரே யாவற்றையும் காத்து நடத்துகிறுர். அவர் இன்றி ஓரணுவும் அசையாது. ஏனெனில், கடவுள் ஒருவரே எல்லாவற்றுக்கும் சர்வ அதிகாரி.

உலகில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்துக்கும் அவரே காரணர் என்று சொல்லும்போது ஒரு முக்கிய விஷயம் நமது நினைவில் இருக்கவேண்டும். அதாவது, உலகத்தில் நடக்கும் சகலத்துக்கும் காரணம் கடவுள் என்று சொல்லும் போது உலகில் நடக்கும் அக்கிரமங்களுக்கும், தீமைகளுக்கும்கூட கடவுள்தான் காரணமா? என்றஒருகேள்வி, இயல்பாகவே கேட்கத்தோன்றுகிறது. கடவுள் தீமைக்கு காரணமல்ல. ஆனுல், தீமை நடக்கும்படி சில சமயங்களில் விட்டுவிடுகிறுர். அதாவது; அனுமதிக்கிறுர். தீய காரியங்கள் செய்ய. அதாவது; களவு, கொலைசெய்ய ஒருவன் முயலும் போது, சத்தியை எடுக்கவும், பொருள் உள்ள இடத்துக்கு நடந்து போகவும், கைகால்களுக்குச் சக்தியைக் கொடுப்ப

வர் கடவுள்தான். ஆனால், நன்மை செய்யும்பொருட்டு கொடுக்கப்பட்ட அந்த உறுப்புகளை மனச்சுவாதீனமுள்ள மனிதன் தீமைக்காக உபயோகிக்கும்போது அதைத் தடுப்ப தில்லை. ஏனெனில், மனிதனுக்கு மனச்சாட்சியையும், மனச் சுதந்திரத்தையும் கொடுத்தவர் கடவுள். ஆகையால் அவ னுக்கு நன்மை, தீமை என்னவென்பதைக் காட்டிவிட்டு, அதைச் செய்யவும், செய்யாமல் இருக்கவும் உள்ள அந்த சுதந்திரத்தைக் கொடுத்தவர் அதைப் பறித்துக்கொள்வ தில்லை ஏனென்றால் கடவுள் நீதியுள்ளவர். கொடுத்த சுவாதீனத்தை எடுத்துக்கொள்வது நீதிக்கு விரோதம் என் பதால்தான் அதை விட்டுக்கொடுக்கிறார். ஆகவே மனச் சாட்சியை மீறிச் செய்யும்போது, அதற்கு அவர் காரண மாகமாட்டார் என்பதை உணர வேண்டும். மற்றபடி அவரே சர்வத்துக்கும் காரண கர்த்தா. காய்கறி வெட்டு வதற்காகவே என்று, எல்லோருக்கும் முன்னால் சொல்லி, வாங்கி வைத்த கத்தியை, விபரம் தெரிந்த மகன், அதை எடுத்து குத்திக்கொண்டு இறந்து போனால், கத்தியை வாங்கிவைத்த தகப்பன் குற்றவாளியாக மாட்டான் என் பது நியாயம்.

## A இறைவன் நம்மைப் படைத்தவர்

### 5. இறைவனுக்கும் உலகத்துக்குமுள்ள தொடர்பு யாது?

ஒன்றுமில்லாமையில் இருந்து, இவ்வுலகத்தையும் அதில் வாழும் அனைத்தையும், காணப்படும் எல்லாவற்றை யும் படைத்தவர் இறைவனே. அதனால் அவர் அதன் சிருஷ்டிகர் ஆகிறார். இந்த உண்மையை வேதாகம சரித் திரம் பின்வருமாறு விளக்குகிறது.

சர்வேசுரன் பரலோகத்தையும், பூலோகத்தையும் படைத்தார். அவர் அனைத்தையும் ஒரு க்ஷணத்திலே படைக்காமல், அவைகளை ஆறு நாட்களில் உண்டாக்கினார்.

பூமண்டலம் முழுதும் காரிருள் அடர்ந்து ஒன்றுமில்லா திருக்கையில், கடவுள் தமது திருவாய் மலர்ந்து, "பிரகாசம் உண்டாகக்கடவது"—என்றார் எனவே பிரகாசம் உண்டானது. இது சர்வேசுரன் முதல் நாள் செய்த வேலை.

இரண்டாம் நாளில், கடவுள் வானமண்டலத்தை உண்டாக்கினார்; மூன்றாம் நாளில், நீர்ப்பரப்பை ஒன்றாகத் தொகுத்து, "நிலம் காணப்படக்கடவது"—என்று சொல்ல, உலர்ந்த தரை தோன்றியது. அப்படித் தோன்றின நிலத்தைப் பூமி என்றும், நீர்த்தொகுதியை சமுத்திரம் என்றும் அழைத்தார். பின்பு பூமியின் மீது புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய பற்பல தாவர வர்க்கங்களையும் உண்டு பண்ணினார்.

நான்காம் நாளில், வானத்தில் பிரகாசிக்கும் சூரிய, சந்திரனையும், நட்சத்திரங்களையும் படைத்தார். ஐந்தாம் நாளில் நீரில் வாழும் மீன் முதலிய ஜந்துக்களையும், ஆகாயத்தில் பறக்கும் பறவை இனங்களையும் உண்டாக்கினார்.

ஆறாம் நாளில் ஆடு, மாடு முதலிய நாற்கால் பிராணிகளையும். ஊர்வன, நடப்பன, நெளிவன, தத்துவன, தவழ்வன முதலான சகல பிராணிகளையும் உண்டுபண்ணி கடைசியாக நமது ஆதி பிதாவையும் சிருஷ்டித்தார். அது எப்படியெனில்; கடவுள் "நமது சாயலாக மனிதனை உண்டாக்குவோம்"—என்று சொல்லி, மண்ணால் மனித உருவை உண்டாக்கி, அதனில் தமது ஆவியைவிட்டு, அழியாத ஒரு ஆத்துமத்தையும் கொடுத்து. அவனுக்கு ஆதாம் என்று பெயரிட்டார்; அதாவது மண்ணால் உண்டாக்கப்பட்டவன் என்று அர்த்தமாகும் பின்பு சர்வேசுரன் தமது கைவேலையைக்கண்டு சந்தோஷித்தார். அவர்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பும்படி ஆசீர்வதித்தார்.

இத்தகைய நெருங்கிய தொடர்புதான் இறைவனுக்கும், உலகத்துக்குமுள்ள தொடர்பாகும்.

## 6. சிருஷ்டிப் பொருள்களை மனிதன் எவ்வாறு உபயோகிக்க வேண்டும்?

உலகில் உள்ள சிருஷ்டிப் பொருள்கள் அனைத்தும் மனிதனுடைய நல்வாழ்வுக்காகவே இறைவனால் அவனுக்கு அளிக்கப்பட்ட நன்கொடைகளாகும். அவன் அப்பொருட்கள் இறைவனை அடைவதற்கு எவ்வளவு தூரம் உதவுமோ அந்த அளவில் மட்டுமே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதில் "எம்மட்டோ அம்மட்டு"— என்னும் மன நிறைவே அவனது குறிக்கோளாகும்.

## 7. மனிதன் தனது ஐம்புலன்களாகிய சிருஷ்டிகளை எவ்விதம் உபயோகிக்க வேண்டும்?

(a) கண் :— வெளியிடங்களில் நடந்து போகும் போது, வழியில் காணப்படும், இயற்கை எழிலைக் கண்டு களிக்க இறைவனை நோக்கி எண்ணத்தை எழுப்பச் செய்யவும், இனிய உருவங்களைப் பார்க்க, நல்ல எண்ணங்களை ஊட்டும் நூல்களைப் படிக்க, பிறரது துன்பம், தேவைகளை அறிந்து உதவ, தன் கடமையைச் செய்து முடிக்க வேண்டியவற்றைப் பார்த்து செயலாற்றப் பயன்படுத்த வேண்டும். ஆனால் வெகுண்டு நோக்கவோ, சிற்றின்பக் காட்சிகளைக் காணவோ, அல்லது அத்தகைய நோக்கத்துடன் பிறரைப் பார்க்கவோ, கண்வலையில் பிறரை வீழ்த்தவோ, விநோதப் பிரியத்தைக் கொடுக்கும் பொருள்களைக் கண்டு, மனதை அலைக்கழிக்கவோ, கட்புலனை உபயோகிக்கக் கூடாது.

(b) காது :— இறைவனது எழிலுறு படைப்புகளின் பற்பல இனிய ஓசைகளைக் கேட்டு மகிழ; பிறருடைய வார்த்தைகளைக் கேட்டு அளவளாவ; அவர்களுடைய குறைகளை அநுதாபத்துடன் கேட்டு, தீர்க்க முடிந்தால் தீர்க்க, இறைவனது புகழையும், பெருமைகளையும் இன்பமாகக் கேட்கவும் செவிப்புலனை உபயோகப்படுத்த வேண்டும் அதற்கு மாறாக, ஆபாசப் பேச்சுக்களையும், புறணி, அவதூறு முத

லிய தீய சொற்களையும், வீணான, தேவையற்ற செய்திகளையும், ஒளிந்திருந்து ஒட்டுக்கேட்டலையும் பொய்யான வதந்திகளையும் கேட்கக்கூடாது.

(c) நாசி:— உடல்நலம் பேண சுவாசிக்கும் தொழில் புரிய, நறுமணத்தை நுகர, கெட்டுப்போன, அழுகின நாற்றங்களை விளக்க நுகரும் புலனை உபயோகிக்க வேண்டும். ஆனால் சிற்றின்ப உணர்ச்சிகளைத் தூண்டும், மயக்க கிறுகிறுப்பை உண்டாக்கும் அளவுக்கு மீறிய வாசனைத் திரவியங்களை நுகராது தவிர்க்கவேண்டும்.

(d) வாய்:— உண்மை பேசவும், நற்புத்தி புகட்டவும் அறவுரை, அறிவுரைகள் வழங்கவும், தன்னைப்பற்றிய கடமையாகவுள்ள விஷயங்களை எடுத்துரைக்கவும் நல்ல காரியங்களை மக்கள் நடுவில் பரவும்படிசெய்ய, இறைவனின் புகழைப்பாட நமது நாவை உபயோகிக்க வேண்டும். அதற்குமாருக பொய், அவதூறு, ஆபாசப் பேச்சுகள், கடுஞ்சொல், துர்ப்புத்தி சொல்லப் பயன்படுத்தக்கூடாது. குரோதத்தினல் காறித்துப்பவும், கடித்துக் காயப்படுத்தவும், காம இச்சையுடன், தவருன வழியில் பிறரை முத்தமிடுவதற்கும் நமது வாயை உபயோகிக்கக் கூடாது.

(e) கைகள்:— தனக்கு வேண்டியவற்றைச் செய்து கொள்ள, பிறருக்கு உதவிசெய்ய, கடவுளுக்கும், பெரியோருக்கும் வணக்கம்செய்ய கைகளை உபயோகிக்க வேண்டும். ஆனால், தன்னையோ, பிறரையோ, அவசியமின்றித் தொட, சிற்றின்ப உணர்ச்சியூட்டும் சரசக்கிரிகைகள்செய்ய, பிறரை அடித்துக் காயப்படுத்த, பிறர் நமது உதவியைத் தேடும் போது அவர்கட்கு கைகொடுத்து உதவாமல் இருந்து, பிறர் பொருளை அபகரிக்க நமது கரங்களைப் பயன்படுத்தக் கூடாது.

(f) கால்கள்:— அவசியமான இடங்களுக்கு நடந்து செல்ல, நமக்கும், பிறருக்கும் உதவியான செயல்களுக்கு

உபயோகப்படுத்த வேண்டும். ஆனால், போகத்தகாத இடங்களுக்குப் போகவோ, ஆத்திரத்தில் பிறரை உதைக்கவோ பயன்படுத்தக் கூடாது.

(g) உற்பவ உறுப்புகள் :— "நீங்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்"—என்று இறைவன் அளித்த ஆசீர், இவ்வுலகை மக்கள் நிரம்பியதாக ஆக்கவேண்டும் என்று ஆதிபிதா மாதாவுக்குக் கொடுத்த கட்டளைக்கு ஒப்பாகும். இதைச் செயல்படுத்தும்போது பெற்றோர், இறைவனின் படைப்புத் தொழிலில் பங்கு பெறுகின்றனர். எனவே இறைவன் தனது படைக்கும் சக்தியை மனிதனுக்குப் பகிர்ந்து அளித்துள்ளார் என்பது வெள்ளிடைமலை. இச்செயல் புனிதமானது, உயர்ந்தது, தெய்வீகத் தொடர்பு உடையது. இதைச் செயல்படுத்தும் கருவிகளாக, ஆண், பெண் இருபாலரிடத்தும் உள்ளும் புறமுமாக சில உறுப்புகளை உருவாக்கியுள்ளார். இவை வளர்ச்சியடைந்து, தகுந்த காலத்தில் செயல்பட வேண்டும் என்பதே இறைவன் திருவுளமாகும். 'இறைவன் தனது படைப்புகளை ஆணும் பெண்ணுமாகவே படைத்தார்" என்பது மறை நூல. மறைந்து நின்று செயலாற்றும் இறைவனின் தன்மை முதலியவற்றை எடுத்துரைக்கும் நூல் மறை நூல் எனப் பெயர்பெற்றதுபோல, தெய்வீகத் தொடர்புடைய படைப்புத் தொழிலுக்குச் சாதனமாக இருக்கும் இவ்வுறுப்புகள் உடலின் "மறைவிடங்கள்" என அழைக்கப்படுகின்றன. இவை பிறர் மனத்தில் உள்ளக்கிளர்ச்சியை தூண்டிவிட்டு அனுவசியமாகத் தத்தளிக்க வைக்காது ஆடை கொண்டு மூடப்பட்டுள்ளதாலும் அவ்வாறு அழைக்கப்படலாம் என்பதும் புத்திக்கு ஏற்றதே. உடலின்கண் வெளிப்படையாகத் தோன்றும் உற்பவ உறுப்புகளின் வாயிலாகவே, உள்ளே அமைந்துள்ள கருப்பை, வித்துப்பை முதலியவை தங்களது அலுவலைச் சரியாகச் செய்யமுடியும். எனவே இந்த வெளி உறுப்புகள் 'கருவாயில்' என்றும் அழைக்கப்படுகின்றன. இவற்றிற்கு இறைவனால் வகுக்கப்

பட்ட அலுவல் உண்டு. அவரது திட்டப்படி, இயற்கை ஒழுங்கு முறையில் இவை இயங்கி வருவதை அறிவியல் கலை நமக்கு அறிவுறுத்துகின்றது.

இந்த உறுப்புகளைச் செயல்படுத்தும் உரிமையை இல்லற வாழ்வை ஏற்றுக்கொண்டுள்ள அனைவரும் உபயோகிக்க எத்தகைய தவறுமில்லை. மண வாழ்வை ஏற்றபின்பே, இவ்வுறுப்புகளை முறைப்படி பயன்படுத்த வேண்டும், அதுவரை, வயது வந்த இளைஞரும், பெண்களும் தவறான முறையில் இவற்றை உபயோகிக்கும் உரிமையைச் செயல்படுத்தக் கூடாது. இது இயற்கைச் சட்டத்துடன், இறைவன் சட்டத்தையும் எதிர்ப்பதாகும் இப்படிச் செய்வதால் மனிதன் பலவிதங்களில் குற்றம் செய்தவன் ஆகிறான் — எப்படியெனில்:

(1) இறைவனது சட்டத்துக்கு எதிராக, மனிதன் தனது சுயவிருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில் இவற்றைச் செயல்படச் செய்வானாகில், அவன் திருடுவதற்குச் சமமாகிறது. அதாவது. தனக்கு அனுமதிக்கப்படாத இன்பத்தைமுறைதவறி,திருட்டுத்தனமாகஅனுபவிக்கிறான், எடுத்துக்காட்டாக, தனது உறுப்புகளை காம இச்சையுடன் பார்த்து, அல்லது தொட்டு, மனதிலேயே சிற்றின்பத்தை அனுபவிப்பது.

(2) பிறருக்குள்ள உரிமையைப் பறிமுதல் செய்யலாம். (உ-ம்.)பிறனுடைய மனைவி. பிறரது கணவனுடன் சேர்ந்து வாழ்ந்து, இல்லறஉறவை அனுபவித்துக்கொண்டு, உரிமையுடையவர்களுக்குத் துரோகம் செய்வது,

(3) இறைவனின் உடமையை வீணாக்கலாம். (உ-ம்.) ஆண். பெண் உறவினால் ஏற்படும் கருவை அழித்து அவரது சிருஷ்டிப்பின் அலுவலுக்குக் கேடு விளைவிக்கலாம். எனவே, இந்த உறுப்புகளை, இறைவன் உண்டாக்கியது உடலின்பத்தை மட்டும் அனுபவித்துவிட்டு, அதன்

விளைவை நீக்கி விடுவதற்கல்ல, என்பதைத் தெளிவாக உணரவேண்டும். மண வாழ்க்கையின் தலையாய நோக்கம் மக்கட்பேறு. இது பற்றியே திருவள்ளுவரும்,

"மங்கலம் என்ப மனைமாட்சி—மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்று கூறிப்போந்தார்.

இறைவனது படைப்புத் தொழிலில் பங்கு பெற்று அவருடன் ஒத்துழைக்கும் இந்தபுனித அலுவலைச்செய்வதில் பற்பலவித இடையூறுகளும் துன்பங்களும் ஏற்படுவது சகஜமே. எடுத்துக்காட்டாக, மக்கட் பெருக்கத்துக்கு நிலைக்களனாக அமைந்துள்ள குடும்ப வாழ்வை உருவாக்கும் முன்னும், குடும்பத்தின் பொறுப்பு உணர்ந்து, அதை நடத்திவரும்போதும் குழந்தை கருவில் உருவாகி வளரும் போதும், குழந்தை பிறக்கும்போதும், அதை வளர்த்து உருவாக்கும் வகையிலும் பற்பலகஷ்டங்கள் ஏற்படுவதுண்டு. இவற்றை முன்னிட்டு இந்த புனித அலுவலை நிறைவேற்ற மக்கள் தயங்கிப் பின்னிடலாம், இதை மாற்றி, அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில், அவர்கள் இந்தக் கடமையை நிறைவேற்றும்போது இயற்கை இன்பத்தையும் இறைவன் இத்துடன் இணைத்திருக்கின்றார். இயல்பாகவே இன்பத்தை நாடும் மக்கள், அதன் விளைவாக வரும் துன்பத்தையும் பொருட்படுத்துவதில்லை. எனவே, மக்கட் பெருக்கம் நடந்துவருகிறது. ஆனால் மக்கட்பேற்றை விரும்பாதவர்கள் இன்பத்தை மட்டும் சுகிக்கும் உரிமை எடுத்துக்கொள்ளக் கூடாது.

## 8. மக்கட்பேற்றுக்காக இறைவன் அமைத்துள்ள திட்டம் யாது?

பெண்ணுக்கு கடவுள் வகுத்திருக்கும் திட்டம்:—

இல்லற வாழ்க்கையைத்தெரிந்துகொள்ளும் ஒருபெண், மனுக்குல விருத்திக்குரிய இறைவன் திட்டத்தில் பங்கு கொள்ளும்படி, பெண்ணின் இயல்பில் எத்தகைய ஆசை

களையும், உடல் இயக்கங்களையும், கடவுள் பொருத்தியிருக்கிறார் என்று ஊன்றி பார்க்கவேண்டும். கருவாகி, குழந்தையாகக்கூடிய நுண் அணு ஒன்று, (ஏறக்குறைய) மாதமொரு முறை தயாராகும் அதிசயத்திட்டம் தன்னுடலில்கடவுளால் அமைக்கப்பட்டிருப்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்கிறாள். இந்த நுண் அணு கருவாவதற்கு, எதிர்பாலாரிடம் கடவுள் அமைத்துள்ள மற்றொரு நுண் அணுவுடன் அது சேர்வது அவசியம். இவ்விரு நுண் அணுக்களும், இணைந்து ஒன்றாகி, கடவுளால் நேரடியாகப் படைக்கப்படும் ஆன்மாவிடமிருந்து உயிர் பெறும்போது தான் புது மனிதன் உருவாகிறான். பெண்ணுடலில் உருவாகும் அந்த நுண் அணுக்கள், எதிர்பாலாரிடம் கடவுள் அமைத்துள்ள நுண் அணுவுடன் ஒன்றுசேர்ந்து மேற்கூறியபடி உயிர்பெறாவிடில், அவை மாதமொரு முறை வேறு அழிவுப்பொருள்களுடன் சேர்ந்து இயற்கையாகவே வெளியேற்றப்படுகின்றன. இதையே மாதவிடாய் என்கின்றனர்.

ஆனால் தங்கள் உடலில் இடைவிடாது நிகழும் ஓர் தொடர் இயக்கத்தின் வெளிப்படையான அறிகுறி மட்டுமே மாதவிடாய் என்பதை அநேகப்பெண்கள் உணர்வதில்லை. கடவுளின் அளவில்லா ஞானத்தைக்காண்பிக்கும் அதிசயத்துக்குரிய ஒரு சுழல் நிகழ்ச்சி (Cycle) இது. ஒரு சுழல் முடிந்ததும் மறு சுழல் உடனடியாக ஆரம்பமாகிறது. திரும்பத் திரும்ப நடைபெறும் சுழல் நிகழ்ச்சி இது.

இந்த சுழல் நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறுகையில், கடவுளின் திட்டப்படி இயற்கையாகவே, பெண்ணின் இரத்த ஓட்டத்திலும், நரப்புத் தொகுதியிலும், "ஹார்மோன்கள்" என்னும் ஒருவித அதிசயசுரப்பிகளைப் பாய்ச்சுகிறது. இவை மேற்குறிப்பிட்ட சுழல் இயக்கத்துக்கு உதவியாக இருப்பதுடன், புது மனிதன் உருவாவதற்கு தயாராகும் அணுக்கள் எதிர்பாலாரிடம் அமைக்கப்பட்டிருக்கும் அணுக்களுடன் ஒன்றுசேர்வதற்கு அவசியமான

செயல்களைத் தூண்டும் ஆசைகளையும், உணர்ச்சிகளையும் அவளிடம் எழுப்புகின்றன. அந்த சுரப்பிகளில் சில எதிர் பாலாரோடு உடல் உறவுகொள்வதற்குப் பெண்களைத் தூண்டுகின்றன; மற்றவை தாய்மைக்குரிய அலுவல்களுக்கு அவளைப் பக்குவப்படுத்துகின்றன. உடல்உறவுக்குத் தூண்டும் சுரப்பிகள், மாதச் சக்கரத்தின் (Monthly Cycle) முற்பகுதியில், முக்கியமாக உள் உறுப்புகளின் இயக்கங்கள், கரு ஆரம்ப அணுக்களை முற்றிலும் தயாரித்துத் தரும். அதன் மைய நாட்களில், மிகவேகமாக வேலை செய்கின்றன எனினும் அவைகள் மாதச் சக்கரத்தின் எல்லா நாட்களிலுமே, சில சமயம் அதன் இறுதி நாட்களில் (மாதவிடாய்க்கு முந்தின நாட்களில்)கூட செயலாற்றுகின்றன.

மாதச் சக்கரமும், மேற்கூறிய சுரப்பிகளும் திட்டமான விதிகளுக்குட்பட்டு இயங்குவதிலிருந்து தமது தலைசிறந்த படைப்பாம் பெண்ணியல்புக்கென, கடவுள் கொண்டுள்ள கருத்து என்னவென்று விளங்குகிறது.

ஆண்மகனைப் பொறுத்தமட்டில் கவனிக்கத்தக்கது:—

பருவமடைந்த இளைஞரின், உடலின் உள் இயக்கங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன வலிமை வாய்ந்த உற்பத்தி சக்திகளையும், அவைகளைச் சார்ந்த நாட்டங்களையும், உணர்ச்சிகளையும் சமயா சமயம் உணர்வது அம்மனிதனுக்கும் சகஜமே. தூக்கத்தில்கூட, உடலின் இவ்வியக்கங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன; ஆகவே மனத்திரையில் கனவுக் காட்சிகள், உயிர்க்களையுடன் தோன்றி மன உணர்ச்சிகளையும், முக்கியமாக இளம் வயதினரில் புலன் எழுச்சிகளையும்கூட தோற்றுவிக்கலாம். இவ்வனுபவங்கள் ஏற்படுவது இயற்கையே; இதில் பாவம் ஒன்றுமில்லை.

மேலும், இத்தகைய உணர்ச்சிகளினால் உற்பவ உறுப்பின் வழியாக உயிரணுத் திரவம் வெளிப்படலாம் இதனால் உடல் சிறிது அசுத்தப்படலாமே தவிர, ஆன்மா கறைபடு

கிறதாகச் சொல்ல முடியாது. உடலிலிருந்து வெளிப்படும் வியர்வை முதலிய கழிவுப் பொருள்களைப்போல இதுவும் ஒரு கழிவே தவிர வேறு ஒன்றுமில்லை. சில சமயங்களில் விழிப்பாயிருக்கும்போதுகூட இக்கழிவு ஏற்படலாம். அச் சமயங்களில், உடல் இன்ப உணர்ச்சிகொள்வதுபோல் மனதில் தோன்றலாம். இதுவும் பாவமல்ல. ஆனால் இவ் வின்பத்தைச் சுகிக்க வேண்டும் என்னும் தீய எண்ணத் துடன் இக்கழிவை வருவிக்கிறவன் குற்றம் செய்பவன் ஆகி றான். ஏனெனில். இறைவன் திட்டத்துக்கு எதிரான வழி யில் உயிரணுக்களைச் சேதப்படுத்துகிறான். மக்கட்பேற்றை விரும்புவர்களுக்கே இந்தச் செயலைச்செய்ய உரிமையுண்டு. எனவே இக்கழிவை உண்டுபண்ணக்கூடிய பல உணர்ச்சி களையும். அவை மனதில் எழுப்பும் தீய எண்ணங்களையும் தள்ளிவிடாது, நீண்ட நேரம் ரசித்துக்கொண்டிருப்பது குற்றமாகும். அன்றியும் பல உணர்ச்சிகளால் உந்தப் பட்டு, தன்னுடைய அல்லது பிறருடைய உற்பவ உறுப்பு களையோ அல்லது அதனுடன் தொடர்புள்ள நெருக்கமான அங்கங்களையோ, சிற்றின்ப நோக்குடன் பார்ப்பதும், தொடுவதும், அதன் விளைவாக இக்கழிவை வருவிப்பது குற்றமேயாகும்.

## 9. மக்கட்பேற்றுக்கு ஏதுவாக இறைவன் தம்பதி களுக்கு இடையே ஏற்படுத்தியுள்ள உறவு யாது?

"ஆதியிலே மனிதனைப் படைத்தவர், ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். அதனிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும், தாயையும்விட்டு, தன்மனைவி யுடனே சார்ந்து, இருவரும் ஒரே மாம்சமாய் இருக்கக்கட வார்கள். ஆகையால் அவர்கள் இப்போது இருவராயிரா மல். ஒரே மாம்சமாய் இருக்கிறார்கள். இதனால் சர்வேசுரன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருப்பானாக. என்னும் கிறிஸ்துவின் மொழிகளை ஊன்றிப் பார்த்தால், தம்பதிகள் ஒருவர் ஒருவரிடம் தங்களைப் பூரணமாக ஒப்படைக்கும்

அர்ப்பண வாழ்வு விளங்கும். இதனால் அவர்களுக்குள் இன்பமான பேச்சுரிமையும், தொட்டுப் பழகும் நெருங்கிய உறவும் இருப்பதற்கு எத்தகைய தடையுமில்லை. இத்தகைய செயல்களில் அவர்கள் தம்மைமறந்து ஈடுபடுங்கால் தம்மைச் சுற்றியுள்ள சிறியோர், பெரியோர்களுக்கு எவ்விதமான இடறலும் ஏற்படாத வண்ணம் கவனிக்க வேண்டும். திருமணத்தால் ஏற்படும் இல்லற உரிமையை எந்த அளவிலும் என்றைக்கும் எந்நேரத்திலும் பயன்படுத்தலாம். ஆனால் ஒரு எச்சரிக்கை! இல்லற உரிமையால் ஏற்படக்கூடிய கருதரித்தலைத் தடுக்கும் நிச்சயமான முறைகளை மட்டும் கையாளக்கூடாது.

## 10. கரு தரிக்காமல் இருக்கக் கையாளும் முறைகள் யாவை?

மணவாழ்வின் முதன்மையும், முக்கியமானதும் ஆகிய நோக்கம் மக்கட்பேறுதம். இதற்கு மாறாக.

(1) உயிரணுக்களை உற்பத்தியாக்கும் சக்தியை அழிக்க அறுவை முறை முதலியவைகளை உபயோகிப்பது.

(2) ஆணின் உயிர் அணுக்கள், பெண்ணின் கருப்பையில் ஒன்றுசேர்ந்துவிடாதபடி பலவித சூழ்ச்சிகளால் தடுப்பது. உதாரணமாக, கரு தரித்தற்கென கொடுக்கப்பட்ட உயிர் அணுக்களை வீணாக்குதல்.

(3) கரு தரித்திருக்கலாம் என்று நினைத்தவுடனேயே, மருந்துகளைக்கொண்டு உயிர் அணுக்களை அழித்து, அல்லது அப்படியே வெளியாக்குவது.

(4) கரு தரித்த சில நாள், வாரம், மாதங்களுக்குப்பின் வலுவந்தமாக குறை மாதத்தில் வெளியாக்கி அழிப்பது. இது பெரிய பாதகமாகும். ஏனெனில், கருவென உருவான உடனே, அதில் கடவுள் ஆன்மாவை இணைத்து வைக்கிறார். இந்த ஆன்மா அவ்வுடலில் வளர்ந்து, தெய்வப் பணியில் ஈடுபட முடியாது பிரிக்கப்படுகிறது. அதனால்

நித்தியத்துக்கும் கடவுளைக் காணுது துன்புறும் அவதியில் அகப்பட்டுத் தத்தளிக்கிறது. எவ்வளவு பொருத்தமான காரணங்களைக் காட்டி உலகம் கர்ப்பத்தடையை ஆதரித்தாலும், இது கொலைபாதகம் என்பதற்குச் சந்தேகமில்லை. தலைமுறை தலைமுறையாக குடும்ப வாழ்வை பாதிக்கக்கூடிய கொலை என்பது உண்மை.

## 11. கருத்தடைக்கு, அதை ஆதரிப்போர் காட்டும் காரணங்கள் யாவை?

கருத்தடை நமது நாட்டில், அரசாங்க ஆதரவுபெற்று, பல மருத்துவ நிலையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது யாவரும் அறிந்த விஷயமாகும். அரசினர் காட்டும் ஆதாரங்களும், அவைகளுக்குரிய மறுப்புகளையும் கற்று பார்ப்போம்.

"நாளுக்கு நாள் பெருகும் ஜனத்தொகையைக் கர்ப்பத் தடையால் கட்டுப்படுத்தினுலொழிய; உணவு நெருக்கடியை ஒழிக்க வழியில்லை. எனவே, இந்தத்திட்டம் அவசியம்" — என்பது நமது இந்திய அரசினர் கூறும் முதல் நிபந்தனை.

மறுப்பு :—

நமது வசமுள்ள சக்திகளைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை வேண்டிய அளவுக்கு உற்பத்தி செய்யாமல், சோம்பி நின்று, "மக்கள் அதிகம், உணவு போதாது; கர்ப்பத்தடைமூலம் மக்கட்பெருக்கைக் குறைக்கவேண்டும்"— என்று பிதற்றுவது கையாலாகாத தன்மையன்றி வேறல்ல. உணவுத்தட்டுப்பாடு ஒரு நாட்டுப் பிரச்சனை மட்டுமல்ல, உலகப் பிரச்சனை நாடுகள் ஒன்றோடொன்று ஒன்றித்து, உணவு அதிகமுடைய நாடுகள் இல்லாத நாடுகளுக்குக் கொடுத்துதவி உணவுத்தொல்லைகளைத் தொலைக்க வேண்டும்.

இத்தகைய வழிவகைகளைத் உபயோகித்து எவ்விதத்திலும் உணவு நெருக்கடியைப் போக்க இயலாது; மக்கட் பெருக்கை தடுத்துதான் ஆகவேண்டும் என்றே வைத்துக் கொள்வோம்; அப்போது முதலாய், கர்ப்பத்தடையைக் கையாளக் கூடவே கூடாது. கர்ப்பத்தடைக்குப் பதிலாகப் புலனடக்கத்தை (Self Control) காந்தியடிகளைப் பின்பற்றி அரசினர் ஆதரிக்கட்டும்; பிரச்சாரம் செய்யட்டும்; குடி மக்கள் கடைப்பிடிக்கட்டும்; அதாவது சதிபதிகள் தங்கள் இல்லற உறவிலிருந்து சற்று விலகி நிற்கட்டும். ஜனத் தொகை குறையவேண்டுமானால், மக்கட்பேறு குறைய வேண்டும். மக்கட்பேறுகுறையவேண்டுமானால், சதிபதிகள், மக்கட் பேற்றுக்கான செயலில் அடிக்கடி ஈடுபடாமல், தங்களைச் சற்றுக் கட்டுப்படுத்திக்கொள்ளட்டும். தங்கள் சரீர இச்சையைச் சற்று அடக்கி மட்டுப்படுத்தட்டும். இவ்விதம் செய்வதில் தவறு எதுவுமில்லை.

மேலும், "மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுமல் போகான்;" "கருப்பைக்குள் முட்டைக்கும், கல்லினுள் தேரைக்கும், விருப்புற்றுஅமுதளிக்கும் மெய்யன்"–என்பது போன்ற நம்நாட்டுப் பழமொழிகளை சிந்திக்குங்கால், ஆன்மீக வாழ்வில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த நம் முன்னோர் இறைவனது பராமரிப்பில் எவ்வளவு நம்பிக்கையு உறுதியும் கொண்டிருந்தனர் என்பது தெளிவாகும். ஆதியில் மனிதனை உண்டாக்கிய கடவுள் அவன். தங்கி வாழ்வதற்குரிய இடம், உணவு முதலிய வசதிகளை அமைத்துக் கொடுத்தார். அவர்கள் பெருகிப் பலுகியபோது; அவைகளுக்குரிய உணவுவகைகளை, அவர்களுடைய ஒத்துழைப்பினுல் விளைவின் வழியாகப் பெருக்கினர். அ மூலம் அவர்கள் இவ்வுலகில் வாழ, வழி வகுத்துக் கொ ந்துப் பாதுகாத்து வருகிறூர். அவருடைய இந்தப் பராமரிப்பு என்ருவது ஒருநாள் திடீரென்று நின்றுவிடும் என்று நாம் நினைப்போமாகில், அஃது அவரை அவமானப் படுத்தி தூஷிப்பதாகும். எனவே, கடவுளின் மீது திட

நம்பிக்கை வைத்து. நமது கடமைகளைச் சரிவர செய்து வரவேண்டுமே தவிர, அவரது திட்டத்துக்கு எதிராக எத்தகைய வழிவகைகளையும் கையாளக்கூடாது.

(2) "ஏழ்மையை ஒழிக்க வேறு வழியில்லை; மக்கட் பெருக்கம் அதிகமாகும் காரணத்தால் பல குடும்பங்கள் தரித்திரத்தில் அமிழ்ந்திக் கிடக்க நேரிடுகின்றது; எனவே, குழந்தைகள் வேண்டாம்; அல்லது ஒன்றிரண்டு போதும். அதிகக் குழந்தைகள் வேண்டாம். கர்ப்பத்தடையைக் கையாளுங்கள்"—என்று பறைசாற்றுகின்றனர்.

மறுப்பு :—

இந்த ஆட்சேபனை சாரமற்றது. ஏழ்மையை ஒழிக்க வழி சமூக சீர்திருத்தமே தவிர கர்ப்பத்தடை அல்ல. பல குடும்பங்கள் ஏழ்மையில் வருந்துவதற்கு காரணம் அவற்றின் பிள்ளைப் பேறு அல்ல; நாட்டின் செல்வம் பெரும் பாலும், ஒரு சில சுயநலவாதிகளின் கையில் சிக்கி இருப்பதேயாகும். இந்த சீர்கேட்டைச் செம்மை செய்வது அரசாங்கத்தாரின் கடமை; அவர்களுடன் ஒத்துழைப்பது சமுதாயத்தின உச்ச நிலையில் இருப்போரது கடமை.

பிள்ளைகள் பலரால் குடும்பத்தின் ஏழ்மை நிலை அதிகரிக்கும் என்று இல்லறம் நடத்துவோர் அஞ்சத்தேவையில்லை. பிள்ளைப் பேற்றை அளிக்கும் இறைவன் அவர்களை வளர்க்க வழிகாட்டுவான். மரம் நட்டவனுக்கு தண்ணீர் ஊற்றத்தெரியும். அதனால் பிள்ளைகளைப் பெற்றுவிட்டு, பெற்றோர் சோம்பித்திரியலாம் என்பதல்ல. தெய்வ பராமரிப்பில் முழு நம்பிக்கை இருக்கவேண்டும். அத்துடன் பெற்ற பிள்ளைகளை பேணி வளர்ப்பது தங்கள்மேல் சுமந்த பெருங்கடமை என்பதை அவர்கள் அறிந்து, கடமை உணர்ச்சியால் தூண்டப்பட்டு, உழைப்பைப் பெருக்கி, ஊதியத்தை அதிகமாக்கவேண்டும்; சிக்கன முறைகளைக் கையாளவேண்டும். பாடின்றி பலிதமில்லை. ஆதலால், பிள்ளைகளால் பெருமகிழ்ச்சி அடையும் பெற்றோர், சில கஷ்ட நஷ்டங்களை மேற்கொள்ளத்தான் வேண்டும். இவ்

வாறு தாங்கள் செய்யவேண்டியதை-தங்களால் ஆனதைச் செய்வோருக்கு, இறைவன் மனமுவந்து உதவி புரிவார், நல்வழி காட்டுவார், துன்பதுயரங்களில் துணை நிற்பார், கஷ்ட நஷ்டங்கள் வரும்போது கைதூக்கி விடுவார்.

(3) "தாயின் உடல்நலத்தைக்காக்க வேறுவழியில்லை பல குழந்தைகளைப் பெறும் 'தாயின் உடல்நலம்' குறைகிறது; ஆயுட்காலமும் மட்டுப்படுகின்றது; தேக பலமும் குறைகின்றது. ஆகவே, தாயின் சுகத்தையும், பலத்தையும், நீடிய ஆயுளையும் காக்க, கர்ப்பத்தடைப்பிரயோகம் அவசியம்."

மறுப்பு:—

"பிள்ளைகளைப் பெறுவதால் தாயின் உடல் பலம் குலைகிறது, ஆயுள் குறைகிறது!"—இது உண்மையல்ல. இங்கிலாந்தில் சிசுபரிபாலன இலாக்கா நடத்திய சோதனை, மேற்கண்ட கூற்றைப் பொய்யாக்கிவிட்டது. 500 குடும்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அவற்றுள் ஐந்திற்குஅதிகமான பிள்ளைகளுடைய குடும்பங்கள் 350; ஐந்திற்கு குறைவான பிள்ளைகளுடைய குடும்பங்கள் 150 அந்த 350 குடும்பங்களின் தாய்மாரும், இந்த 150 குடும்பங்களின் தாய்மாரை விட, சற்று மேலான உடல்நலம் படைத்தவர்களாக இருந்தனர். அவ்வாறே அமெரிக்காவில் நடந்த ஓர் ஆராய்ச்சியில் இருந்து; ஒரு குழந்தையை மட்டும் ஈன்றெடுத்த 45 தாய்மார் சராசரி 68 வயதுவரை வாழ்ந்ததாகவும், ஒன்பது, பத்து குழந்தைகளைப் பெற்ற 43 தாய்மாரகள் சராசரி 76 வயதுவரை வாழ்ந்ததாகவும் தெரியவருகிறது. ஆகவே, பிள்ளைப்பேற்றால், பெற்றவளின் சுகமும், ஆயுளும் குறைகின்றன என்பது அபத்தம். அதற்கு மாறாக, மக்கட்பேற்றால் தாயின் உடலில் இருக்கும் துர்நீர் வெளிப்படுகின்றது. உடல் நலமும் நீடிய ஆயுளும் கிட்டுகின்றன. பல குழந்தைகளைப் பெற்ற ஒரு தாய், வியாதியாய் விழ நேர்ந்தால், வியாதிக்குக் காரணம் பிரசவம் அல்ல; உணவு, உடை, சுவாசம், சூழ்நிலை முதலியவற்றிலுள்ள கோளாறுகளேயாகும்.

" பிள்ளைப்பேற்றால் தாயின் பலம் குறைகிறது " இதில் சிறிது உண்மையிருக்கிறது. காமவெறிகொண்டு, சிலர் தங்கள் மனைவியரை இடைவிடாப் பிரசவத்தால் நலிவுறச் செய்கின்றனர். நலிவு அதிகம் ஏற்படுவது பிரசவத்தால் அல்ல — இடைவிடாமல், அடிக்கடி நேரும் பிரசவத்தால் என்பதே உண்மை. ஆகவே, மனைவியரின் உடல்நலத்தைக் காக்க கணவன்மார் தங்கள் சரீர இச்சையைக் கட்டுப்படுத்த வேண்டும். மனிதப்பண்புடன் நடந்துகொள்ளவேண்டும். சாதாரணமாய் இரு பிரசவங்களுக்கிடையே குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது இருப்பதுதான் நல்லது. இதைச் சதிபதிகள் அனுசரித்து ஒழுகவேண்டும். அதற்காக கர்ப்பத் தடையைக் கையாளுதல் கூடாது. புலனடக்கம் வேண்டும். மேலும், எந்தப் பிரசவத்திலும், தாய்க்கு சிறிது நலிவு ஏற்பட்டே தீரும். அதைப் போக்கிக் கொள்ளத் தாய்மார் தகுந்த சவரட்சனை பெறுதல் அவசியம்.

மேலும், குழந்தைப்பேறு அளிப்பவர் கடவுள். அவர் பழிவாங்கும் கொடிய எஜமான் அல்ல. ஒருவரால் தாங்க முடியாத் துன்பத்தை அனுப்பி அவர்கள் தத்தளிப்பதைக் கண்டு ஆனந்தம் அடைபவரும் அல்ல. குழந்தைப்பேற்றை அளிப்பதும், இல்லாமல் செய்வதும் அவரது சித்தமாகும். இல்லற உரிமையை உபயோகிப்பதால், அது எப்போதும் குழந்தைகள் உற்பத்தியாகுமாறு செய்வதில்லை. இந்த உற்பவவிஷயம் மனிதமுயற்சியால் மட்டும் உருவாவதில்லை. கடவுளின் அளவற்ற ஞானமும், வல்லமையும் இல்லாவிட்டால் குழந்தைப்பேறு கிடையாது. மனித் முயற்சி மட்டுமே இதற்குப் போதுமென்றால், குழந்தைகள் வேண்டுமென்று தீர்த்த யாத்திரை போவதும், வரம் வேண்டி கோவில்களில் பாடுகிடப்பதும் தேவையில்லையே! எனவே, இறைவன் மீது உறுதியான நம்பிக்கையுடன் அவரது திட்டப்படி நடப்பவர்கள் எத்தகைய ஏமாற்றமும் அடையமாட்டார்கள்.

## 12. குழந்தைகள் வேண்டாமென்று நினைப்பதே குற்றமா?

(1) குழந்தைப் பேற்றின் அடிப்படைச் செயலான ஆண் பெண் உறவைமட்டும் அறவே ஒதுக்கி, கடவுள் திட்டத்துக்கு முரண் இல்லாது இன்புற்று வாழ்ந்த புனிதர்கள் இருந்திருக்கிறார்கள். இன்றும் இருக்கலாம். இவர்கள், இறைவனால் அளிக்கப்பட்டுள்ள உயிரணுக்களை சேதமாக்குதல் இல்லை. ஆதலால், இத்தகைய வாழ்வு நடத்துதல் குற்றமில்லை.

(2) இவர்கள்' இல்லற வாழ்வு முழுமையும் இல்லாவிடினும் சமயாசமயத்தில் இந்த தன்னடக்கத்தை அனுசரிப்பது, ஓரளவுக்கு குடும்பத்தின நல்வாழ்வை வளர்க்கச் செய்யும் நற்பழக்கமாகும். இப்பழக்கத்தை அநேகர் கையாள முடியும். தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்கள், அவர்கள் இப்பழக்கத்தை அனுசரிக்க கட்டாயப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக தம்பதிகள் நோயுற்று இருக்கும் காலங்களிலும், தொழில், அலுவல், படிப்பு முதலிய காரணத்தை முன்னிட்டும் அவர்கள் ஒருவர் ஒருவரைவிட்டுப் பிரிந்து, தனி வாழ்க்கை நடத்தி, கற்புநெறி தவருது இருத்தலும் உண்டு.

(3) விஞ்ஞானிகள் கூறும் விதிகளை அனுசரித்து (Safe Period) எனப்படும் உற்ப சக்தியற்ற காலங்களில் சதிபதிகள் இல்லற உறவுகொண்டு இன்பம் நுகரலாம். இந்தக் காலத்தின் வரையறையை, தகுந்த மருத்துவரின் உதவியைக்கொண்டு கணித்துக்கொள்ளலாம். இவ்வாறு இல்லற உரிமையால் அனுபவிக்கும் இன்பத்தை இறைவன் திட்டத்துக்கு எதிர்ப்பில்லாமல் சுகிக்க எத்தகைய தடையும் இல்லை.

# இறைவன் நம்மை காப்பவர்

## 13. இறைவன் நம்மைக் காப்பவர் எனருல் அர்த்தமென்ன?

நாம் ஒவ்வொருவருக்கும் புதியதோர் ஆன்மாவைத் தாய் வயிற்றில் வளரும் கருவோடு இணைத்து, உயிருள்ள

மக்களாக உண்டாக்கினதுமட்டுமன்று. இவ்வான்மாவும், உடலும் ஒவ்வொரு விநாடியும் சேர்ந்து இயங்கி வாழ்வதற்கு வேண்டிய உதவியையும் அளித்து வருகிறார் இந்த உதவியை இறைவன் நிறுத்தும்போது, இவை, ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து, உடல் சவமாகவும், ஆன்மா ஆவி உருவான உயிர்ப்பொருளாகவும் தனித்து நிற்கும். இந்நிலையே சாவு அல்லது மரணம் எனப்படும். எனவே, நாம் உயிர்வாழும் ஒவ்வொரு விநாடியும் இறைவனது அளவற்ற கருணையால்தான் என்பது தெளிவாகிறது. மேலும், ஆன்மா, உடல் ஆகிய இவை இரண்டும் சேர்ந்திருக்குமட்டும் அல்ல. அவை புலன்களின் சக்தியுடன் இயங்கி செயலாற்றுவதற்குரிய வசதிகள், உயிர், உடலின்கண் நிலைத்திருப்பதற்குத் தேவையான உணவு முதலியவற்றையும் அளித்துப் பராபரித்து வருகிறார். எனவே, 'அவனன்றி ஓரணுவும் அசையாது'—என்பது முற்றிலும் பொருந்தும். இந்த வசதிகளில், ஏற்றத்தாழ்வு முதலிய வேறுபாடுகள் மிகவும் உண்டு. இவைகளும் இறைவனது திட்டத்தின்படியே, அவரது அனுமதிக்குட்பட்டு செயல்படுபவை. அவர் நம்மிடம்எதிர்பார்ப்பது நமதுஒத்துழைப்பு மட்டுமே. இந்த ஒத்துழைப்பில் நமக்கு வழிகாட்ட அவரே சில கட்டளைகளைக் கொடுத்திருக்கின்றார்.

## 14. இந்த கட்டளையைக் கடவுள் மனிதனுக்கு எப்போது கொடுத்தார்?

(1) உலகத் துவக்க முதல் மக்கள் தம் மனதிலேயே நல்லது; கெட்டது எதுவென்று உணர்ந்து நடக்கும்படி செய்து வருகிறார்.

(2) தாமே நேர்முகமாகவோ, வேறு மக்கள் வழியாகவோ மக்களுக்குப் போதித்து வந்திருக்கிறார்.

(3) அவரால் குறிக்கப்பட்ட சில பெரியோர்களைக் கொண்டு எழுத்து மூலமாகவும் அறிவித்திருக்கிறார்

(4) வேதாகமம் என்னும் வரலாற்று நூற்றொகுதியில் குறித்துள்ளபடி, கடவுள் தமது திருக்குமாரனாகிய சேசுக் கிறிஸ்துவை மனித அவதாரம் எடுக்கவைத்து, மக்களுக்குப் போதிக்கும்படி செய்துள்ளார்.

(5) கிறிஸ்துவுக்குப் பிறகு அவருடைய பிரதிநிதிகள் வழியாகத் தெரிவிக்கிறார்.

## 15. நாம் கடவுளின் கட்டளைக்கு ஏன் கீழ்ப்படிய வேண்டும்?

(1) நாம் இவ்வுலக வாழ்வில் மன நிம்மதியும், அவரது ஆசீரை அடையவும்;

(2) மறுவாழ்வில் பேரின்ப சுகமடையவும்.

(3) நாம் அவருடைய உடமையாதலால், அவருக்கு கீழ்ப்படிதல் நமது கடமையாதலும்;

(4) கீழ்ப்படியாவிட்டால் இம்மையிலும், மறுமையிலும் அவரால் தண்டிக்கப்படுவோம் என்பதாலும், நாம் கடவுளின் கட்டளைக்குக் கீழ்ப்படியவேண்டும்.

## 16. நாம் இந்தக் கடமையை எவ்வாறு நிறைவேற்றலாம்?

கடவுளை அறிந்து, சிநேகித்து, ஆராதித்து, கீழ்ப்படிதலாலும் இந்தக் கடமையை நிறைவேற்றலாம்.

## 17. கடவுளைப்பற்றி நாம் அறியவேண்டியதென்ன?

அவரைப்பற்றி அறிந்தவர்களோடு பழகுவதாலும், அவரைக் குறித்து எழுதப்பட்டுள்ள நூல்களைப் படித்தறிவதாலும், நாம் படித்தவற்றைப்பற்றி தியானித்தலாலும் நமது அறிவை விசாலமடையச் செய்யலாம்.

## 19. கடவுளை அறிவது நமக்குக் கடமையாக இருப்பதேன்?

(1) உண்மையையும், நன்மைத்தனத்தையும் அறிவதே நமது புத்தியின் கதி; உன்னத உண்மையும், நன்மைத் தனமும் பொருந்தியவர் கடவுள் ஒருவரே; ஆகையால் அவரை அறிவது அவசியம்.

(2) கடவுள், நம்மை உண்டாக்கிக்காப்பாற்றி, நம்மீது மிகுந்த அன்பு கொண்டுள்ள நமது எஜமான்; ஆகையால் நாமும் அவர் மீது அன்புடையவர்களாயிருப்பது நியாயம்; இதற்காக முதன்முதல் அவரை அறிவது அவசியம்.

(3) நாம் கடவுளின் சித்தப்படி நடக்கவேண்டியவர்கள் ஆகையால் அவர் சித்தம் என்னவென்றறிய அவரை அறியவேண்டும்.

(4) நமது பரிபூரணமாகிய கடைசி கதியை அடைவதற்கு அவரை அறிவது அவசியம்; ஏனெனில் அவரை அறிந்து, அவரைசிநேகிப்பதே நமதுபூரணபாக்கியமாகும்.

## 20. அவரை ஏன் நேசிக்க வேண்டும்?

நன்மையானதைத் தேடி, அதை நேசிப்பதே நமது மனதின் தொழில்; கடவுள் சர்வ நன்மையிலும் சிறந்தவர். அவரே நன்மைத்தனம் என்றிருப்பதால் அவரை நேசிக்க வேண்டும்.

## 21. கடவுளை நாம் எப்படி நேசிக்கக்கூடும்?

அவரையும், அவருடைய இலட்சணங்களையும் அறிந்து, அவற்றைத்தியானித்து, அவர் தம்மிலே எவ்வளவு நன்மைத் தனமுள்ளவரென்றும், நம்மீது எவ்வளவு கருணையுள்ளவரென்றும் கண்டுணர்வதால், அவர் மட்டில் நமக்கு இயல்பாகவே சிநேகம் ஏற்படும்.

22. கடவுளை நாம் எவ்வளவு சிநேகிக்க வேண்டும்?

அவர் சகலத்திலும் உத்தமரானதுபற்றி, மற்றெந்த பொருட்களைவிட அதிகமாய் சிநேகிக்க வேண்டும்.

23. கடவுளைச் சிநேகிப்பதைவிட, மற்றப்பொருட்களை சிநேகிப்பது எளிதல்லவா?

ஆம். மற்றப் பொருட்கள் நமதருகே இருக்கின்றன. அவற்றை நாம் காணவும், தொடவும், அவை நமது அன்பை கவர்ந்துகொள்ளுகின்றன என்று நாம் உணரவும் கூடுமாகலால், அவற்றை நேசிப்பது மிகமிக எளிது என்பதற்குச் சந்தேகமில்லை ஆனல், கடவுளை நாம் பார்க்கவும் முடியாது, தொடவும் முடியாது; ஆகையால் அவரைச் சிநேகிப்பது அவ்வளவு எளிதல்ல.

24. கடவுள் நமது அன்பைக் கவர்ந்துகொள்ளுகிறார் என்பதை நாம் உணராதிருக்க, மற்றப் பொருட்களைவிட, அவரை அதிகமாய் சிநேகிப்பது முடியாத காரியமல்லவா?

இல்லை. நமது உணர்ச்சிகளால் அவரை சிநேகிக்க வேண்டுமென்பது கடமையல்ல; நமது புத்தியையும், மனதையும்கொண்டு, மற்றெந்தப் பொருட்களையும்விட அவரை அதிகமாய் சிநேகிக்க வேண்டும்; அதெப்படியெனில் மற்றப் பொருட்களின் மட்டில் நமக்குள்ள சிநேகம் கெட்டது எனில் அதை விட்டுவிட வேண்டும்; ஒன்றில் கடவுளை அல்லது வேறு எதையாவது கைவிட வேண்டியிருந்தால், மற்ற யாவையும் விட்டுவிட்டுக் கடவுளையே நாம் கைக்கொள்ள வேண்டும்.

## ஆராதனை - வணக்கம்

25. வழக்கமாய் கடவுளைச் சிநேகிப்பதற்கு நாம் செய்ய வேண்டியதென்ன ?

குறிப்பிட்ட வேளைகளில் அவரை ஆராதித்து வணங்கி (வழிபாடு செய்து) எப்போதும் அவருடைய கட்டளைகளை அனுசரித்து வருவதே அவரைச் சிநேகிப்பதற்கான வழியாகும்.

26. அவரை ஆராதிப்பது எப்படி ?

வியப்புடன் அவரைப்பற்றிச் சிந்தித்து, துதித்து கொண்டாடி, அவர் நமக்குச் செய்துவரும் நன்மைகளுக்காக அவருக்கு நன்றி செலுத்தி, நமக்குத் தேவையான உதவி சகாயங்களை அவரிடமிருந்து மன்றாடுதலாகும்.

27. இவ்விதம் நாம் எப்போது செய்தல் தகுதியாகும் ?

பிறரோடு சேர்ந்து சில சமயங்களில் பகிரங்கமாகவும், வேறு சமயஙகளில், தனித்து நாமாகவும் செய்வதுண்டு.

28. பகிரங்கமான ஆராதனை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் ?

எந்த வகையில் அது தகுந்ததும், உண்மையானதும், கடவுளுக்குப் பிரியமானதும் என்று நாம் நம்புகிறோமோ, அந்த முறையில் அதைச் செய்தல் வேண்டும்.

29. தனி ஆராதனை எப்போது செய்யவேண்டும்?

நாம் நித்திரையைவிட்டு எழுந்திருக்கும்போதும், படுக்கப்போகும்போதும், துன்பம் சோதனை நேரிடும் சமயங்களிலும் இறைவனை ஆராதித்து, ஜெபித்தல் வேண்டும்.

## 30. நாம் நெடுநேரம் ஜெபம் செய்தல் அவசியமா?

இல்லை. கவனக் குறைவாகவும், பழக்கத்தை முன்னிட்டு நெடுநேரம் ஜெபிப்பதைவிட, கவனத்தோடும், சிநேகப்பற்றுதலோடும், சிறிது நேரம் கடவுளைப்பற்றி தியானிப்பது சிறந்த ஜெபமாகும்.

## 31. நமது ஜெபங்களில் நாம் சொல்லத்தக்கது என்ன?

நமது ஜெபங்களில் பின்வருமாறு சொல்லலாம்:

(1) என் சர்வேசுரா! நீர் சர்வ நன்மைத்தனமுள்ளவரும், எனக்கு நன்மை புரிகிறவருமாயிருக்கிறதனால், உம்மை நான் விசுவாசித்து, நம்பி, சகலத்தையும்விட உம்மையே நேசிக்கிறேன்.

(2) ஆ! என் தேவனே, நான் உம்மை ஆராதித்து வணங்கி நமஸ்கரிக்கிறேன். எனக்குத் தேவையான காரியங்களை எனக்குத் தந்தருளும்.

(3) "காலையில், விசேஷமாய் இந்த நாளில் நான் என் கடமையைச் செய்து, சகல சோதனைகளையும் ஜெயித்து பாவத்தை விலக்கும்படி எனக்கு உதவி செய்யும்" —என்று சொல்லுதல் சிறப்புடைமையாகும்.

இரவில் சொல்லத்தக்கது:— "இன்று எனக்குச் செய்த உபகாரங்களுக்கு நன்றியறிந்திருக்கிறேன்".

பாவத்தில் தவறி விழுந்துவிட்டால்:— "என் பாவங்களுக்காகத் துக்கப்படுகிறேன். இனிமேல் அவற்றைச் செய்வதில்லையென்று பிரதிக்கினை பண்ணுகிறேன். நான் செய்த பாவங்களை மன்னித்து, இனிமேலாக அவற்றைச் செய்யாதபடி எனக்கு உதவி புரிந்தருளும்" என்பதைச் சேர்த்துச் சொல்லலாம்.

(4) பாவச் சோதனை நேரிடும்போது:— "நான் உனக்கு உகந்த பிள்ளையாயிருக்க உதவி புரியும்; இந்தப் பாவத்தில் விழாதபடி, என்னைத் தற்காத்தருளும்" —என்று

மன்றாடி, உன் மனதை உறுதிப்படுத்தி, பாவத்திற்குக் காரணமானதை விட்டுவிலகி, வேறு ஏதாவது செய்வதில் ஈடுபட வேண்டும்.

நித்திரை போகுமுன் உள்ளப் பரிசோதனை செய்வது மிகவும் பிரயோஜனமானது. நம்மிடமுள்ள தீய நாட்டங்களின்மேல் வெற்றிகொள்ளவும், தீய வழக்கங்களை நீக்கவும், புண்ணியக் கிரிகைகளைச் செய்யவும், நமது தினசரி அலுவல்களைச் சரிவரச் செய்துவரவும், இந்தப் பயிற்சி மிகவும் சிறந்த வழியாகும். ஆகிலும் நாம் செய்த குற்றங் குறைகளைக் கண்டுபிடிப்பது மட்டும் போதாது. உள்ளப் பரிசோதனையால் மெய்யான பலன் அடைய வேண்டுமாகில் நம்மிடம் இருப்பதாக, நாம் கண்டுணர்ந்த குற்றங்களை அருவருத்து, அவற்றை இனிமேல் செய்வதில்லையென்கிற உறுதியான தீர்மானம் செய்துகொள்ள வேண்டும்.

## 32. கடவுளுக்குக் கீழ்ப்படிந்து ஊழியம் செய்ய வேண்டும் என்கிற கடமை எதில் அடங்கியுள்ளது?

சகல பாவங்களையும் விலக்கிக் கடவுளுக்கும், பிறருக்கும் நமக்கும் உரித்தானதைச் செய்வதில் இந்த கடமை அடங்கி இருக்கிறது.

## 33. கடவுளைப் பற்றிய அறிவு என்பதின் அர்த்தமென்ன?

(1) இறைவனது தன்மை, இலட்சணங்கள்.

(2) அவருக்கும், நமக்கும் உள்ள உறவு; இதுவரை அவர் நமக்குச் செய்திருப்பவை, இப்போது நமக்கு செய்து வருபவை, நாம் இறந்தபின் நமக்கு அவர் அளிக்க இருக்கும் சம்பாவனை.

(3) நமக்கு அவர் கொடுத்திருக்கும் ஜீவியத் திட்டம், அதை அனுசரிக்க அவர் காட்டியுள்ள வழிவகைகள், அவற்றைச் செயல்படுத்தும்போது நமக்கு அதில் உதவி செய்ய

அவர் நியமித்துள்ள ஆட்கள், அதை அனுசரியாவிட்டால் நமக்கு வரும் நஷ்டம், அனுசரித்தால் நாமடையும் லாபம் முதலியவைகளைப் பற்றி நாம் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் தெரிந்துகொள்ள வேண்டியவைகளே கடவுளைப் பற்றிய அறிவு எனப்படும்.

## 34. கடவுள் நமக்குக் கொடுத்துள்ள ஜீவியத் திட்டம் யாது?

அறமுறைக்கும் நல்லொழுக்கத்துக்கும் அடிப்படையான பத்து விதிகளைக் கொடுத்துள்ளார். இவைகள் பத்து கற்பனைகள் என்று சொல்லப்படும். அவையாவன;

(1) கடவுள் ஒருவரே, பல கடவுள் இருக்கக்கூடாது.

(2) இறைவனின் திருநாமத்தை வீணிலே உபயோகம்செய்து, ஆணையிடல், பொய்ச் சத்தியம் செய்தல் கூடாது.

(3) கடவுளுக்காகவும், அவரது ஆராதனை முதலியவற்றிற்காகவும் குறிப்பிட்ட நாட்களை ஒதுக்கி, அவற்றில் இறைவனது சேவைக்கானவற்றைச் செய்து வர வேண்டும்.

(4) மாதா பிதாவை சங்கித்து வணங்க வேண்டும்.

(5) கொலை செய்யக் கூடாது.

(6) மோக பாவம் செய்யக் கூடாது.

(7) திருடக் கூடாது.

(8) பொய்ச்சாட்சி சொல்லக் கூடாது.

(9) பிறன் மனைவியை விரும்பக் கூடாது.

(10) பிறர் உடைமையை விரும்பக் கூடாது.

## 35. கடவுள் நமக்குக் காட்டியுள்ள வழிவகைகள் யாவை?

(1) பெரியோர்களின் அறவுரை, அறிவுரைகளும்.

(2) உண்மையை விளக்கும் நூல்கள்.

(3) நம்முடன் வாழும் நல்லோரின் நன்மாதிரிகை முதலியன.

## 36. நமக்கு உதவி செய்யும்படி இறைவன் நியமித்துள்ள மக்கள் யாவர்?

(1) மெய்மறைப் போதகர்கள்.

(2) துறவிகள். (கன்னியர், சந்நியாசிகள்)

(3) ஒழுக்க நலம் வாய்ந்த பெற்றோர், ஆசிரியர்கள்.

[4] நீதியும், நேர்மையுள்ள நாட்டுத் தலைவர்கள்

[5] நமது நன்மையைத் தேடும் நண்பர்கள் ஆகியவர்களை இறைவன் நமக்கு உதவிசெய்யும்படி நியமித்துள்ளார்.

## 37. கடவுளை நேசிப்பது என்றால் என்ன?

இறைவனது சட்டத்தை நுணுநுணுக்கமாக அனுசரிக்க ஆர்வத்துடன் விரும்புதல், அதை அனுசரியாதபோது, அதற்காக வருந்துதல், அனுசரிக்கும்போது மனநிறைவு கொள்ளுதல்; அவரைப்பற்றியும், அவர் படைத்துள்ள பொருட்களைப் பற்றியும், அவரது செயல்களைப்பற்றியும் அவரை மற்றவர்கள் சங்கித்து வழிபடுதலைக் காணும் போதும் மகிழ்ச்சி அடைவது; அவரது ஆசீரையும், நெருங்கி ஒன்றிக்கும் நிலையையும்பெற முயற்சிப்பது. கடைசியாக அவரை முகமுகமாய் தரிசித்துப் பேரின்பமடைய துடிக்கும் உள்ளத்தோடு ஆசிப்பது ஆகியவை கடவுளை நேசிப்பவர்களிடம் காணக்கூடிய குணங்களாகும்.

## 38. கடவுளை சேவிப்பது என்றால் என்ன?

கடவுளது சேவையில் தன்னை முழுவதும் அர்ப்பணிப்பது. நாம் அவரை அறிந்துள்ளவரை அவரை ஆராதிப்பது.

அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நன்றி கூறுவது. நமக்குத் தேவையானதை, பிள்ளைக்குரிய வாஞ்சையுடனும், பணிவன்புடனும் அவரிடம் கேட்பது; அவரைப் பிறர் அறிந்து சிநேகிக்க ஆவலுடன் உழைப்பது; அவரது சட்டத்தை நுணுநுணுக்கமாய் தானும் அனுசரித்துப் பிறரும் அதை அனுசரிக்கச் செய்வது; சுருங்கக் கூறுமிடத்து, இறைவனின் திருநாமம் உலகமெங்கும் பரவி புகழடைய இடைவிடாது உழைப்பது.

## 39. கடவுளை நேசிக்க விரும்புகிறவன் என்ன செய்யவேண்டும்?

தனது நினைவு, வாக்கு, கிரிகைகளில் கவனம் செலுத்துவதுடன், நற்குண பழக்க வழக்கங்களைக் கையாண்டு, தூய்மையான வாழ்க்கை நடத்த முயற்சிக்கவேண்டும்.

## நினைவு

## 40. நினைவு என்றால் என்ன?

முக்காலத்திலும் நிகழ்கிற சம்பவங்களைப்பற்றியோ, அல்லது ஆட்கள், பொருட்களைப்பற்றிய எண்ணங்கள் தாமாகவோ அல்லது நமது முயற்சியாலோ, நமது மனத்திரையில் தங்கி காட்சியளிப்பதாக நாம் உணருவதே நினைவு எனப்படும்.

## 41. நினைவுகளைப்பற்றிய ஒழுங்கு யாது?

நினைவு நல்ல நினைவு, தீய நினைவு என இருவகைப்படும். நம்மைக் கடவுளுடன் ஒன்றிக்கச்செய்யும் நினைவுகளை நல்ல நினைவுகள் என்று சொல்லலாம். எடுத்துக்காட்டாக, தேவசிநேகம், பிறர் சிநேகம் இவற்றுக்கடுத்த நினைவுகளைக் கூறலாம். நமக்கோ அல்லது பிறருக்கோ தீங்கிழைக்கக் கூடியவைகளைத் தீய நினைவுகள் என்று கூறலாம். உதாரணமாக, தன்னைப்பற்றிய பொறாமை, செருக்கு, அகங்காரத்துக்

குரிய நினைவுகள், பொறுமையினால் பழிவாங்கும் நினைவுகள். ஆசாபாசத்தினால் விளையும் சிற்றின்ப நினைவுகள் ஆகியவை நமது முயற்சி இன்றியே, தம்மியல்பிலேயே நம் மனதில் உதிப்பதுண்டு. இவற்றை நாம் உணர்ந்து, அவை எத்தகையவை என்பதை அறிவோமானால், அவற்றை நீக்கி உடனே தடுக்க முயற்சி எடுக்கவேண்டும். இவை சிலசமயங்களில் நமது மனதிலேயே அகலாது இருக்கலாம். இவ்வாறு நிலைத்து இருக்கும்போது, நாம் அவற்றைப் பொருட்படுத்தாது, அதனிடம் விருப்பம் கொள்ளாது அவற்றை நீக்குவதற்கு முழுமனதுடன் முயற்சி செய்துகொண்டிருக்கலாம். இத்தகைய முயற்சியில் நாம் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு சமயமும் நாம் குற்றத்தில் விழுந்தவர்கள் அல்ல; இவற்றை நீக்குவதற்கு நாம் எடுக்கும் முயற்சிகள், புண்ணிய முயற்சிகளாகக்கூடக் கருதப்படுகிறது. இதற்கு மாறாக நாம் தீய நினைவுகள் என்று தெரிந்துகொண்டும், அவற்றில் திளைத்து உற்சாகத்துடன் அவற்றை ஆதரித்து, நமதாக்கிக்கொண்டு அதில் நீண்டநேரம் இன்பத்தையோ, பகை உணர்ச்சியையோ அனுபவிப்போமாகில் அது குற்றமாகும். சிலசமயங்களில் நாமாகவே நமது ஐம்புலன்களின் உதவியைக்கொண்டு கவனக்குறைவினாலோ, அல்லது கெட்ட பழக்கத்தினாலோ இத்தீய நினைவுகளை வருவிக்க முடியும். இந்நிலையில் குற்றங்களின் பட்டியல் வேறுபடுகிறது. அதாவது; இந்தத் தீய நினைவுகள் நமக்கு வருவதற்கு, நாம் காரணமாயிருந்தது ஒரு குற்றம்; அவை வந்தபிறகு அவற்றை நீக்காதுமட்டுமின்றி, அவற்றில் ஈடுபட்டு, மனதில் இன்பமோ, பகையுணர்வோ கொண்டு இருப்போமானால அது வேறு குற்றமாகும்.

## 42. மனது பொருந்தி தீய நினைவுகளில் இன்பமடைவதினால் நமக்கு வரும் கேடுகள் யாவை?

[1] மன நிம்மதியை இழந்துவிடுகிறோம்.

[2] பிறர் மீது ஏற்படும் காமம், குரோதம், பகை வர்மம் அதிகரித்து அவர்களை கெடுக்கத் தயாராக இருக்கிறோம்.

[3] இறைவனிடம் நமக்கு இருக்கவேண்டிய ஈடுபாடு நெருங்கிய தொடர்பு, அன்பு ஆகியவற்றை இழந்து அவரை மறந்துபோகிறோம்; அல்லது அவரை வெறுக்கிறோம்.

[4] எந்தவிதமான தீயசெயல்களையும் செய்யப் பின் வாங்காது சூழ்ச்சி செய்கிறோம்.

## 43. இந்தத் தீய நினைவுகளை எவ்வாறு அகற்றலாம்?

தீயபழக்கங்களை, நற்பழக்கங்களைக்கொண்டு, மாற்றி அகற்றுவது போல, தீயநினைவுகள் மனதில் தோன்றும் போது கடவுளுக்கு மனவருத்தம் உண்டாக்குமே என்னும் அன்புடன்கலந்த அச்சத்தோடு, மனம்வருந்தி, அவற்றுக்கு காரணமானசந்தர்ப்பங்களைமுதன்முதல் அகற்றவேண்டும். அடுத்தபடியாக, அவற்றிற்கு எதிரான நல்ல நினைவுகளை வருவித்து, சிறிதுசிறிதாகத் தீயநினைவுகளை நீக்க முயற்சிக்கவேண்டும். இத்தகைய முயற்சிகளாலும், தீயநினைவுகள் மாறுவிட்டால், அவற்றைக் கவனிக்காது நாம் கைக்கொண்டுள்ள அலுவலில் கூடுதலான கவனம் செலுத்தி, முனைந்து அவ்வேலையில் ஈடுபடவேண்டும். தீயநினைவுகள் நம்மை விட்டு நீங்கும்படி இறைவனைப் பிரார்த்திப்பது மிக மிக அவசியம். தீயநினைவுகள் நம்மைவிட்டு நீங்கியபின், இனி மேலும் இத்தகைய சந்தர்ப்பங்கள் நேரிடாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். "பிறன் மனைவியுடன் சேர்ந்து வாழாவிட்டாலும், எவனொருவன் அதனைத் தீயநினைவுடன் பார்க்கிறானோ அவன் விபசாரமென்னும் குற்றத்தைக் கட்டிக்கொள்ளுகிறான்" என்பது கிறிஸ்துவின் வாக்கு.

### 44. நினைவைக்கொண்டு கடவுளைச் சேவிப்பது எங்ஙனம்?

இறைவனை நோக்கி. நமது மனதை அடிக்கடி எழுப்பி அவரது நன்மைத்தனத்தையும், மற்ற குண இலட்சணங்களையும் நினைத்து, மனதில் பெருமிதம் கொண்டு சிந்திப்பதால், நாம் அவரை ஆராதிக்கிறோம் சிறப்பாக காலையில் எழுந்ததும் சற்றுநேரம் அவருக்காக ஒதுக்கிவைத்து. அவரைப்பற்றி நினைத்துத் தியானிக்கலாம். கடந்த இரவு முழுமையும் யாதொரு துன்பமும் இன்றி காப்பாற்றியதற்கு நன்றியும், துவக்கியிருக்கும் நாள் முழுவதற்கும் நமக்கு வேண்டிய உதவியை அளிக்கும்படியும் கேட்கலாம் உலகில் காணும் பொருட்கள் கேள்விப்படும் நிகழ்ச்சிகள் இவற்றில் காணப்படும் இறைவனின் மகிமையைப்பற்றி எண்ணி எண்ணி மகிழ்ந்தனர் மகான்களும புனிதர்களும். நாம் அவர்களைப் போல அவ்வளவுதூரம் பரமன் தியானத்தில் மூழ்காவிடினும் வேலையின்றி ஓய்வாயிருக்கும் போது வீண் மனக்கோட்டைகளாகிய மணற்கோட்டைகளை எழுப்பி, அவை சரிந்து விழுவதுகண்டும் மனம் இடிந்து ஏமாற்றம் அடைவதற்குப் பதிலாக. இறைவனைப்பற்றிய நல்ல, உயர்ந்த நினைவுகளை வருவித்து, சிந்தப்பது மனதுக்கு எத்துணை நிம்மதியை அளிக்கும்! மேலும் பிறருக்கு உதவி செய்யும் நோக்கத்துடன். நல்ல திட்டங்களை வகுத்து; அவற்றைச் செயல்படுத்தி பிறர்நலத் தொண்டாற்ற முன் வருவோமாகில், நமது வாழ்க்கை சிறந்த குறிக்கோளுடைய வாழ்க்கையாக அமையுமன்றோ!

## வாக்கு

### 45. வாக்கு அல்லது பேச்சினால் நம் கடவுளை சேவிப்பது எங்ஙனம்?

"இதய நிறைவில் வாய் பேசும்" — என்பது மூதுரை. இறைவனின் இயல்பு. குண நலன்கள், அருட்செயல்களை நாம் அறிந்தபின், இதை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறி,

அவர்களும் இறைவனது மகிமை, பெருமைகளை அறியும் படியும், அதன் வழியாக. அவரை நேசிக்கும்படியும் செய்ய வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். தனி மனிதனிடமோ, பலபேர் கூடியிருக்கும் கூட்டத்திலோ, நாம் இறைவனைப்பற்றிய உண்மையை எடுத்துரைக்கத் தயாராக இருக்கவேண்டும்.

## 46. இத்தகைய பிரசாரம்செய்பவர்களிடம் இருக்க வேண்டிய குணங்கள் யாவை?

(a) **உண்மை :**—உண்மையை, உள்ளபடியே வேண்டிய அளவில் உண்மையாகக் கூறுவது. அச்சத்தினல் உண்மையை மறைத்தோ, அல்லது நமது பேச்சைக் கவர்ச்சிகரமாக்க வரம்பு கடந்து இல்லாதவற்றைக் கூட்டியோ, மிகைப்படுத்தியோ பேசுவது பொய். இந்நிலையில், பிற்பாடு வெளிப்படுமாகில் நம்மை ஒருவரும் நம்ப மாட்டார்கள்.

(b) **மனஉறுதி :**—இறைவனைப்பற்றிய உண்மைகளை கூறுவதில் தயக்கம் இருக்கக்கூடாது. "உண்மை எப்போதும் வெற்றி கொள்ளும்" "இறைவன் என்னோடு இருக்கையில் என்னை எதிர்ப்பவன் யார்?"—என்னும் திடமான மனதுடன் எடுத்துச் சொல்லவேண்டும். இடம், காலம், சூழ்நிலை முதலிய சந்தர்ப்பங்களுக்கு ஏற்றபடி விவேகத்துடன் இருக்கவேண்டியது உண்மையே; ஆனல் கோழைத்தனமின்றி நமது கொள்கையை நிறுவவேண்டும்.

(c) **அமைதி :**—இறைவனைப்பற்றிய உண்மைகளைப் பிரச்சாரம் செய்யும்போது, சுயநலத்தைப் பாராட்டக் கூடாது. ஆனபடியால், நம்மிடம் ஆத்திரமோ, படபடப்போ இருக்கக்கூடாது நமது பேச்சில் சில கொள்கைகளைத் தாக்கிப் பேச நேரிடலாம். அப்போது, அந்தக் கொள்கைகளைப்பற்றிய நமது கருத்து வேறுபாட்டைக் காட்டலாமே தவிர, அக்கொள்கைகளைப் பின்பற்றுவோர் மீது கோபப்படலாகாது. ஏனெனில், சில சமயங்களில்

அறியாமையே அபத்தத்தின் காரணமாயிருக்கிறது. அமைதியுடன் எடுத்துரைக்கும், இடித்துரைகள், கேட்போர் மனதில் தாக்கி, எளிதாக உண்மையை உணரச் செய்வதை நமது அனுபவத்தில் காணலாம்.

(d) பணிவு :— நாம் எடுத்துரைக்கும் உண்மைகள் நமக்கு மட்டுமே தெளிவாகவும், திருத்தமாகவும், விளங்குவதாகவும், மற்றவர்கள் எல்லோரும் பேதைகள் என்னும் கர்வ மனப்பான்மை கொள்ளலாகாது. உண்மை அனைவருக்கும் பொதுவானது. சகல மக்களும் உண்மையை அறிவதற்கு உரிமை உள்ளவர்கள் என்றும், பிறருக்கு உண்மையை விளக்கி கூறும் வாய்ப்பு தனக்குக் கிடைத்தது பெரும் பேறென்றும் கருதி, தாழ்மையுடனும், பணிவுடனும் பேச வேண்டும்.

47. உண்மையைப் பிரச்சாரம் செய்வதில், பேச்சைத்தவிர, வேறு வழிவகை எதுவும் உண்டா?

அச்சுப் பிரசுரங்களைக் கையாளுவது மற்றொரு நல்ல முறையாகும். பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி உண்மைகளை விளக்கலாம். புத்தகங்களை நாமாகவோ அல்லது மற்றவர்களின் உதவியினலோ, வெளியிட்டு உதவலாம் வெளியீடுகளை நாமும் வாங்கி வாசித்து, மற்றவர்களும் வாசித்தறிய வழி செய்யலாம். ஆனால் ஒன்று: பேச்சுப் பிரச்சாரத்தில் அனுசரிக்க வேண்டிய நன் முறைகளை எழுத்துப் பிரச்சாரத்திலும் கைக்கொள்ள வேண்டும்.

## செயல் அல்லது கிரிகை

48. நினைவு, வாக்கு மாத்திரமின்றி, கிரிகையிலும் நமது அன்பைக் காட்டி, கடவுளைச் சேவிப்பது எங்ஙனம்?

மனிதனுடைய உடலுறுப்புகளின் அசைவுகளைக்கிரிகைகள் அல்லது செயல்கள் என்று சொல்லலாம். நா அசைவு

என்னும் பேச்சைப்பற்றி முன்னே பார்த்தோம். மற்ற கிரிகைகளில் சில, அவனது சுய அறிவு, சுய மனதுடன செய்யக் கூடியவை (உ-ம்) கையில் எழுதுகோலை எடுத்து ஒரு கடிதம் எழுதுவது. இன்னும் சில சுய மனதுப், அறிவும் ஈடுபடாமலே நிகழ்வன (உ-ம்) இருதயத் துடிப்பு. இரத்த ஓட்டம் முதலியன. இதைத்தவிர இன்னும் வேறு விதமான கிரிகைகளும் உண்டு.

(1) சுய அறிவுடன் மட்டும், சுயமனிதன் ஒன்றிப்பின்றி நடைபெறுவது. (உ-ம்) கால் அடியெடுத்து வைத்து நடப்பது இத்தகைய கிரிகைகளையும் நினைவுபடுத்திக்கொண்டு அதை மனதார கடவுளுக்காக என்று செய்யும் போது அது ஒரு சிறந்த புண்ணியக் கிரிகையாக மாறுகிறது.

(2) சுய அறிவும், மனதும் உள்ள ஒரு விருப்பமான கிரிகை (உ-ம்) சுவையுள்ள பொருளை ருசித்துப் புசிப்பது, இதுவும், தனது விருப்பத்துக்காக என்று மட்டுமில்லாமல், இறைவனின் நன்மைத்தனத்தை நினைவு கூர்ந்து, அவரது சிநேகத்துக்காக என்று செய்தால் ஒரு புண்ணியக் கிரிகையாகும்.

(3) சுய அறிவும், மனதும் பொருந்திய ஒரு வெறுப்பான கிரிகை (உ-ம்) உடல் வருந்த மண் சுமப்பது, இந்த விதமான செயல்களை, மக்கள் கடவுளுக்கு விரோதமாகச் செய்யும் மாபாதங்களுக்கு ஈடுசெய்யும் பரிகாரக் கருத்துடன் முறையிடாது, தொடர்ந்து செய்வது சிறந்த புண்ணியமாகும். இத்தகைய புண்ணியக் கிரிகைகளினுல் நாம் கடவுளுக்குத் திருப்திகரமான முறையில் சேவை செய்யலாம்.

## 49. கடவுள் சேவைக்காக என்று அர்ப்பணம் செய்யும் கிரிகைகளில் வேறுபாடுகள் உண்டா?

ஆம்; உண்டு. அவை பல வகைப்படும்.

(a) எளிதானது அல்லது கடினமானது. அதாவது; தனது சொந்தப் பலத்தைக்கொண்டு எளிதாகச் செய்யக் கூடியது. (உ-ம்) 16 வயது பையன் ஒரு மைல் நடப்பது அல்லது தன் பலத்தையெல்லாம் கூட்டி பிரயாசையுடன் அதிக வேலே செய்வது. (உ-ம்) அதே பையன் விடாது தொடர்ந்து 20 மைல் நடப்பது.

(b) மனதுக்குப் பிடித்தது அல்லது பிடிக்காதது. அதாவது, ஒருவன் விருப்பத்தோடு ஆவலாகச் செய்யக் கூடியது. (உ-ம்) மாணவன் பந்து விளையாடுவது. அல்லது வெறுப்போடு முறையிட்டுக்கொண்டும், முனகிக் கொண்டும். செய்வது. (உ-ம்) குப்பைக் கூளங்களைக் கூட்டிச் சுத்தம் செய்தல்.

(c) கொடுக்கப்பட்டது அல்லது தெரிந்துகொள்ளப் பட்டது. (உ-ம்) ஆசிரியர் மாணவனுக்கு வீட்டுப் பாடமாகக் கொடுக்கப்பட்ட பயிற்சிகள் அல்லது தன் விருப்பப் படி தெரிந்துகொண்ட ஓய்வு நேரப் போக்குக்கான வேலைகள் (உ-ம்) தபால் தலைகள் சேகரித்தல், நூல் பின்னுதல் முதலியன.

## இறைவன் நமது தீர்வையாளர்

### 50. இறைவன் நமது தீர்வையாளர் என்றால் என்ன?

இறைவன் நம்மை, தனக்காகப் படைத்தவர், நமது வாழ்க்கையை அவருக்காக அர்ப்பணித்து, நமது மனம், வாக்கு, கிரிகை ஆகிய அனைத்தையும் அவருக்காகவே உபயோகப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார். அதே சமயத்தில் நமக்கு மன சுவாதீனத்தைக் கொடுத்து, நன்மை செய்யவும் அல்லது அதை அகற்றி, தீமை செய்யவும் வேண்டிய தீர்மானத்தை நாமே முடிவு கட்டும் சக்தியையும் கொடுத்திருக்கிறார். நாம் இந்த சக்தியைப் பயன்படுத்தி,

தீர்மானிக்கும்போது எந்தநிலையில் நாம் இருக்கின்றோமோ அதற்கேற்ற தீர்ப்பை நமக்கு வழங்குவார். அத்தீர்ப்பின்படி, பேரின்பமடைய, மோட்ச வீட்டுக்கோ, அல்லது நித்திய வேதனை அனுபவிக்க நரகத்துக்கோ நாம் போகும்படி இருக்கும். இதைத்தான் தீர்வை என்கிறோம்.

## 51. இந்தத் தீர்வையின் தன்மை யாது?

மனிதப் பிறவி எடுத்த அனைவருக்கும் இந்த தீர்வை நடக்கும். பாவி, பரிசுத்தன், ஜாதி, மதம், அந்தஸ்து என்னும் யாதொரு வேறுபாடுமின்றி, சரீரத்தைவிட்டு, ஆன்மா பிரிந்த நேரத்திலேயே, அதே இடத்திலேயே, எல்லாவற்றையும் அறிந்த கடவுள், அந்த ஆன்மாவின் நிலையை அதற்கே தெளிவுறக் காட்டித், தனிப்பட்ட முறையில், அதாவது மற்ற பூலோகவாசிகள் ஒருவரும் அறிந்துகொள்ள முடியாத விதத்தில் தீர்ப்பளித்து குறிக்கப்பட்ட இடத்தில் அவ்வான்மாவை அனுப்பிவைப்பார் என்பதாகும். இதைத் தனித் தீர்வை என்றும் சொல்லலாம்.

## 52. தனித் தீர்வையைத் தவிர, வேறுவிதமான தீர்வையும் உண்டா?

உண்டு. உலக முடிவில், இறைவன் அனைத்துலக மக்களையும் ஒன்று சேர்த்து, சகலருக்கும் முன்பாக, அவரவர் செய்த பாவ புண்ணியங்களைப் பகிரங்கமாக அறியும்படிச் செய்து, நல்லவர்களைப் புகழ்ந்து ஆசீர்வதித்து, மோட்சத்துக்கும், கெட்டவர்களைச் சபித்து, நரகத்துக்கும் அனுப்பி வைப்பார். இது அனைவருக்கும் பொதுவாக நடைபெறும். ஆதலால் இதைப் பொதுத்தீர்வை என்று சொல்லலாம்.

## 53. பொதுத்தீர்வை எப்போது நடக்கும்?

உலக முடிவில் நடக்கும்; அதாவது உலகின்கண் வாழ்ந்த மக்கள் அனைவரும், இன்னும் மற்றுமுள்ள உயிர்ப் பிராணிகள் அனைத்தும் நெருப்பினால் அழிந்துபோகும். அதன்பிறகு, உலகத் துவக்க முதல், அழிந்த இறுதிநாள் வரை, பிறந்து இறந்த மக்கள் அனைவரையும், இறைவன் உயிர்ப்பித்துத் தீர்ப்பளிப்பார். நல்லவர்கள் தமது தாழ்ச்சியால் மறைந்து கிடந்த நன்மைத்தனத்தையும், தீயோர் தமது சூழ்ச்சியினால் மறைத்து வைத்திருந்த தீய குணத்தினால் விளைந்த தீமைகளையும், சகல மக்களுக்கும் தெளிவாகக் காட்டுவார் என்பது தேவ அறிக்கையின் உண்மைகளில் ஒன்று. தனித்தீர்வையில் அளிக்கப்பட்ட இடம், சம்பாவனை முதலியனமாறாவிடினும், இந்தத் தீர்வையில் நல்லோரின் மதிப்பு அனைவருக்கும் முன்பாக உயரவும், தீயோரின் இழிநிலை அதிக வெறுப்புள்ளதாகவும் வழியுண்டு அதாவது, வஞ்சக உலகில் நல்லோர் அடைந்த தாழ்வுக்கு ஈடு செய்யவும், தீயோர் அடைந்த பெருவாழ்வுக்கு பரிகாரமாகவும், நீதியே வடிவான இறைவனால் ஏற்படுத்தப்பட்ட நியதியே இந்தப் பொதுத்தீர்வை எனலாம். மேலும் நல்லோரை உயர்த்தவும், தீயோரைத் தாழ்த்தவும் இறைவன் கையாளும் நேர்மையான வழி இதுவே என்றும் கூறலாம்.

## 54. தனித்தீர்வை எப்போது நடக்கும்?

ஒவ்வொரு மனிதனுடைய ஆன்மா எனப்படும் உயிர், அவனுடைய உடலைவிட்டுப் பிரிந்து, அதை உயிரற்ற சவமாக ஆக்கும் அந்த க்ஷணத்திலே தனித்தீர்வை நடக்கும். உடலை விட்டு உயிர் பிரியும் நிலையையே சாவு அல்லது மரணம் என்கிறோம்.

## சாவு

### 55. பிறந்த மனிதன் ஏன் சாக வேண்டும்?

இறைவன் ஆதியில் மனிதனைப் படைத்தபோது அவனுக்கு சுபாவத்துக்கு மேலான சில சிறந்த வரங்களைக் கொடுத்திருந்தார் அவற்றுள் ஒன்று சாகாமை. அந்த வரங்களை அவன் இறைவனது கட்டளையை அனுசரித்தால் அப்படியே அனுபவித்து இருக்கலாம். இறைவனும் அவனுக்கு ஒரு எச்சரிக்கை கொடுத்திருந்தார். அவரது அந்த எச்சரிக்கையை மீறி அவன் நடந்தால் அவன் சாவான் என்றும் சொல்லியிருந்தார். ஆனால் ஆதிமனிதனே அதைப் பொருட்படுத்தாது, தேவ கட்டளையை மீறினதின் விளைவாக அவனுக்கு சாவு ஏற்பட்டது. எனவே, பிறப்புள்ள மனிதனுக்கு இறப்புண்டு என்பது தெய்வ நியதியாகிவிட்டது. இதிலிருந்து ஒருவரும் தப்பிவிட முடியாது.

### 56. எப்போது சாவு வரும்?

சாவு திருடனைப்போல் வரும் என்பது வேத வாக்கு. அதனால் யாருக்கு எப்போது சாவு வரும் என்று உறுதியாகக் கூற முடியாது. எந்தவிதமான சூழ்நிலை சாவுக்கு ஏற்றது அல்லது ஏற்காதது என்று திட்டவட்டமாகவும் சொல்ல முடியாது. ஏனெனில்:

(1) வயதில் முதிர்ந்தோர் இறத்தல் இயல்பு எனினும், எந்த வயதிலும், நிலையிலும் மரணம் வருதலைக் காண்கிறோம். பாலர், வாலர், விருத்தர் என்னும் வேறுபாடு சாவுக்கு இல்லை என்பதே நமது வாழ்வில் நாம் காணும் உண்மை.

(2) உடல் நிலை :— நோயுற்றோர், மரணத்துக்காக காத்திருக்கையில், நல்லுடல் பெற்றோர் திடீரென இவ்வுலக

வாழ்வை நீத்து மறைந்துவிடுதலும் உண்டு நெருப்பு, வெள்ளம், சண்டை, எதிர்பாராத ஆபத்து, விஷப்பூச்சி களின் கடி ஆகியவற்ருல் மரிப்பதும் சகஜமாயிருக்கிறது.

(3) **ஆன்ம நிலை :—** மனிதனின் கடைசிக் கதியான கடவுளை அடையும் நிலையில் இருப்பவர்கள்தான் இறத்தல் நல்லது. ஆனல் பொறுமையும், சகிப்புத்தன்மையும் நிறைந்துள்ள இறைவன், வாழ்நாளில் மனிதனுக்கு அநேக தவணைகள் கொடுத்து, தன்னைத்தானே சீர்திருத்திக்கொள் ளும் வாய்ப்பைத் தருகின்ருர். இது உண்மையே எனினும் நீதியின் திட்டப்படி, ஒருவனுடைய ஆன்மநிலை சரியான நிலையில் அமையும் வரை அவர் காத்திருப்பதாகத் தோன்ற வில்லை. பாவிகளையும், புண்ணியவான்களையும் பாரபட்ச மின்றி, குறித்த நேரத்தில் அழைக்கச் சித்தமாகிருர்.

(3) **சமூகத் தேவை :—** சமூக முன்னேற்றத்துக் காக ஒரு சிலருக்கு சிறந்த முறையில் சாமர்த்தியம், திறமை, முதலியவற்றைக் கொடுத்து அவர்களைப் பயன்படுத்திக் கொள்வதுபோல் தோன்றிடினும், அவர்களைக் குறிப்பிட்ட ஒரு சிலருக்காகவோ, அல்லது சமூகத்துக்கடுத்த அவசியத் துக்காகவோ தேவைப்படுவார் என்னும் காரணத்துடன் யாரையும் விட்டு வைப்பதில்லை. வல்லவரின் கையில் வந்த புல்லும் நல்லதோர் ஆயுதமாகும். எனவே, ஒருவர் போனல் இன்னெருவர் அந்த இடத்தை நிரப்புவார். ஆகையால் நேரம் வந்தபோது ஆன்மாவைப் பிரித்துவிடு கிருர்.

ஆகவே, எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒருவன் குறிப்பிட்ட வேளையில்தான் மரிப்பான் அல்லது மரிக்கமாட் டான் என்று சொல்ல முடியாது.

## 57. மரணத்துக்கு எவ்விதம் தயாராகலாம்?

மரணம் எந்த நேரத்திலும் வரலாம்; அதுவும் திடீரென திருடனைப்போல், நினையாத நேரத்தில் வரலாம். ஆனதால் அதற்கு எப்போதும் தயாராக இருப்பவனே புத்திசாலி.

(a) தன்னைப் பொறுத்தவரை தயாராக இருக்க வேண்டும். அதாவது. தனது ஐம்புலன்களையும் சரியான விதத்தில் உபயோகித்து, மனம், மொழி, செயல் இவற்றில் தூய்மையாக இருந்து நல்வாழ்வு வாழ முயற்சிக்க வேண்டும்.

(b) பிறரைப் பொறுத்தமட்டில்; பிறருக்கு எந்தவிதத்திலேனும் கடனாளியாகவோ, தின்மைசெய்யவோ எண்ணக் கூடாது. நம்மால் இயன்ற அளவில் முயன்று நன்மை செய்துவர வேண்டும்.

(c) கடவுளைப்பொறுத்தவரை :– நமது கதியும், இலட்சியமும் இறைவனேயாதலால், அவரது விருப்பத்தை நிறைவேற்றுவதில் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும். அவர் வெறுப்பதை நாமும் வெறுத்து, இறுதிவரையில் உறுதியுடன் நிலைத்திருக்கவேண்டும். அவருடைய சந்நிதியில் நாம் என்றும் இருப்பதாக எண்ணி, அவருடன் ஒருமை வாழ்வு கொண்டு நடக்கவேண்டும்.

## 58. தூய வாழ்க்கையுடையோரின் மரணம் எப்படி இருக்கும்?

'நல்ல ஜீவியம் நல்ல மரணம்'–என்பது போல, நமது ஜீவியம் எப்படி இருந்ததோ அப்படியே நமது மரணமும் இருக்கும். ஆன்மாவைப் பொறுத்தவரை நல்ல மரணமா என்று கணிப்பதுதான் முறை. ஏனெனில் சரீர உடலைப்

பொறுத்தவரை, அதாவது. ஆன்மா பிரியும்போது உடல் எந்த நிலையில் இருக்கிறது என நாம் கவலை கொள்ள வேண்டியதில்லை. கவலைப்பட்டும் பயனில்லை. ஆன்மா பிரியும் வேளையில் ஒருவரது சூழ்நிலையைப் பொறுத்து அவரது உடல் எந்த நிலையிலும் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, தொற்றுநோயால் பீடிக்கப்பட்டு, அல்லது விபத்தில் அகப்பட்டு உருமாறி பிறரால் கொடூரமாக வதைக்கப்பட்டு, தூக்கில் இடப்பட்டு, அல்லது சடுதி மரணமாக அருகில் ஒருவரும் இன்றி, இறந்து கிடக்கலாம். புதைக்க ஆளின்றி அந்தச் சடலம் அங்கேயே பலநாள் கிடந்து நாற்றமெடுக்கலாம். இதுவெல்லாம் கெட்ட மரணத்தின் அறிகுறியல்ல. அழியும் உடல் ஏதேனும் ஒருவிதத்தில் அழிய வேண்டியிருப்பதால் எந்த நிலையில் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால், மேலே சொன்னபடி மரணத்துக்குத் தன்னை தயாரித்துக்கொண்டிருந்த அந்த ஆளிடம் அல்லது மனிதனிடம், ஆன்மா பிரியும்போது;

(1) "ஐயோ! சாகப் போகிறேனே" —என்ற ஏக்கமும் கவலையும் இருக்காது. ஏனெனில் மோட்சம் போகுமுன், வெற்றிகொள்ள வேண்டிய சோதனைகளெல்லாம் முடிந்தது என்று மகிழ்ச்சி கொள்வான்.

(2) பழகிய பொருட்களை விட்டுப்போகிறேனே என்னும் வருத்தம் இருக்காது. ஏனெனில் மறுவுலகுக்கு இவ்வுலகப் பொருட்களால் எத்தகைய பயனுமில்லை என்று அறிந்திருப்பான்.

(3) உற்றார், உறவினர், நண்பர்களைவிட்டுப் பிரிகின்றேனே என்ற கவலை இருக்காது. ஏனெனில், அவர்களும் நன்முறையில் வாழ்ந்து, மரிப்பார்களாகில்; ஒரு நாள் மறுபடியும் சந்திப்போம் என்னும் உறுதி உண்டு.

(4) மக்களுக்கும், மற்றவர்களுக்கும் உதவாமல் போகிறோமே என்ற ஏக்கம் இருக்காது. ஏனெனில் தனக்கு இருந்ததுபோலவே அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக தேவபராமரிப்பு, நிச்சயமாக இருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

(5) தனது வாழ்நாள் முழுவதும் இறைவனுடன் ஒத்துழைத்து, அவருக்காகவே வாழ்ந்ததைப்பற்றி மனநிறைவும், அமைதியும் இருக்கும்.

(6) தன் வாழ்நாளில் எல்லாம் கடவுளை நம்பி செலவிட்டதால், அவரால் இப்போதும் கைவிடப்படாமல், மறு உலகில் தனக்கு நல்லதோர் இடம் இருக்குமென்ற முழு நம்பிக்கையும் இருக்கும்.

[7] உண்மைக்காகவும், உழைப்புக்காகவும், பிறரால் உபத்திரவப்படுத்தப்பட்டிருந்தால், தான் அனுபவித்த துன்பங்களைப் பற்றி மகிழ்ச்சிகொள்வான். ஏனெனில் மோட்சம் செல்லும் பாதை கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதை என்று அவனுக்குத் தெரியும்.

[8] மனித பலவீனத்தால் ஏதோ சில குற்றங்களைக் கட்டிக்கொண்டதாக நினைவிருப்பினும், அதற்காக மனக் கலக்கமடையாது, மனஸ்தாபப்பட்டு மன்னிப்பு கேட்பதைப் புதுப்பித்துக் கொண்டிருப்பான். ஏனெனில் தன் குற்றத்தை உணர்ந்து அதற்காக மனஸ்தாபப்படும் நேர்மையான ஆன்மாவை கடவுள் புறக்கணிக்கமாட்டார் என்று அவனுக்குத் தெரியும்.

(9] தனது வாழ்நாள் முழுவதும், தான் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மை, உபகாரங்களுக்கெல்லாம், தானே நேராகச் சென்று நன்றி கூறப்போவதற்காக துடித்துக்கொண்டிருப்பான்.

[10] இதுவரை விசுவாசத்தினுல் மட்டும் கண்டறிந்த தேவனை, முகமுகமாய்க் கண்டுகளிகூரப்போவதை எண்ணி அருகிலிருப்போரிடம், விரைவில் விடைபெற்றுச் செல்ல துரிதப்பட்டுக் கொண்டிருப்பான்.

## 59. கெட்ட மரணத்தின் அறிகுறிகள் யாவை?

ஆன்மாவில் ஆபத்தான நிலையை, வெளிக்கிரிகைகளிலிருந்து நமது அறிவினுல் உய்த்துணர்ந்த வரைக்கும் ஒருவனது மரணத்தின் தன்மையை நிர்ணயிக்கலாம். எப்படியெனில் :

[1] சாகப் பயப்படுவான் இவ்வுலக இன்ப சுகங்களை விட்டுப்போக மனமில்லாது தத்தளிப்பான். ஏனெனில் இவ்வுலக இன்பங்களையே அவன் பேரின்பமாக கருதியிருந்தான்.

[2] இவ்வுலகப் பொருட்களை விட்டுப்போக அஞ்சுவான். ஏனெனில் பிறர் இவற்றை எடுத்து அனுபவிக்கப் போகிருர்களே என்ற பொருமை இருக்கும்.

[3] தன்னை நம்பி இருப்பவர்களை விட்டுப் பிரிய மனம் சகியாது. ஏனெனில் தேவ பராமரிப்பில் இவனுக்கு நம்பிக்கை கிடையாது. தான் தான் அவர்களைக் காப்பாற்றுவதாக அகங்காரம் கொண்டவன்.

[4] நீதியுள்ள கடவுளின் முன் போய் நிற்கப் பயம். ஏனெனில், அவனுக்கு அவர் கொடுக்கப்போகும் தண்டனையைப் பற்றி ஓரளவு அறிந்திருப்பான்.

(5) மிதமிஞ்சின அவநம்பிக்கையில் அவதிப்படுவான் ஏனெனில். இறைவனின் இரக்கத்தை அவன் உணர்ந்தவனில்லை. ஆதலால் தான் கட்டிக்கொண்ட கணக்கற்ற

குற்றங்களுக்கு மன்னிப்பு இல்லையென்று எண்ணுபவன் மன்னிப்பு கிடைக்காது என்று எண்ணி, மனஸ்தாபப்படவு மாட்டான்; மன்னிப்பு கேட்கவுமாட்டான்

[6] தனக்கு தீங்கு செய்தவர்களை நினைத்து பழி வாங்காது போகிறோமே என்று கதறுவான், தீமை செய் தவர்களையும், அதை அனுமதித்த கடவுளையும் நிந்தித்துத் தூஷணிப்பான்.

[7] பகைவர்களுக்கு மன்னிப்பளிக்க மறுப்பான்.

[8] தன்னுடைய ஆன்மா நித்தியத்துக்கும், நீங்காத முடிவற்ற வேதனையை அனுபவிக்கும் என்பதை நினைத்து அவன் பிறந்த இடம், நேரம், பெற்றோர், சூழ்நிலை ஆகிய வற்றைச் சபிப்பான்.

## 60. மரணத்துக்குப் பின் ஆன்மாவின் நிலை யாது?

இறைவனின் சாயலாக உண்டாக்கப்பட்ட ஆன்மா எவ்விதத்திலும் அழியாதது ஆகும் எனவே, கடவுள் கடவுளாக இருக்கும் வரை அதாவது நித்தியத்துக்கும் ஏதோ ஓர் இடத்தில் மோட்சத்திலோ அல்லது நரகத் திலோ இருக்க வேண்டியது தான்!

## மறுமை வாழ்வு.

## 61. மோட்சம் என்றால் என்ன?

உலகில் தேவ கட்டளைப்படி தன் வாழ்நாளைக் கழித்து, மனித பலவீனத்தால் கட்டிக்கொண்ட குற்றங்களுக்கு முழு மன்னிப்பு அடைந்து, நல்ல மரணமெய்தி மறுமையடைந்த

ஆன்மா, நித்தியத்துக்கும் இறைவனை முகமுகமாய்தரிசித்து பேரின்ப பாக்கியம் அனுபவிக்கும் இடமே மோட்சம் எனப் படும். தேவ தூதர்களும், புனிதர்களும் வசிக்கும் இடம். நல்லோர் அனைவரும், பொதுத் தீர்வைக்குப் பிறகு தங்கள் உயிர்த்த சரீரத்துடனும் ஆத்துமத்துடனும் கூடி நித்தியத் துக்கும் இறைவனை முகமுகமாய் தரிசித்து பேரின்ப பாக்கி யத்துடன் வாழுமிடம். கண்டும், கேட்டும் சலிப்புத்தட்டாத முடிவில்லா மகிழ்ச்சியளிக்கக்கூடிய காட்சிகள் நிறைந்த இடம். மனித இதயம் விரும்பும் அனைத்தையும் அளித்து, மன நிறைவை அளிக்கும் நிலை. எத்தகைய சிறிய தீமை முதலாய் அணுகமுடியாத பாதுகாப்புள்ள அரண் நமக்குக் கிடைத்துள்ள இந்தப் பேரின்பத்தை இழந்துவிடுவோமோ என்ற பயமற்ற இடம் மோட்சம்.

## 62. மோட்ச பேரின்ப பாக்கியம் முக்கியமாய் எதில் அடங்கியிருக்கிறது ?

[1] இறைவனை நேருக்கு நேராகக் கண்டு, அவரது உண்மையான குணநிசயங்களைக் கண்டு மகிழ்வோம். உடன் இருப்பவர்களையும் அடையாளம்கண்டு அளவளாவி மகிழலாம்.

[2] இறைவனையும், அவரது குண இலட்சணங்களை யும் பார்த்து அனுபவித்துப் போற்றி மகிழ்வோம் உள்ளம் நிறைந்த அன்புடன், ஆர்வத்துடன் அவரை நேசிப்போம். சிநேகிப்பது ஒன்று மட்டுமே இறைவனை சுகிக்கும் நிலையாக இருக்கும். இதுவே மோட்ச வாழ்வு !

## 63. மோட்ச பேரின்பம் அனைவருக்கும் ஒரே அள வான இன்பத்தை அழிக்குமா ?

பொதுத்தீர்வைக்குப் பின், இறைவனால் ஆசீர்வதிக்கப் பட்டு, மோட்சத்துக்கு அனுப்பப்பட்ட அனைவருக்கும் அங்கு

இடமுண்டு. இறைவனை முகமுகமாய்க் காணும் தேவதரிசனையும் உண்டு. ஆனால், உலகில் வாழும்போது ஒவ்வொருவரும் சம்பாதித்த புண்ணியங்களுக்குத் தக்கபடி மோட்சத்தில் அனுபவிக்கும் இன்பமும் வேறுபாடு உண்டு. மகிழ்ச்சியிலும், காட்சி இன்பத்திலும், ரசனையிலும், அளவு வேறுபாடு இருப்பது நியாயமே! ஆனால் இத்தகைய வேறுபாட்டை முன்னிட்டு, அவர்களுக்குள் பொறுமை, மனக்குறைவு போட்டி யாதும் இருக்காது.

## 64. நரகம் என்றால் என்ன?

இவ்வுலகில் வாழும்போது இறைவனை மறந்து, அவரது கட்டளைகளை மதித்து அனுசரியாது சிருஷ்டிப் பொருட்களின் மீது நாட்டமும் பற்றுதலும் கொண்டு, தம் மனம் போனபடி நடந்து, பாவத்தில் திளைத்து இறப்பதற்கு முன் கூட தமது தீய நடத்தையைக் குறித்து மனம் வருந்தி, இறைவனிடம் மன்னிப்பு கேட்டுப் பொறுத்தல் அடையாமல் சாகும் தீயவர்கள் போகும் இடம். பொதுத் தீர்வைக்குப் பின், இறைவனால் சபிக்கப்பட்டு, நித்திய நரகத்தில் வேதனை அனுபவிக்க அனுப்பப்படுபவர்கள் இறைவனை முகமுகமாய் தரிசிக்கும் பேரின்ப பாக்கியத்தை இழந்து, நித்தியத்துக்கும் கெட்ட அரூபிகளாக பேய் பிசாசுகளுடன் கூடி வேதனை அனுபவிக்கும் இடம் ஆன்மாவையும், உடலையும் எரித்து சாம்பலாக நீத்துப்போக விடாது, எரித்துக்கொண்டே வதைசெய்யும் கொடிய நெருப்பு நிறைந்த வேதனை ஸ்தலமே நரகம். நீதியுள்ள கடவுள் தனது நீதிக்கு ஏற்ற வண்ணம், பாவிகளைத் தண்டிப்பதற்கென, நியமித்த நித்திய சிறைக்கூடம் தேவ கட்டளைக்கு விரோதமாக மனிதனின் ஐம்பொறிகள் திருப்தி காணத் தேடிய ஆபாசங்களின் அவலக்குரல் ஒலிக்கும் அசுத்த இடம், அவதியுறுவோரின் அழுகையும், பற்கடிப்பும் பழிச்சொல்லும், நிந்தையும், தூஷணமும் ஓயாது மாறி மாறிக் கேட்கும் இரைச்சல் கூடம் நரகம்!

## 65. பாவிகள் இங்கு அனுபவிக்கும் வேதனை என்ன?

[1] இறைவனையே தனது கடைசிக்கதியாக அடையும் படி உண்டாக்கப்பட்ட ஆன்மா, அக்கதியை அடையாது இழந்து தவிப்பது முக்கியமும் முதன்மையானதுமான வேதனையாகும். என்றேனும் ஒருநாள் தன் கதியை அடையலாம் என்ற நம்பிக்கை யாதும் இல்லாத நிலைமை. சிற்றின்பத்துக்கு ஆசைப்பட்டு, பேரின்பத்தை இழந்த அவல நிலையைப்பற்றிய ஆத்திரம் நிறைந்த வேதனை.

[2] ஐம்புலன்கள் அனுபவிக்கும் நெருப்பின் வேதனை.

[3] நரகமாகிய சபிக்கப்பட்ட இடத்தில் வாழும் கோர ரூபமான பாவிகள், பிசாசுகளின் மத்தியில் நித்தியத்துக்கும் இருக்கவேண்டிய வேதனை.

இந்த நரகவேதனையும் பாவங்களுக்குத்தக்கபடி அளவிலும், தரத்திலும் வேறுபடும்.

---

சென்னை-600 008
16441
Q:31
N65

# அனுதினம் சொல்லவேண்டிய ஜெபம்.

கருணாநிதியாகிய பரம கடவுளே! தேவரீர் என்தந்தை' நான் உமது பிள்ளை. தாயினும் பன்மடங்காய் என்னை நேசித்து சகல உபகாரங்களையும் பொழிந்துவரும் தேவரீரை நானும் நேசித்து என் மனமொழி மெய்களால் வணங்குகிறேன்.

என் பாவங்களால் நல்ல தந்தையாகிய உம்மை நான் மனம் நோகப் பண்ணினபடியால் உளம் கசிந்து மனஸ்தாபப்படுகிறேன். அவைகளைத் தேவரீர் மன்னிக்க வேண்டும்.

இன்று நான் எவ்விதத் தப்பிதத்திலும் கேட்டிலும் விழாதிருக்க தேவரீர் உதவி புரிவீராக, எனக்கு நல்ல சௌகரியத்தையும், அறிவையும் அளித்தருளும். என் தாய் தந்தை, சகோதர சகோதரிகளையும், சுற்றத்தார், ஆசிரியர் உபகாரிகளையும் காப்பாற்றும்.

நான் இவவுலகில் புனிதமாய் ஜீவித்து, மறு உலகில் பரம்பொருளாகிய உமது பொற்பாத கமலங்களை அடைந்து, என்றும் உம்மை ஏற்றி மகிழ அருள்புரிய வேண்டும்.

★

சொர்ணு பிரிண்டர்ஸ், 3, இருதயபுரம். திருச்சி—1.



6A
11-H



"நாமே உயிர்
நாமே ஒளி
நாமே வழி"

— சேசு மகான்

சொர்ணா பிரிண்டர்ஸ், 3, இருதயபுரம், திருச்சி—1.